# श्री सत्याषाढ गृह्य सूत्र प्रयोगः

[ द्वितीयो भागः ]

# ஸ்ரீ ஸத்யாஷாட க்ருஹ்ய ஸூத்ர ப்ரயோகம்

[ இரண்டாம் பாகம் ]

தொகுப்பாளர் :-
A. V. ராமநாத அய்யர், ஸாஹித்யரத்நா
மயிலாடுதுறை.

வெளியிட்டோர் :-
ஸ்ரீ ஸத்யாஷாட ஸூத்ர அநுஷ்டான ஸபா
கதிராமங்கலம் - 612 106

முதல் பதிப்பு 1990

புத்தகம் கிடைக்குமிடம் :

1. K. R. ஸ்ரீனிவாஸன்
ஸ்ரீ ஸத்யாஷாட ஸூத்ர அநுஷ்டான ஸபா,
1/74, பெருமாள் கோவில் தெரு,
கதிராமங்கலம்-612 106
தமிழ்நாடு

2. A. V. ராமநாத அய்யர்
8, வள்ளலார் இரட்டை தெரு,
மயிலாடுதுறை-609 001

தர்மப்ரசார விலை ரூ 30/-

அச்சிட்டோர் :
ரமணி ப்ரதர்ஸ், பிரிண்டர்ஸ்,
4, C. P. ராமசாமி ஐயர் தெரு,
அபிராமபுரம், சென்னை-600 018.



நடுக்காவேரி
ஸ்ரீ சௌந்தர நாயகி அம்பாள்
ஸமேத ஸ்ரீ ஹரிப்ரம்ஹேஸ்வரர்
திருக்கோயிலில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ள
ஸ்ரீ ஸத்யாஷாட மகருஷி

॥ श्रीः ॥

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकर भगवत्पादप्रतिष्ठित
कांची कामकोटि पीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्र सरस्वती श्रीपादादेशानुसारेण
श्रीमज्जयेन्द्रसरस्वतीश्रीपादैः क्रियते नारायणस्मृतिः।

अस्माकमैहिकामुष्मिकप्रेयःश्रेयोलाभाय मूलकारणं शास्त्रविहितस्वस्वकर्मानुष्ठानमेवेति श्रुतिस्मृत्यभ्युपगतः सिद्धान्तः। 'स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः' इति श्रीभगवद्गीता।

श्रुतिस्मृतिवाक्यात्मकप्रमाणमूलकत्वेन आपस्तम्ब-सत्याषाढादिमुनिभिः श्रौत-गृह्यादिसूत्राणि विरचितानि। आपस्तम्बगृह्यसूत्रानुसारिकर्मप्रयोगबोधकग्रन्थाः बहुलाः उपलभ्यन्ते। किन्तु दक्षिणप्रान्ते सत्याषाढसूत्रानुसारिणां न्यूनसंख्याकत्वात् एतत्सूत्रमूलकग्रन्थाः दुर्लभाः विद्यन्ते।

एतां स्थितिं विलोक्य एतत्सूत्रानुसारिप्रयोगग्रन्थप्रकाशने बद्धश्रद्धैः मायूरक्षेत्राभिजनश्री. अ. वै. रामनाथार्यप्रमुखैः सत्याषाढप्रचारसभायाः निर्वाहकैः अधुना प्रथमतया सन्ध्यानुष्ठानोपाकर्मश्राद्धादिप्रयोगघटितो भागः प्रकाश्यते इति विदित्वा मोदामहे।

सत्याषाढसूत्रीयाः एतद्ग्रन्थसाहाय्येन स्वकर्माण्याचरन्तः भगवदनुग्रहात् प्रेयःश्रेयःपरम्पराः अवाप्नुयुरित्याशास्महे।

नारायणस्मृतिः

यात्रास्थानम् - कर्नूल् (आन्ध्रप्रदेशः
रुधिरोद्गारि सं० आश्विन शुद्ध दशमी

# ஸ்ரீ ஸத்யாஷாட
# க்ருஹ்ய ஸூத்ர ப்ரயோகம்
[இரண்டாம் பாகம்]

# அறிமுகம்

அன்புடையீர் :
அநேக நமஸ்காரங்கள்.

ஸ்ரீ ஸத்யாஷாட ஸூத்ர அநுஷ்டான ஸபையினரால் 1983ம் ஆண்டு டிஸம்பர் மாதம் ஸ்ரீ ஸத்யாஷாட ஸூத்ர ப்ரயோகம் முதல் பாகம் அச்சிட்டு வெளியிடப்பட்டது. எல்லோரும் கர்மாக்களை விடாமல் ச்ரத்தையுடன் செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு முதல் பாகம் புஸ்தகத்தின் அடக்க விலை ரூபாய் 14.00 இருந்த போதிலும் பிரதி ஒன்று ரூபாய் 7.0' க்கு விநியோகிக்கப்பட்டது தாங்கள் அறிவீர்கள். தங்களது ஒத்துழைப்பினால் அப் புத்தகம் உடனடியாகவே நம்மில் பலரால் வாங்கப்பட்டு விட்டது. தற்பொழுது மிக சொல்ப பிரதிகளே கைவசம் உள்ள நிலை. மேலும் புத்தகத்தை விரும்பி கேட்கும் பலருக்கும் உதவி செய்ய முடியுமோ என ஐயப்பாடு. மறுமுறை அச்சிடப்பட வேண்டுமோ என்ற யோஜனையும் எழுகிறது.

இதனிடையே முதல்பாக அறிமுகத்தில் ஸபையினரால் உறுதியளிக்கப்பட்ட ஸத்யாஷாட க்ருஹ்ய ஸூத்ரப்பிரயோகம், இரண்டாவது பாகம்-பூர்வ பாகம் முழுமையும் அடங்கியது தற்பொழுது ஸபையினரால் வெளியிடப்படுவது மகிழ்ச்சிக் குரிய விஷயமாகும்.

முதல் பாகம் அச்சிட்டு வழங்க சென்னை ப்ரம்ஹலீன் தர்மாத்மா வைத்ய ஸுப்ரமண்ய அய்யர் அவர்கள் ஒருவரே நன்கொடை அளித்து உதவி செய்ததால் நிதிப்ரச்னை அப்பொழுது எழவில்லை. இந்த இரண்டாம் பாகம் அச்சிட்டு வெளியிட நமது ஸமூகத்தினரே தமக்குள் நிதி திரட்டி புத்தகம் வெளியிட உதவி இருக்கிறார்கள். இந்த செய்கையால் நமக்கு புலப்படுவது நமது ஸமூகத்தினரிடையே உள்ள கட்டுப்பாடும் ஸமூக வாழ்வில் உள்ள நல்லெண்ணமும், ஒருமைப்பாடும், பின் தலைமுறையினருக்கான தங்களது கடமை உணர்ச்சியுமே ஆகும் இந்நற்பணியை செய்துள்ள ஸமூகத்தினருக்கு இச்சபை மிகவும்

கடமைப பட்டிருக்கிறது. நன்றி தெரிவிக்கும் வகையில் நன்கொடை அளித்தவர்களின் பட்டியல் இப்புத்தகத்தில் இடம் பெறுகிறது.

ஸ்ரீ ஸத்யாஷாட க்ருஹ்ய ஸூத்ரப்ரயோகம் முதல் பாகத்தை தயாரித்து உதவிய ப்ரம்ஹஸ்ரீ ஏ. வி. ராமநாத அய்யர் அவர்கள் இந்த ஸ்ரீ ஸத்யஷாட க்ருஹ்ய ஸூத்ர ப்ரயோகம் இரண்டாவது பாகத்தையும் மிகுந்த ப்ரயாஸையின் பேரில் தயாரித்து உதவியுள்ளார்கள். அவர்கள் இந்த இரண்டாவது பாகத்தில் பூர்வ ஸம்ஸ்காரங்கள் அனைத்தையும் ப்ரயோகத்துடன் எழுதி தயாரித்துள்ளார்கள். க்ருஹ்ய ஸூத்ரம் காரிகை இரண்டும் தனித் தனியாக உள்ளதை இணைக்கவும் விஷயங்களை நன்கு தெளிவாக ஆக்கவும் அவர் பல புஸ்தகங்களை ஆராய்ந்தும் பல வேத சாஸ்திர வித்வான்களையும், கர்மாக்களைநன்கு செய்து வைக்கும் உபாத்யாயர்களையும் குறிப்பாக நல்லாடை ப்ரும்ஹஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் அவர்கள், ஆந்தகுடி ப்ரம்ஹஸ்ரீ A. N. கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகள் அவர்களையும் கலந்து ஆலோசித்து, விவாதித்து இந்த ப்ரயோகத் தொகுப்பை தேவ நாகரி, தமிழ்லிபி இரண்டிலும் எழுதி ஸபையினருக்கும், ஸமூகத்தினருக்கும் ஒரு சாச்வதமான உதவியை செய்திருக்கிறார்கள். மேலும் அவ்வொப்போது அச்சுக் கோர்வைகளை ஸரிபார்த்து திருத்திக் கொடுத்தும் உதவி இருக்கிறார்கள்.

இப்படி ஒரு சாச்வதமான பரமோபகாரத்தை செய்தவர்களான ப்ரம்ஹஸ்ரீ ஏ.வி. ராமநாத அய்யர் அவர்களுக்கு நாம் செய்யக்கூடிய க்ருதக்ஞதையானது இப்புத்தகத்தை கையிலெடுக்கும் காலமெல்லாம் நாமும், நமது ஸந்ததியார்களும் மற்றும் நமது ஸமூகத்தார்களும் அவர்களுடைய நினைவாகவே இருக்கிறோம் என்பதுதான். அவர்களுக்கு ஸமூகத்தினரும், அமைப்பாளர்களும், நமது ஸபையினரும் எண்ணிலடங்கா வந்தனங்களை சமர்ப்பிக்கிறோம். அவர்கள் ஸ்ரீ பரமேச்வர அவதார பூதர்களான ஸ்ரீ பகவான் ஸத்யாஷாட மகரிஷிகளுடைய அனுக்ரஹத்தாலும், ஸ்ரீ மஹாவிஷ்ணு அவ்தார பூதர்களான நடுக்காவேரி ப்ரம்ஹலீன் கு. ஸ்ரீநிவாஸ தீக்ஷதரவர்களின் ஆசீர்வாதங்களினாலும் அஷ்ட ஐச்வரியத்துடன் நீண்டநாள் ஜீவித்து மேன்மேலும் பல கிடைத்தற்கரிய புத்தகங்களை வெளியிட எல்லாம் வல்ல ஸ்ரீ ஸாம்ப பரமேச்வரனை ப்ரார்த்திப்போமாக !



குருஸேவா ரத்னம் V. T. ராஜன் அவர்கள் நமது ஸபையின் முதல் வெளியீட்டை சிறந்த முறையில் குறைந்த செலவில் தனது அச்சகத்தில் அச்சிட்டு உதவிசெய்துள்ளார்கள். மிகுந்த உற்சாகத்துடன் அதைவிட சிறந்த முறையில் இந்த இரண்டாம் பாகத்தையும் தகுந்த யோஜனைகளைக்கூறி உருவாக்கித்தர ஏற்றுக்கொண்டிருந்த அப்பெருந்தகையினரை திடீரென அகாலத்தில் ஈசுவரன் தனது அடிநிழலில் மீளா இடமளித்து ஏற்றுக்கொண்டு விட்டார் ! V. T. ராஜன் அவர்களின் திடீர் மறைவு நமது ஸபையின் பணிக்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பேயாகும் ! எனினும் அவர்களால் மேன்மையான திறமை மிகுந்த பயிற்சி அளிக்கப்பட்டு தங்களை தகுதியாக்கிக் கொண்ட அன்னாரது செல்வ குமாரர்கள் ஸ்ரீ T. V. ரமணி, ஸ்ரீ சந்த்ர மௌலி இருவரும் அவரது நோக்கத்தை அனுசரித்து இந்த தொகுப்பை நேரிய முறையில் மிகக்குறுகிய கால அளவில், தேவநாகரி, தமிழ் லிபி இரண்டிலும் அச்சிடும் ச்ரமத்தையும் பாராட்டாமல் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். பாராட்டுதலுக்குரிய இச் சீரிய பணியை பூர்த்தி செய்து கொடுத்திருக்கும் இளம் வயதினரான சகோதரர்களிருவரும் மேலும் மேலும் இது போன்ற சாஸ்திர அனுஷ்டானத்திற்கு உதவக்கூடிய பல நல்ல புத்தகங்களை அச்சிட்டு அச்சகத்தின் ஸ்தாபகராகிய ப்ரம்ஹலீன் ராஜன் அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றவும் ஸ்தாபனத்தின் வருங்கால மகோன்னத வளர்ச்சிக்கும் காரணவான்களாக விளங்க வேண்டுமெனவும் ஸ்ரீ ஸத்யாஷாட மகரிஷியின் பரமானுக்ரஹத்தை அப்யர்த்திக்கிறோம் !

தங்கள்

ஆஸ்தீகசெம்மல்

**கே. ஆர் ஸ்ரீநிவாஸன்**

அங்கீகாரம் பெற்ற அமைப்பாளர்.

ஸ்ரீ ஸத்யாஷாட ஸூத்ர
அநுஷ்டான ஸபா,
கதிராமங்கலம்-612 106
தமிழ்நாடு.
1—9—90

श्री गु[illegible]ो नमः

## [illegible] : भूमिका

कनकांजलि[illegible]: कल्पसूत्र विधायिभि: ।
समलंकृत मूर्धानं सत्याष[illegible]मुपास्महे ॥

[illegible]பிர்முக்[illegible]ஸூத்ர விதாயிபி: ।
ஸ[illegible]க்ருத மூ[illegible]ாஸ்மஹே ॥

[illegible] தொட[illegible]து பாரத நாட்டில் வாழ்ந்து வந்த [illegible]ங்கள் மனதில் உழலும் சஞ்சலங்களை போக்கி [illegible] தூய்மை படுத்திக் கொண்டு ஸமூகத்தில் இணைந்து [illegible] வாழ்க்கை நடத்தி முடிவில் பகவத் ப்ராப்தியை அடைந்துள்[illegible]கள். இதற்காக அவர்கள் பல ஸம்ஸ்காரங்கள் மூலம் தங்களை புனிதமாக்கிக் கொண்டு வேதம் வழிவகுத்துத் தந்த பல நல்ல கர்மாக்களைச் செய்யும் தகுதியைப் பெற்றனர்.

ஸம்ஸ்காரம் என்னும் சொல் புனிதமாக்குவது, சுத்தப் படுத்துவது பண் படுத்துவது என்ற பொருளைத் தரும். நம்மில் ஒவ்வொருவரும் நன்கு சுத்தம் செய்யப்பட்டு நல்ல முறையில் அமைந்த நல்ல பொருளையே விரும்பி வாங்குகிறோம். அசுத்தமான, அழுக்கடைந்த ஸரியாக தயாரிக்கப்படாமலுள்ள எந்த பொருளையும் விரும்புவது கூட இல்லையல்லவா ? அதே போல அணிகலன்களுக்கு மெருகு போடுவது, ஆயுதங்களை தீட்டிக் கூராக்குவது பாத்திரங்களைத் துலக்கி சுத்தமாக்குவது வஸ்த்ரத்தைத் துவைத்து சுத்தமாக்குவது போன்று க்ருஹ்ய ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட பல ஸம்ஸ்காரங்கள் மூலம் பண் படுத்தப்பட்டவனே நல்லவனாகிறான். பல கர்மாக்கள் செய்யும் தகுதி பெறுகிறான். அவனையே ஸமூகம் விரும்புகிறது.

நம்மை நல்லவர்களாக்கும் உயர்ந்த நோக்கத்துடனேயே நமது ரிஷிகள் கருணை கூர்ந்து வேதங்களின் அடிப்படையில் ஸம்ஸ்காரங்கள் என்னென்ன, அவை செய்யப்பட வேண்டிய முறை—உபயோகப்படுத்த வேண்டிய வேத மந்த்ரங்கள் முதலிய



தொகுப்பாளர்
ஸ்ரீமான் A.V. ராமநாத அய்யர், ஸாஹித்யரத்நா
மயிலாடுதுறை.

வற்றை தெளிவாகத் தொகுத்துக் கூறி பல க்ருஹ்ய ஸூத்ரங்களையும்—காரிகைகளையும் செய்து உதவியிருக்கிறார்கள். அவற்றுள் நம்மால் அனுஸரிக்கப்பட்டு வரும் க்ருஷ்ண யஜுர் வேதத்திற்கு [தைத்திரீய சாகை] ஒன்பது க்ருஹ்ய ஸூத்ரங்கள் ஏற்பட்டுள்ளன. அவையாவன—போதாயனம்; பாரத்வாஜம்; ஆபஸ்தம்பம்; ஸத்யாஷாடம்; வைகாநஸம்; ஆக்நிவேச்யம்; மானவம்; காடகம்: வாராஹம்.

இந்த க்ருஹ்ய ஸூத்ரங்களின்படி செய்ய வேண்டிய ஸம்ஸ்காரங்கள் பத்து என்றும், பதினைந்து என்றும் இருபத்தைந்து என்றும், நாற்பது என்றும் அபிப்ராய பேதங்கள் பல உள்ளன. எனினும் தற்பொழுது ப்ரபலமாக பழக்கத்தில் உள்ளது 'தசகர்ம பத்ததி' 'दश कर्म पद्धति' ஆகும். இதன்படி நாம் செய்து வரும் ஸம்ஸ்கார கர்மாக்கள்—ஜாதகர்மா; நாமகரணம் அந்ந ப்ராசநம்; சூடாகர்மா; உபநயநம்; வேதாரம்பம்; வேதோத்ர ஸர்ஜநம்; கேசாந்தம்—ஸமாவர்த்தநம் (ஸ்நாநம்); விவாஹம்—(அக்நி பரிக்ரஹம்); கர்பாதாநம்; பும்ஸவநம்; ஸீமந்தம்.

இவற்றை முறையே செய்ய வேண்டிய காலத்தையும் நிர்ணயித்து சாஸ்த்ரகாரர் கூறியிருக்கிறார்கள்.

गर्भाधानमृतौ पुंसः सवनं स्पन्दनात् पुरा ।
षष्ठेऽष्टमे वा सीमन्तः प्रसवे जातकर्म च ॥
अहनि द्वादशे नाम चतुर्थे मासि निष्क्रमः ।
षष्ठेऽन्न प्राशनं मासि चूडाकर्म यथाकुलम् ॥
गर्भाष्टमेऽब्दे कुर्वीत ब्राह्मणस्योपनयनम् ।
राज्ञामेकादशे सैके विशामेके यथाकुलम् ॥
समावर्तनमेतत्तु वेदाध्ययनकोत्तरम् ।
विवाहः समये कार्यः सर्वेषां च यथेष्यते ॥

எப்பொழுது ஸ்த்ரீகள் ருதுவாகிறார்களோ அப்பொழுது அதன் நாலாவது நாள் முதல் பதினாறு இரவுகளில் ஒன்றில் கர்பாதாந ஸம்ஸ்காரம் செய்யப்படவேண்டும். மூன்றாவது மாதத்தில் பும்ஸவநம், செய்வதால் பலன் புத்ரன் உண்டாகிறான் ஆறாவது / எட்டாவது மாதத்தில் செய்ய வேண்டியது ஸீமந்தம் குழந்தை பிறந்தவுடன் செய்யப்படுவது ஜாதகர்மா. பிறந்த தினத்திலிருந்து பனிரண்டாவது நாள் நாமகரணம் செய்வித்தல வசியம். பிறந்ததிலிருந்து ஆறாவது மாதத்தில் அந்நப்ராசநம் செய்விக்க வேண்டும். சூடாகர்மா—முடிவைப்பது—பிறந்ததிலிருந்து மூன்றாவது வருஷத்தில் செய்யப் படவேண்டியது. கர்பத்திலிருந்தோ—பிறந்ததிலிருந்தோ எட்டாவது வருஷத்தில் ப்ராம்ஹணனுக்கும் பதினோராவது வருஷத்தில் க்ஷத்ரியனுக்கும் பனிரெண்டாவது வருஷத்தில் வைச்யனுக்கும் உபநயந ஸம்ஸ்காரம் செய்யப்பட வேண்டும். இந்த ஸம்ஸ்காரத்தால் குழந்தை வேதம் கற்க தகுதியுடையவனாகிறான். உபநயந ஸம்ஸ்காரம் பதினாறாவது வயதுக்குள்ளாவது செய்யப்படாவிட்டால் பிறகு செய்தும் பலனில்லை, எனக் கூறப் படுகிறது. வேதாத்யயநம் பூர்த்தியானதும் ஸமாவர்த்தன ஸம்ஸ்காரம் செய்யப்படுகிறது இதற்கு ஸ்நாநம் என்ற பெயரும் உண்டு. இதனால் ஸம்ஸ்கரிக்கப் பட்டவனை ஸநாதகன் என அழைப்பார்கள். பத்தாவது ஸம்ஸ்காரம் விவாஹம். இது குல வழக்கப்படியோ தனது இச்சைப் படியோ செய்து கொள்ள வேண்டிய ஸம்ஸ்காரமாகும்.

இவ்விதம் ஸம்ஸ்காரங்களால் புனிதமாக்கப்பட்ட ஒருவன் தான் பிறக்கும் பொழுதிலிருந்தே கூட கொண்டுவந்த மூன்று கடன்களையும் தீர்த்து விமோசனம் அடைய தன்னை தகுதியாக்கிக் கொள்ளுகிறான் என்பது வேதத்தின் கூற்று.

“ जायमामो वै ब्रह्मणस्त्रिभिर्ऋणवा जायते ।
ब्रह्मचर्येण ऋषिभ्यो यज्ञेन देवेभ्यः प्रजया पितृभ्यः ।
एषवा अनृणो यः पुत्री यज्वा ब्रह्मचारिवासि ” ॥
[ க்ருஷ்ண யஜுர் வேதம்—6-3-10-13 ].



“ஒருவன் ப்ரம்ஹசர்ய வ்ருதமிருந்து வேத அத்யயநம் செய்வது மூலம் தனது ருஷிகளுக்குரிய ருணத்தையும், யஜ்ஞங்கள் செய்வதன் மூலம் தனது தேவருணத்தையும், விவாஹம் செய்து கொண்டு புத்ரபௌத்ரர்களை அடைவதால் பித்ரு ருணத்தையும் தீர்த்து தன்னுடன் பிறக்கும் பொழுதே கொண்டு வந்த மூன்று கடன்களினின்றும் விடுபடுகிறான்”.

மேலே கூறப்பட்ட பெருமைகளை உடைய ஸம்ஸ்காரங்களை செய்ய உதவும் க்ருஹ்ய ஸூத்ரங்களில் ஒன்றாகிய ஸ்த்யாஷாட க்ருஹ்ய ஸூத்ரம் நம்மவரால் பின்பற்றப்படும் ஸூத்ரமாகிறது. இந்த க்ருஹ்ய ஸூத்ரத்தில் சொல்லிய உபாகர்மா-உத்ஸர்ஜனம்; அக்நிகார்யம்; ஸ்தாலீபாகம் ச்ராத்தம் போன்றவை “ஸத்யாஷாடா ஸூத்ர ப்ரயோகம்”—முதல்பாகம் என்ற தொகுப்பாக 1983 வருஷம் வெளியிடப்பட்டதை எல்லோரும் அறிவார்கள். ஸ்ரீ ஸத்யாஷாட க்ருஹ்ய ஸூத்ரத்தின் பூர்வபாகமாகிய இரண்டாவது தொகுப்பு இப்பொழுது வெளியிடப்படுகிறது.

இந்த ப்ரயோக புத்தகத்தை ஸத்யாஷாட ஸூத்ரத்தை பின்பற்றும் ஒவ்வொருவரும் வாங்கி அதில் கூறப்பட்டபடி ஸம்ஸ்காரங்களை செய்துவைக்கச் சொல்லி பயன் அடைவதுடன் நமது ஸூத்ர ரிஷிக்கு நமது கருதக்ஞதையை செலுத்தியவர்களாகவும் ஆகிறோம் என்பதை ஸமூகத்தினருக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

॥ सर्वे जनाः सुखिनो भवन्तु ॥

‘ஸ்ரீலக்ஷ்மி’
8, வள்ளலார் இரட்டைத் தெரு. A. V. ராமநாத அய்யர்.
மயிலாடுதுறை–609001.
1—1—1990

—○—

அட்டவணை:


| நெம்பர் | விஷயம் | பக்கம் |
| --- | --- | --- |
| | பரிபாஷா—பொது விதிகள் | 1 |
| 1 | ஜாத கர்ம ப்ரயோகம் | 9 |
| 2 | மேதா ஜநநம் | 11 |
| 3 | நாமகரணம் | 12 |
| 4 | அந்ந ப்ராசநம் | 16 |
| 5 | ஆயுர்வர்தாபந விதி: | 18 |
| 6 | சூடாகரணம் | 19 |
| 7 | உபநயநம் | 21 |
| 8 | ஸாவித்ரீ க்ரஹணம் | 28 |
| 9 | சதுர்த்த திவஸ க்ருத்யம் | 35 |
| 10 | வேத வ்ரதோபாகரண ப்ரயோக: | 36 |
| 11 | வேத வ்ரத உத்ஸர்ஜநம் | 37 |
| 12 | சுக்ரிய வ்ரதோபாகரணம் | 38 |
| 13 | சுக்ரிய வ்ரத உத்ஸர்ஜநம் | 41 |
| 14 | ஸமாவர்த்தநம் | 41 |
| 15 | மது பர்க: | 47 |
| 16 | கந்யா வரணம்-வாக்தாநம் | 51 |
| 17 | வரஸ்ய வதூக்ரஹ கமநம் | 53 |
| 18 | மதுபர்கேண வரஸ்ய பூஜா | 53 |
| 19 | கந்யாதாநம் | 54 |
| 20 | மாங்கல்ய தாரணம் | 56 |
| 21 | விவாஹ ஹோமம் | 57 |
| 22 | பாணிக்ரஹணம் | 59 |
| 23 | லாஜ ஹோமம் | 60 |

24 ஸப்தபதி 61
25 க்ரஹப்ரவேசம் 62
26 க்ரஹப்ரவேச ஸ்தாலீபாகம் 65
27 ஔபாஸந ஹோமம் 67
28 த்ரிராத்ரீ வ்ருதம் 68
29 சதுர்த்ததிந சேஷஹோமம் 69
30 தர்ச பூர்ணமாஸ ஸ்தாலீபாகம் 72
31 ருதுசாந்தி 73
32 கர்பாதாநம் 76
33 பும்ஸவநம் 78
34 ஸீமந்தோந்நயநம் 80
35 ஸூகப்ரஸவமாக 82

—o—



# பரிபாஷா—பொது விதிகள்

ஒவ்வொரு க்ருஹஸ்தனும் தான் செய்ய வேண்டிய ஸ்மார்த்த கர்மாக்களை நல்ல முறையில் செய்து அதனால் நல்ல பலனை அடைய வேண்டியதற்காக அவன் கடைபிடிக்க வேண்டிய பொதுவிதிகள் இங்கு சுருக்கமாக கூறப்படுகிறது.

ஸ்னானம் செய்து சுத்த வஸ்த்ரம் தரித்து திலகம் அணிந்து யஜ்ஞோபவீதம், பவித்ரம் [தர்பையால் ஆனது] தரித்து ச்ரத்தையுடன் ஸகல கர்மாக்களையும் செய்ய வேண்டும்.

தன்னை நன்கு அலங்காரம் செய்து கொண்டு ஏகாக்ர சிந்தனையுடன் மௌனியாக அகங்காரம் அஸூயைகளை விட்டுவிட்டு ஆபத்காலமானாலும் சரீர சுத்தியுடன் கூட கர்மாக்களை செய்ய வேண்டும்.

ஜபம் ஹோமம் முதலியவை செய்யப் படும்பொழுது அகாரணமாக மற்றவரை தொடக்கூடாது. ஞாபகமின்றி தொட நேர்ந்தால் ஒரு ப்ராணாயாமம் செய்து சுத்தி செய்துகொள்ள வேண்டும். தெரிந்து வேண்டுமென தொட்டுவிட்டால் மூன்று முறை ப்ராணாயாமம் செய்வதால் சுத்தி ஏற்படுகிறது. வேறு ஜாதியினரை தொட நேரிட்டால் ஸ்னானமே செய்ய வேண்டும்.

சிகையின்றியோ—உபவீதமின்றியோ செய்யப்படும் எந்த கர்மாவும் அவனால் செய்யப்பட்டதாக ஆகாது. அது நிஷ்பலனையே தரும் என்று கூறப்படுவதால்

வழுக்கை முதலிய காரணங்களாலோ, வேறு நவீன பழக்கங்களாலோ ஒருவர் சிகையின்றி (குடுமி) இருந்தால் கர்மா செய்யப்படும் காலங்களில் ஏழு தர்பைகளால் ஆன ப்ரம்ஹக்ரந்தி போட்ட பவித்ரத்தை தனது வலது காதின்மேல் செறுகிக் கொண்டு கர்மாக்களை செய்ய வேண்டும்.

கர்மா செய்பவன் இரண்டு வஸ்த்ரங்களை அணிந்தவனாகவும் திலகமணிந்தவனாகவும் இருக்க வேண்டும். ஒரு பொழுதும் வஸ்த்ரமின்றி கர்மா செய்யக் கூடாது.

தீவிலும் திறந்தவெளியிலும் எந்த கர்மாவும் செய்யப் படக் கூடாது அஸுசியாக உள்ள காலங்களில் வேதம் சாஸ்திரம் இவற்றால் விதிக்கப் பட்ட எந்த கார்யத்தையும் செய்யக்கூடாது.

தானம் செய்யும்பொழுதும், வாங்கும் பொழுதும் ஹோமம் செய்யும் பொழுதும், பலிபோடும் பொழுதும் போஜனம் செய்யும் பொழுதும் வலதுகை கட்டைவிரலையும் சேர்த்துக் கொண்டுதான் செய்யவேண்டும். இல்லையேல் அது அஸுரர்களை சேரும் என்று கூறுகிறார்கள்.

கால்களை நீட்டிக் கொண்டோ, இடை இடையே கொட்டாவி விட்டுக்கொண்டோ எந்த கர்மாவையும் செய்யக் கூடாது.

கர்மாவின் ஆரம்ப காலத்தில் மூன்று ப்ராணாயாமம் செய்து பிறகே கர்மா ஆரம்பிக்கப் படவேண்டும்.

விதி அனுமதிக்கும் இடங்களைத் தவிர மற்ற கர்மாக்களை உபவாஸமிருந்து [ஆகாரம் செய்வதற்கு முன்னதாகவே] செய்ய வேண்டும்.



யந்திர சப்தம் பதிதர்கள் [கர்மாக்களை விட்டவர்கள்] வேறு ஜாதியினர் பேச்சுக்கள் காதில் விழும் படியான இடங்களிலும் ஸந்த்யா காலங்களிலும் எந்த கர்மாவும் செய்யப் படக் கூடாது.

கர்மா செய்ய ஆரம்பிக்குமுன் தேசம் காலம் இவற்றை கல்போக்தமாக சொல்லிக் கொண்டு கர்மா செய்யும் காரணத்தையும் கூறி நான் இந்த கர்மாவைச் செய்கிறேன் என்ற ஸங்கல்பத்தையும் கூறி கர்மாவை ப்ராம்ஹணர்களின் அனுக்ஞை பெற்று ஆரம்பிக்க வேண்டும்.

தான் செய்யும் ஒவ்வொரு கர்மாவையும் தனது ஸ்வஸூத்ரத்தில் சொல்லியபடியே தான் செய்ய வேண்டும். அப்படி செய்யாமல் தெரிந்து வேறு ஸூத்ரப்படி கர்மாக்கள் ஆரம்பித்து செய்யப்பட்டால் அவற்றை மறுபடியும் தனது ஸ்வஸூத்ரப்படி செய்தாலொழிய செய்தும் பலன் கிடைக்காமல் போய்விடும்.

ஒவ்வொரு கர்மாவிலும் ப்ரதானம் அங்கம் என்று இரண்டு உண்டு. ஒரு கர்மா செய்யும்பொழுது அதன் ப்ரதானம் செய்ய விட்டு விட்டு அங்கம் மட்டில் செய்யப் பட்டிருந்தால் மறுபடி கர்மாவை ஆரம்பித்து அங்கம் ப்ரதானம் இரண்டையும் முறையாக செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஆனால் ஒரு கர்மாவில் ப்ரதானம் செய்யப்பட்டு அங்கம் செய்யாமல் விடப்பட்டிருந்தால் அதற்குரிய ப்ராயச்சித்தம் மட்டில் செய்தால் போதும். மறுபடி கர்மா முழுவதும் செய்யப் படவேண்டாம்.

செய்யப்படும் ஒவ்வொரு கர்மாவும் கிழக்கு நோக்கி இருந்தே செய்யப் படவேண்டும். கிழக்கு என்று குறிப்பிட்டு சொல்லப்படாத இடங்களில் ஈசான்யம் மற்றும் வடக்கு திசை பார்த்தும் செய்யலாம்.

குனிந்தோ-நின்றோ இவ்விதம் தான் செய் வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லப்படாத வ கர்மாக்களை உட்கார்ந்த வண்ணமே செய்யவேண்டும்.

கர்த்தா எந்த அங்கத்திருல் செய்ய வேண்டும் எ சொல்லாத இடங்களில் வலது அங்கமே உபயோகிக்க படவேண்டும். நாபிக்கு கீழே உள்ள அங்கங்களை தொ அவசியமானால் இடது கையால்தான் தொடவேண்டு நாபிக்குமேலே உள்ள அங்கங்களை வலது கையால் தொ லாம். நாபி ப்ரதேசத்தை ஏதாவதொரு கையால் தொ லாம். விதிக்கப்பட்ட இடங்களில் தவிர கர்மா செய்யு பொழுது நாபியின் கீழே உள்ள ப்ரதேசங்களை தொடுவது என்பது ஆசாரத்தில் இல்லை. ரத்தம் புண் இவற்றை தொட நேர்ந்தால் ஸ்னானம் செய்ய வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

தேவதைகளைக் குறித்து செய்யப்படும் கர்மாக்கள் கிழக்கு திக்கிலே ஆரம்பிக்கப்பட்டு வடக்கு திக்கிலே முடிக்கப்பட வேண்டும். அல்லது வடக்கில் ஆரம்பித்து கிழக்கிலும் முடிக்கலாம். பித்ருக்களை குறித்து செய்ய படும் கர்மாக்கள் மேற்கு திக்கில் ஆரம்பிக்கப்பட்டு தெற்கு திசையில் முடிக்கப்பட வேண்டும் என்று ஸ்பஷ்டமான வசனங்கள் உள்ளன.

கர்மா செய்யும் காலத்தில் அவயவங்களை தொட நேர்ந்தாலோ, வஸ்த்ர நுனியை தொட்டாலோ, வெட்டுதல் எறிதல், பிளத்தல், தோண்டல் போன்றவை செய்ய பட்டாலோ, பித்ரு, ராக்ஷஸ, ரௌத்ர, நைருருத ஆபிசார கம் போன்ற இடங்களிலும், மேலும் இவை போன்ற மற்றவை ஏதாவது செய்யப்பட்டாலும் செய்த பிறகு அப உப ஸ்பருச்ய (தீர்த்தத்தை கையால் தொடுதல்) செய்த பிறகு மேலே கர்மாவை தொடர வேண்டும். இடையே



அபான வாயு பிரிந்தாலும், சிரித்தாலும், அழுதாலும், பொய் பேசப்பட்டாலும், கோபப்பட்டாலும், பூனை, எலி போன்றவற்றை தொடநேர்ந்தாலும் அவசியம் அப உப ஸ்பருச்ய செய்யப் படவேண்டும். கர்ம காலத்தில் தனது பின்புறம் வால் ப்ரதேசத்தை தொட நேர்ந்தால் ஸ்னானமே செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

தேவ கார்யங்களில் தர்ப்பை முதலியவற்றை வடக்கு பக்கத்தில் போட (எறிய) வேண்டும். பித்ரு கார்யங்களில் தெற்கு திக்கில் மட்டுமே என்பது ப்ரஸித்தமானது.

பரிஷேசனம் தேவதா கார்யங்களில் ப்ரதக்ஷிணமாகவும் பித்ரு கார்யங்களில் அப்ரதக்ஷிணமாகவுமே செய்யப்பட வேண்டும்.

யஜ்ஞோபவீதம்-தேவ கர்மாக்கள் செய்யப்படும் பொழுது உபவீதமாகவும் (வலது புறமாக) மனுஷ்ய கார்யங்கள் செய்யப்படும் பொழுது நிவீதமாகவும் (மாலை யாக) பித்ரு கார்யங்கள் செய்யப்படும்பொழுது ப்ராசீனா வீதமாகவும் (இடது புறமாக)—தரிக்கப்பட வேண்டும்.

ஹோமம், தானம், ச்ராத்தம், தேவதார்ச்சனம், ஆசமனம், போஜனம் போன்றவை செய்யப்படும் காலங் களில் இருகைகளையும் முழங்கால்களுக்கு இடையே தான் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஹோம காலங்களில் கர்த்தாவுக்கும் அக்நிக்கும் இடையே உள்ள ப்ரதேசத்தில் பாத்ரங்கள் ஆஜ்யம் ஹவிஸ் தர்வி போன்றவை வைத்துக்கொள்ளப் படவேண்டும்.

கர்மாக்களில் உபயோகிக்கப்படும் மந்த்ரங்களின் ஸ்வரங்களை அறியாதவர்கள் கர்மாக்களை செய்யும் பொழுது எல்லா மந்த்ரங்களும் ஏக ஸ்வரத்திலேயே

சொல்லப் படலாம். எல்லா மந்த்ரங்களையும் 'ஓம்' காரத்துடனேயே ஆரம்பிப்பது என்பது ஸூத்ரக்காரர் வாக்கு. ஹோம காலங்களில்—தேவதைகளை குறித்து சொல்லப்படும் மந்த்ரங்களின் முடிவில் ஸ்வாஹா என்றும் பித்ருக்களை குறித்து சொல்லப்படும் மந்த்ரங்களின் முடிவில் ஸ்வதா என்றும் சொல்லியே தான் ஆஹுதி செய்ய வேண்டும்.

கர்ம காலத்தில் உபயோகிக்கப்பட்டு மிகுந்த தீர்த்தத்தை தியாகம் செய்ய வேண்டும். ஆசமனம் செய்து மிகுந்த ஜலம், கால் அலம்பி மிகுந்த ஜலம் இவற்றைக் கொண்டு எதுவும் செய்யக் கூடாது.

உபநயனம், விவாஹம் போன்றவை லௌகீக அக்நியில் செய்யப்படவேண்டும். நாமகரணம். அன்னப்ராசனம் போன்ற கர்மாக்கள் க்ருஹ்யாக்நியில் (ஔபாஸன அக்நி) செய்ய வேண்டும், பிதா இன்றி மற்றவர்களால் இக் கர்மாக்கள் செய்யப்பட்டால் அப்பொழுது லௌகீகாக்நியில் செய்யப்படவேண்டும். ச்ராத்தம், ஸ்தாலீபாகம் போன்றவைக்கு க்ருஹ்யாக்நியே (ஔபாஸன அக்நி) உபயோகப்படுத்தப் படவேண்டும். ப்ராயசித்த கர்மாக்கள் காம்ய கர்மாக்களுக்கு ஔபாஸன அக்நி அல்லது லௌகீகாக்நி ஏதாவது ஒன்றை பயன் படுத்தலாம். உபாகர்மா உத்ஸர்ஜனம் போன்ற கர்மாக்களில் கர்த்தா தான் மட்டும் தனியாகச் செய்தால் ஔபாஸந அக்நியிலும் சிஷ்யர்களுடன் கூட சேர்ந்து செய்தால் லௌகீகாக்நியிலும் செய்ய வேண்டும்.

ஆஜ்யத்தால் ஹோமம் செய்ய ஸூத்ரத்தில் கூறப் பட்ட தர்விதான் உபயோகப் படுத்தப் படவேண்டும். த்ரவ்யம் க்ஷீரமாகவோ (பால்) ததியாகவோ (தயிர்) இருந்தால் ஸ்ருவம் அல்லது தர்வி உபயோகிக்கலாம்.



த்ரவ்யம் கடினமானதாக இருந்தால் கையால்கூட செய்யலாம். ஔபாஸந காலங்களில் த்ரவ்யம் கையால் மட்டுமே ஆஹுதி செய்யப்படவேண்டும். ஹோமத்திற்கு குறிப்பிட்டு எந்த த்ரவ்யமும் விதிக்கப்படாத இடங்களில் எல்லாம் ஆஜ்யமே த்ரவ்யமாக ஆகும்.

ஸமித்துக்கு அளவு எந்த இடங்களில் ப்ராதேச மாத்ரம் [ஒட்டை] என்று ஸூத்ரம் கூறுகிறதோ அவற்றை தவிர மற்ற இடங்களில் தன் இச்சைப்படி ஸமித்தின் அளவை வைத்து துண்டுகளாக்கி ஹோமம் செய்யலாம்.

தேவ கார்யங்களில் வெள்ளியை தக்ஷிணையாக கொடுப்பது ஸரியன்று. ஏனென்றால் அது ஸ்ரீருத்ரனின் கண்ணீரால் ஆனது. ஹோம காலங்களில் ப்ரம்ஹ தக்ஷிணைக்கு ஒரு 'கோ' (பசு) அல்லது அதன் ப்ரதிநிதியாக த்ரவ்யத்துடன் தேங்காயோ கொடுப்பது வேண்டும்.

ஹோமத்தில் உபயோகித்த சேஷ (பாக்கி) அன்னத்தை தேவ பூஜைக்கோ, தான் சாப்பிடுவதற்கோ உபயோகிக்க கூடாது.

எல்லா தர்ம கார்யங்கள் செய்யும் பொழுதும் பத்நியை தனது வலது புறம் வைத்துக் கொண்டு செய்ய வேண்டும். அபிஷேகம் செய்து கொள்ளும் பொழுதும் பெரியோர்களுக்கு பாத ப்ரக்ஷாளனம் செய்யும் காலங்களிலும் பத்நி கர்த்தாவின் இடது புறம் இருப்பாள்.

தப்பித் தவறி கால்பட்ட பாத்ரங்களை எப்பொழுதும் அலம்ப வேண்டும். பாத்ரங்களை சுத்தி செய்ய கேவலம் கையால் மட்டுமின்றி தர்பை புல் இலை வஸ்த்ரம் ஏதாவதொன்றையும் உபயோகிக்கலாம்.

தனது ஸ்வஸூத்ரத்தில் சொல்லப்பட்ட கர்மா செய்யும் முறை குறைவாகவோ அதிகமாகவோ இருந்தாலும் அதன்படியே செய்தால் சாஸ்த்ரப்படி எல்லாம் செய்யப்பட்டதாக ஆகும். வேறு ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட முறைப்படி கர்மா பூர்த்தியாக வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் விதிமுறைகளை கையாண்டு கர்மாக்களை நன்கு செய்தால் அவ்விடங்களில் பிறஸூத்ரவிதி கலந்து விட்டதென்ற தோஷம் ஸம்பவிக்காது.

க்ராம ஆசாரம்—எங்கள் ஊர் பழக்கம் என்று சொல்லி செய்யப்படும் கார்யங்கள் சாஸ்த்ர விரோதமாக இல்லையென்றால் ஒப்புக் கொள்ளப்படலாம். யுக தர்மத்தின்படி செய்வதானால் சாஸ்த்ரம், ஸூத்ரம் சொல்லியதற்கு வேறுபட்டதாக இருந்தாலும் ஒப்புக் கொள்ளப் படலாம்.

கர்த்தா தனது நிலைக்கு ஏற்றவாறுதான் கர்மாக்களுக்கு பணம் செலவு செய்ய வேண்டும். நல்ல செயல் உள்ளவர்கள் உத்தம பக்ஷதிட்டப்படிதான் செலவு செய்ய வேண்டும்.

இவை கர்மகாலங்களில் அனுஸரிக்க வேண்டிய கட்டாயமான பொது விதிகளாகும்.

—o—

## ॥ ஜாத கர்ம ப்ரயோகம் ॥

ஸ்ரீ: ॥ குழந்தை பிறந்தவுடன் பிதா தனது குல தேவதை முன்னோர்களை ஸ்மரித்து குழந்தையின் முகத்தைப் பார்த்து நதி-குளம் அல்லது குளிர்ந்த ஜலத்தில் வடக்கு முகமாக ஸ்னானம் செய்து சந்தனம் புஷ்பம் தரித்து கிழக்கு முகமாக உட்கார்ந்து ஆசமனம் ப்ராணாயாமம் செய்து தேசம் காலம் ப்ரார்த்தித்து—மம அஸ்ய குமாரஸ்ய கர்பாம்புபாந ஜநித ஸகல தோஷ நிபர்ஹண த்வாரா ஆயுர்வர்ச் சோபிவ்ருத்யர்த்தம் பீஜ கர்பஸமுத் பவைநோ நிபர்ஹண த்வாரா ஸ்ரீபரமேச்வர ப்ரீத்யர்த்தம் ஜாத கர்ம கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்து, ததங்கம் கணபதி பூஜனம் புண்யாஹவாசனம் நாந்தீ ச்ராத்தம் ச (ஹிரண்ய ரூபம்) கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்து யுக்தரீதியில் செய்ய வேண்டியது.

பிறகு அம்மியின்மேல் கோடலி ஹிரண்யம் வைத்து குழந்தையை அதன்மேல் கிழக்குமுகமாக தலை இருக்கச் செய்து-அச்மா பவ பரசுர் பவ ஹிண்யமஸ்த்ருதம் பவ। வேதோவை புத்ர நாமாஸி ஜீவத்வம் சரத: சதம்। அங்காதங்காத் ஸம்பவஸி ஹ்ருதயாததி ஜாயஸே। ஆத்மாவை புத்ர நாமாஸி ஸஜீவ சரத: சதம்-என்று சொல்லவும்.

கையில் கொஞ்சம் ஜலம் அக்ஷதை எடுத்து அக் குழந்தையின் தலையில் ப்ரோக்ஷணம் செய்யவும்-தில தேவ பத்யஸ்வ ந மாகும்ஸமஸி நோ தல மவ பத்ய ஸ்வஸ்யாத்-என்று।

கிழக்கு முகமாக உட்காந்து தேசம் காலம் ப்ரார்த்தித்து-அஸ்ய குமாரஸ்ய சண்டாமர்காதிரக்ஷோ கணேப்ய: ஸம்ரக்ஷணார்த்தம் ஸர்ஷப மிச்ரை: கணை: உத்தூபனம்

கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்து லௌஹிகாக்நியை வைத்துக் கொண்டு மௌனமாக பரிஷேசநம் செய்து கையினால் 11 ஆஹுதி செய்யவும்-இங்கு உத்தேச த்யாகம் இல்லை—ஓம் ஶண்டோ மர்க உபவீர: ஶாண்டிகேர உலூகல: । ச்யவநோ நச்யதாதித: ஸ்வாஹா ॥ ஆலிகந் விலிகந்ந நிமிஷந் கிம் வதந்த உபச்ருதி: ஸ்வாஹா ॥ அர்யம்ண: கும்பீஶத்ரு: பாத்ர பாணி: நிபுணி: ஸ்வாஹா ॥ ஆந்த்ரீமுக: ஸருஷபாருணோ நச்ய தாதித: ஸ்வாஹா ॥ கேசிநீச்வலோமிநீ பஜாபோஜோபகாசிநீ ॥ அபேத நச்யதாதித: ஸ்வாஹா ॥ கௌபேரகா விச்வ வாஸோ ரக்ஷோராஜேந ப்ரேஷிதா: । க்ராமாந்த்ஸஜாதயோயம்தீப்ஸந்த: பரிஜாக்ருதாந்த் ஸ்வாஹா ॥ ஏதாந்ஹதைதாந் பத்நீதேத்யயம் ப்ரம்ஹணோ தூதஸ்தாநக்னி: பர்யஸரத் । தாநிந்த்ரஸ்தாந் ப்ருஹஸ்பதிஸ்தாநஹம் வேத ப்ராம்ஹண: ப்ரம்ருசத: கூடதந்தாந் விகேசாந் லம்பஸ்தநாந் ஸ்வாஹா ॥ நக்தம் சாரிண உரஸ்பேசாஞ்சூல ஹஸ்தாந் கபலபாந் த்ஸ்வாஹா ॥ பூர்வ ஏஷாம் பிதேத்யுச்சை: ச்ராவ்ய கர்மக: ॥ மாதா ஜகன்யா கச்சந்தீ க்ராமே விகுரமிச்சந்தீ ஸ்வாஹா ॥ நக்தம் சாரிணீ ஸ்வஸா ஸந்திநா ப்ரேக்ஷ்யதே குலம்। யாஸ்வபத்ஸு ஜாகர்த்தி யஸ்யை விஜாதாயாம் மந: ஸ்வாஹா ॥ தாஸாம் த்வம் க்ருஷ்ண வர்த்மநே க்லோமாநகும் ஹ்ருதயம் யக்ருத் । ஸ்க்நேயக்ஷிணீ நிர்தஹஸ்வாஹா ॥ பிறகு கையை அலம்பிக் கொண்டு பூமியைத் தொட்டுச் சொல்ல வேண்டியது. ஓம்யத்தே ஸுஸீமே ஹ்ருதயம் திவிச் சந்த்ரமஸி ச்ரிதம் । தஸ்யாம்ருதத்வஸ்யநோ தேஹி மாஹக பௌத்ரமககும்ருதம் ॥ வேததே பூமி ஹ்ருதயம் திவி ச்சந்த்ரமஸி ச்ரிதம் ॥ ததாம்ருதத்வஸ்யேசாநோ மாஹம் பௌத்ரமககும்ருதம்-என்று ॥

—o—



## ॥ மேதா ஜநநம் ॥

பிதா தேசம் காலம் பிரார்த்தித்து-அஸ்ய குமாரஸ்ய தியோ தாரண அபிவ்ருத்யர்த்தம் மேதா ஜநநம் கரிஷ்யே-என்று ஸங்கல்பித்து, தர்பையில் ஹிரண்யம் கட்டி அதன் வழியாக குழந்தையின் தலையை கிழக்கு முகமாக வைத்து ஒவ்வொரு மந்த்ரமாகச் சொல்லி பசு நெய் ஊட்டவும்-ஓம் பூ: ருசஸ் த்வயி ஜுஹோமி ஸ்வாஹா ॥ ஓம் புவோ யஜூ கும்ஷி த்வயி ஜுஹோமி ஸ்வாஹா । ஓகும் ஸுவ: ஸாமாநித்வயி ஜுஹோமி ஸ்வாஹா । ஓம் பூர்புவ: ஸுவ: அதர் வாங்கிரஸ ஸ்த்வயி ஜுஹோமி ஸ்வாஹா ॥

பிறகு குழந்தையை மிதமான சூடுள்ள வெந்நீரால் குளிப்பாட்டவும்-ஓம் க்ஷேத்ரீயைத்வா நிர்ருத்யைத்வா த்ருஹோ முஞ்சாமி வருணஸ்ய பாசாத். அநாகஸம் ப்ரம்ஹணேத்வா கரோமி சிவேதே த்யாவா ப்ருதிவீ உபே இமெ ॥ சம்தே அக்நி: ஸஹாத்பிரஸ்து சம் த்யாவா ப்ருதிவீ ஸஹௌஷதீபி: । சம் அந்தரிக்ஷகும் ஸஹ வாதேந தே சம் தேச் சதஸ்ர: ப்ரதிசோ பவந்து । ஸூர்யம்ருதம் தமஸோ க்ராஹ்யாய த்தேவா அமுஞ்ச்சந்நஸ்ருஜந் வ்யேநஸ: । ஏவ மஹ மிமம் க்ஷேத்ரியாஜ்ஜாமி சகும்ஸாத்த்ருஹோ முஞ்சாமி வருணஸ்ய பாசாத் ॥ பிறகு குழந்தையை தாயின் மடியில் இடவும் - யாதைவீச்சதஸ்ர: ப்ரதிசோ வாத பத்நீ ரபிஸூர்யோ விசஷ்டே । தாஸாம் த்வா ஜரஸ ஆததாமி ப்ரயக்ஷ்ம ஏது நிர்ருதிம் பராசை: ॥ குழந்தையை தொட்டுக் கொண்டு -ஓம்மாதேபுத்ரகும் ரக்ஷோஹிகும் ஸீந்மாதேநு ரதிஸாரிணீ । ப்ரியா தநஸ்ய பூயா ஏதமாநாஸ்வே வசே । பிறகு அலம்பப்பட்ட வலது இடது ஸ்தனத்தில் குழந்தைக்கு பால் ஊட்ட-ஓம் அயம் குமாரோ ஜராந்தயது ஸர்வ மாயுரேது தஸ்மை ஸ்தநம் ப்ரப்யாயஸ்வ ஆயு: கீர்த்தி: வர்ச்ச: யசோ பலம் ॥ பிறகு

மந்த்ராவ்ருத்தியுடன் இரு ஸ்தனங்களையும் தொடுவது-ஓம்நாமயதி நருததி யத்ர வயம் வதாமோ யத்ர வாபி ம்ருசா மஸி ॥ பிறகு தலையின் ஸமீபமாக உதக பூர்ண கும்பம்வைத்து-ஆபோக்ருஹேஷு ஜாக்ரத யதா தேவேஷு ஜாக்ரத । ஏவ மஸ்யை ஸுபுத்ராயை ஜாக்ரத ॥

## ॥ நாம கரணம் ॥

இந்த கர்மா செய்யத் தகுந்த நாள் பற்றிய ஸூத்ர வாக்யம்:—"குழந்தை பிறந்த நாளிலிருந்து பன்னிரெண்டாவது நாள்தான் குழந்தையும் தாயாரும் ஸ்னானம் செய்ய வேண்டும்." "தாய் தகப்பனார் குழந்தை மூவருக்கும் பன்னிரெண்டாவது நாள்தான் தீட்டு விலகுகிறது-பதினொராவது நாள் அல்ல. ஔபாஸனம் நாமகரணம் ச்ராத்தம் இவைகள் செய்ய பதினொராவது நாள் பெற்றோருக்கு அதிகாரமில்லை. ஆகவே நாமகரணம் என்ற கர்மா பன்னிரெண்டாவது நாளில்தான் செய்யப்பட வேண்டும்."

தாய் குழந்தை தகப்பனார் அன்று தான் ஸ்னானம் செய்து ப்ரஸவ அறையும் சுத்தப் படுத்தப்பட வேண்டும். ஔபாஸன அக்கினியை ப்ரதிஷ்டை செய்து யஜமானர் கிழக்கு முகமாக உட்கார்ந்து தனது வலப்புறத்தில் குழந்தை ஸஹிதம் மனைவியை உட்காரச் செய்து-ஆசமனம் ப்ராணாயாமம் செய்து தேசம் காலம் ப்ரார்த்தித்து-அஸ்ய சிசோ: பீஜ கர்ப ஸமுத்பவைநோ நிபர்ஹண த்வாரா ஆயுர்வர்ச்சோபி வ்ருத்திவ்யவஹா ரஸித்யர்த்தம் ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம் நாமகரணாக்யம் கர்ம கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்து ததங்கம் கணபதி பூஜனம் புண்யாகவசனம் நாந்தி ச்ராத்தம்ச்ச கரிஷ்யே என ஸங்கல்பம் செய்து யுக்த ரீதியில் செய்ய வேண்டியது.



ஔபாஸன அக்நியை பரிஸ்தரணம் போட்டு பரிஷேசனம் செய்து-மயிக்ருண்ஹாமி முதல் ப்ரஸாதின்யை தேவ்யை இதம் நமம வரையில் செய்து வ்யாஹ்ருதி ஹோமமும் செய்து-ப்ரதான ஹோமம் ஓம் தாதா ததாது நோ ரயிம் ஈசாநோ ஜகதஸ் பதி: । ஸந: பூர்ணேந வாவநத் ஸ்வாஹா ॥ தாத்ர இதம் நமம ॥ 1. தாதா ப்ரஜாயா உத ராய ஈசே தாதேதம் விச்வம் புவநம் ஜஜாந । தாதா புத்ரம் யஜமாநாய தாதா தஸ்மா உஹவ்யம் க்ருதவத் விதேம ஸ்வாஹா ॥ தாத்ர இதம் நமம ॥ 2. தாதா ததாது நோ ரயிம் ப்ராசீம் ஜீவாதுமக்ஷிதாம் । வயம் தேவஸ்ய தீமஹி ஸுமதிகும் ஸத்ய ராதஸ: ஸ்வாஹா ॥ தாத்ர இதம் நமம ॥ 3. தாதா ததாது தாசுஷே வஸூநி ப்ரஜா காமாய மீடுஷே துரோணே । தஸ்மை தேவா அம்ருதா: ஸம்வ்யயம்தாம் விச்வே தேவாஸோ அதிதி: ஸஜோஷா: ஸ்வாஹா ॥ தாத்ர இதம் நமம ॥ 4. ஓம் அநுநோத்யாநுமதிர் யஜ்ஞும் தேவேஷு மந்யதாம்। அக்நிச்ச ஹவ்ய வாஹநோ பவதாம் தாசுஷே மய: ஸ்வாஹா ॥ அநுமத்யா இதம் நமம 5. அந்விதநுமதேத்வம் மந்யாஸை சம்ச்சந: க்ருதி । க்ரத்வே தக்ஷாயநோ ஹிநு ப்ரண ஆயூகும்ஷி தாரிஷ: ஸ்வாஹா ॥ அநுமத்யா இதம் நமம ॥ 6. அநுமந்யதாமநுமந்யமாநா ப்ரஜாவந்தகும் ரயிமக்ஷீயமாணம் । தஸ்யை வயகும் ஹேடஸி மாபி பூமஸாநோ தேவீ ஸுஹவா சர்மயச்சது ஸ்வாஹா ॥ அநு மத்யா இதம் நமம ॥ 7. யஸ்யா மிதம் ப்ரதிசி யத் விரோசதேநுமதிம் ப்ரதி பூஷந்த்யாயவ: । யஸ்யா உபஸ்த உர்வந்தரிக்ஷகும் ஸாநோ தேவீ ஸுஹவா சர்மயச்சது ஸ்வாஹா ॥ அநுமத்யா இதம் நமம ॥ 8. ஓம்ராகா மஹகும் ஸுஹவாகும் ஸுஷ்டுதீ ஹுவே ச்ருணோது ந: ஸுபகா போதது த்மநா । ஸீவ்யத்வப: ஸூச்யாச்சித்யமாநயா ததாது வீரகும் சததாயமுக்த்ய கும் ஸ்வாஹா ॥ ராகாயா இதம் நமம ॥ 9. யாஸ்தே ராகே ஸுமதய: ஸுபேசஸோ யாபிர்ததாஸி தாசுஷே வஸூநி । தாபிர்நோ அத்ய ஸுமநா

உபாகஹி ஸஹஸ்ர போஷகும் ஸுபகே ரராணா ஸ்வாஹா ॥ ராகாய இதம் நமம ॥ 10. ஓம் ஸிநீவாலி ப்ருதுஷ்டுகே யா தேவாநாமஸி ஸ்வஸா। ஜுஷஸ்வ ஹவ்ய மாஹுதம் ப்ரஜாம் தேவி திதிட்டிந: ஸ்வாஹா ॥ ஸிநீவால்யா இதம் நமம ॥ 11. ஓம் யாஸு பாணி: ஸ்வம் குரி: ஸுஷுமா பகுஸுவரீ। தஸ்யை விச்பத்நியை ஹவி: ஸிநீவால்யை ஜுஹோதந ஸ்வாஹா ॥ ஸிநீல்யா இதம் நமம ॥ 12. ஓம் குஹுமஹகும் ஸுபகாம் வித்மநாபஸ மஸ்மிந் யஜ்ஞே ஸுஹவாம் ஜோஹவீமி। ஸாநோ ததாது ச்ரவணம் பித்ரூணாம் தஸ்யாஸ்தே தேவி ஹவிஷா விதேம ஸ்வாஹா ॥ குஹ்வா இதம் நமம ॥ 13. என்று ஹோமம் செய்யவும். பிறகு இமம்மே வருண இத்யாதி ப்ரஜாபதே இத்யந்தம் ஹுத்வா ஜயாதி அந்யாதாந் ராஷ்ட்ர ப்ருத இதி உபஹோமம் செய்யவும்.

தேசம் காலம் ப்ரார்த்தித்து மம குமாரஸ்ய நாமகரண கர்மாங்கம் அந்ந ஹோமம் கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்து (த்ரவ்யங்கள்-அந்நம் அதிரஸம் ஆஜ்யம்தண்டுல சூர்ணம் அரிசிமாவு) அக்னி பரிஷேசனம செய்து எட்டு ஸமித் வைத்து வ்யாஹ்ருதி ஹோமம் வரை செய்து ப்ரதான அந்ந ஹோமம்—அக்நயே ஸ்வாஹா। அக்நய இதம் நமம ॥ ஸோமாய ஸ்வாஹா। ஸோமாய இதம் நமம ॥ அக்நயே அந்நாதாய ஸ்வாஹா। அக்நயேந் நாதாயேதம் நமம ॥ அக்நயேந்ந பதயே ஸ்வாஹா। அக்நயேந்நபதாயேதம் நமம॥ ப்ரஜாபதயே ஸ்வாஹா। ப்ரஜாபதய இதம் நமம ॥ விச்வேப்யோ தேவேப்ய ஸ்வாஹா ॥ விச்வேப்யோ தேவேப்ய இதம் நமம ॥ ஸர்வேப்யோ பூதேப்ய ஸ்வாஹா। ஸர்வேப்யோ பூதேப்ய இதம் நமம ॥ ஸர்வாப்யோ தேவதாப்ய: ஸ்வாஹா ॥ ஸர்வாப்யோ தேவதாப்ய இதம் நமம ॥ அக்நயே ஸ்விஷ்ட க்ருதே ஸ்வாஹா ॥ அக்நயே ஸ்விஷ்டக்ருத இதம் நமம ॥ என்று ஒன்பது ஆஹுதி செய்து பிறகு



அக்னியின் வடபுறம் கிழக்கு முகமாக போடப்பட்ட தர்பைகளின் நுனியில் தீர்த்தம் தெளித்து ஹோம சேஷம் த்ரிவ்ருதந்நம் கொஞ்சம் கையில் எடுத்து பலி போடுவது-வாஸ்துபதயே ஸ்வாஹா। வாஸ்து பதய இதம் நமம। ஒரு பரிஷேசனம் செய்து-வ்யாஹ்ருதி ஹோமம் செய்து ப்ராம்ஹண போஜனம் செய்வித்து புண்யாகவாசனம் கேட்டு மேலே.

நாமதாநம்: இரண்டு அக்ஷரங்களோ நான்கு அக்ஷரங்களோ இரட்டை படை அக்ஷரங்கள் கொண்ட நாமத்தை தாயின் மடியிலுள்ள குழந்தையின் வலது காதில் கர்த்தா உரத்த குரலில் சொல்ல வேண்டியது—மந்தரம்—பிதா மாதே த் யக்ரேபி வ்யாஹரே யாதாம்। விஜ்ஞாய தே ச மம நாம ப்ரதமம் ஜாதவேத ॥ விஜ்ஞாயதே ச தஸ்மாத் த்வி நாமா ப்ராம்ஹணோர்த்துக: ॥ குழந்தையை தொட்டுக் கொண்டு—ஸோமஸ்யத்வா த்யும்நே நாபிம்ருசாமி அக்நே ஸ்தேஜஸா ஸூர்யஸ்ய வர்ச்சஸா ॥ உச்சி முகர்ந்து பசூநாம் த்வா ஹுங்காரேணாபி ஜிக்ராமி (பெயர்) ஆயுஷே வர்ச்சஸே ஹும் ॥ தனது வலதுகையினால் குழந்தையின் வலது கை கட்டை விரலையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு—அக்நி: ஆயுஷ் மாந்த்ஸ வநஸ்பதி ராயுஷ்மாந் தேநத்வா யுஷாயுஷ்மந்தம் கரோமி। ஸோம ஆயுஷ் மாந்த்ஸ ஓஷதீபி ராயுஷ்மாந்தேந த்வாயுஷா யுஷ்மந்தம் கரோமி। யஜ்ஞ ஆயுஷ்மாந்த்ஸ தக்ஷிணாபி ராயுஷ்மாந் தேந த்வாயுஷா யுஷ்மந்தம் கரோமி। ப்ரம்ஹா யுஷ்மத் தத் ப்ராம்ஹணை ராயுஷ்மாத் தேநத்வா யுஷா யுஷ்மந்தம் கரோமி। தேவா ஆயுஷ் மந்தஸ்தே ம்ருதே நா யுஷ்மந்த ஸ்தேநத்வா யுஷா யுஷ்மந்தம் கரோமி। குழந்தையின் வலது காதில்—ஆயுஷ்டே விச்வதோ ததநய மக்நிர் வரேண்ய:। புநஸ்தே ப்ராண ஆயதி பரா யக்ஷ்மகும் ஸுவாமிதே। அக்நௌ ப்ருதிவ் யாம் ப்ரதி திஷ்ட வாயா வாந்த ரிக்ஷே ஸூர்யே। திவியா

கும் ஸவஸ்தி மக்நிர் வாயுராதித்யஞ்சந்த்ரமா ஆபோ ந ஸஞ்சரந்தி தா கும் ஸ்வஸ்தி மநு ஸஞ்சர (பெயர்) சர்மந் । இடது காதில்—ஆயுர்தா அக்நே ஹவிஷோ ஜுஷாணோ க்ருத ப்ரதீகோ க்ருத யோநிரேதி। க்ருதம் பீத்வா மது சாரு கவ்யம் பிதேவ புத்ரம் அபிரக்ஷ தாதிமம் । அக்நௌ ப்ருதிவ்யாம் ப்ரதிஷ்டி வாயா வாந்த ரிக்ஷே ஸூர்யே । திவியா கும் ஸ்வஸ்தி மக்நிர் வாயு ராதித்ய ஞ்ச்ந்த்ரமா ஆபோ ந ஸஞ்சரந்தி தா கும் ஸ்வஸ்தி மநு ஸஞ்சர பெயர் சர்மந் ॥

—o—

## ॥ அந்ந ப்ராசநம் ॥

குழந்தை பிறந்த ஆறாவது எட்டாவது மாதம் சுக்ல பக்ஷத்தில் ஒரு நல்ல திதியில் பகல் பூர்வ பாகத்தில் செய்ய வேண்டியது.

கர்த்தா காலையில் நித்ய கர்மாக்களை முடித்து சந்தனம் புஷ்பம் தரித்து கிழக்கு முகமாக உட்கார்ந்து தனது வலப்புறத்தில் குழந்தையை மடியில் வைத்துக் கொண்ட பத்னியுடன் தேசம் காலம் ப்ரார்த்தித்து—மம அஸ்ய சிசோ: மாத்ரு கர்ப மல ப்ராசந ஏநோ நிபர்ஹண பீஜ கர்ப ஸமுத்பவ ஏநோ நிபர்ஹண த்வாராந் நாத்ய ப்ரம்ஹவர்ச்சஸ தேஜ இந்திரியாயுரபிவ்ருத்தி த்வாரா ச ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம் அந்நப்ராசநாக்யம் கர்ம கரிஷ்யே । ததங்கம் கணபதி பூஜநம் புண்யாக வாசநம் நாந்தீ ச்ராத்தம் ச கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய யுக்த ரீதியாக செய்ய வேண்டும்.



பிறகு ஔபாஸநாக்நியை ப்ரதிஷ்டை செய்து—பரிஸ் தீர்ணம் போட்டு பரிஷேசநம் செய்து—மயிக்ருண்ஹாமி இத்யாதி வ்யாஹ்ருத்யந்தம் செய்து—இவ்விடம் ப்ரதாந ஹோமம் இல்லாததனால்—இமம்மே வருண தத்வாயாமி த்வந்நோ அக்நே ஸத்வந்நோ அக்நே த்வமக்நே அயாஸி ப்ரஜாபதே—என்று ஹோமம் செய்து—ஜயாதி முதலிய ஹோமம் ப்ரம்ஹோத்வாஸந பர்யந்தம் செய்து—

தேசம் காலம் ப்ரார்த்தித்து அஸ்ய மம குமாரஸ்ய அந்ந ப்ராசந கர்மாங்கம் அந்ந ஹோமம் கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய ஹோமம் செய்யவும். புண்யாகவாசநமும் உண்டு. பிறகு அக்நிஉபஸ்தானம்.

பிறகு தனது வலது புறம் தாயின் மடியில் உட்கார்த்தியுள்ள குழந்தைக்கு (ததி மது க்ருதம்) தயிர் தேன் நெய்) இம் மூன்றும் கலந்து ஒவ்வோர் மந்த்ரமாக சொல்லி ஊட்டவும். பூஸ்த்வயி ததாமி। புவஸ்த்வயி ததாமி। ஸுவஸ்த்வயி ததாமி॥ ஒரு முறை நெய் கலந்த அன்னம் ஊட்டவும்—அபாம் த்வௌஷதீநாம் ரஸம் ப்ராசயாமி சிவாஸ்த ஆப ஓஷதய: ஸம் த்வந மீவாஸ்த ஆப ஓஷதயொ பவந்து। பிறகு யதேஷ்டம் ஊட்டி முகத்தை அலம்பி குழந்தையை பூமியில் உட்கார்த்தி அதன் எதிரில் புஸ்தகம் பேனா கத்தி கொரடு ஆணிமுடுக்கி, துப்பாக்கி வஸ்த்ரம் சஸ்த்ரம் முதலிய விளையாட்டு கருவிகளை பரத்தி அக்குழந்தை தன்னிஷ்டப் படி எந்த பொருளை தொட்டு எடுக்கிறதோ அப்பொருளின் அடிப்படையிலேயே அதன் வாழ்க்கை அமைந்து முன்னேறும் என்பதை இப்பரீக்ஷை மூலம் தெரிந்து கொள்ளலாம்.

—o—

## ॥ ஆயுர் வர்த்தாபந விதி: ॥

குழந்தையின் முதல் ஆண்டு நிறைவு ஜன்ம நக்ஷத்ர தினத்தன்று கர்த்தா காலை நித்ய கர்மாக்களை செய்த பின் கிழக்கு முகமாக உட்கார்ந்து தனது வலப்புறம் குழந்தையை மடியில் வைத்துக்கொண்ட பத்நியை உட்கார்த்தி தேசம் காலம் ப்ரார்த்தித்து—மம அஸ்ய பாலகஸ்ய ஆயுரபிவ்ருத்தித்வாரா ஸ்ரீபரமேச்வர ப்ரீத்யர்த்தம் ஆயுர்வர்த்தாப நாக்யம் கர்ம கரிஷ்யே இதி ஸங்கல்பம் செய்து—ததங்கம் கணபதி பூஜநம் புண்யாகவாசநம் நாந்தீ ச்ராத்தம்ச ஸங்கல்ப்ய செய்ய வேண்டும்.

பிறகு அக்நி ப்ரதிஷ்டை செய்து மயிக்ருண்ஹாமி இத்யாதி வ்யாஹ்ருதி பர்யந்தம் ஹோமம் செய்து, அக்னியின் வடபுறம் ஸ்தாபிக்கப்பட்ட உதகும்பத்தில் ஆயுர்தேவதையை ஆவாஹனம் செய்து—ப்ரதான ஹோமம்—யொப்ரம்ஹா ப்ரம்ஹண உஜ்ஜஹார இத்யாதி ஆயுஷ்யஸூக்த மந்த்ரங்களால் ஸங்கல்பித்துக் கொண்ட எண்ணிக்கையால் ஆஜ்ய ஹோமம் ஜன்மநக்ஷத்ர தேவதா, மந்த்ரம் சொல்லி ஸங்கல்பித்துக் கொண்ட எண்ணிக்கையால் ஆஜ்யஹோமம், ஜன்ம நக்ஷத்ர தேவதா மந்த்ரமுடன் குழந்தையின் நாமத்தையும் சேர்த்து ஹோமம் செய்து—ம்ருத்யு ஸூக்த மந்திரமும் சொல்லி ஹோமம் செய்து இமம்மே வருண இத்யாதி வ்யாஹ்ருத்யந்தம் ஹோமம் செய்து கொள்ளவும்—பிறகு கும்ப தீர்த்தத்தினால் குழந்தைக்கு அபிஷேகம் செய்யவும். ப்ராம்ஹண ஆசீர் வாதம் பெற்று இஷ்ட மித்ர பந்து ஜனங்களுடன் போஜனம் செய்யவும்.

—o—



## ॥ சூடாகரணம் ॥

குழந்தையின் மூன்றாவது/ஐந்தாவது வயதில் உத்தராயண சுக்ல பக்ஷத்தில் ஒரு நல்ல முஹூர்த்தத்தில் இக்கர்மா [ குடுமி வைத்தல் ] செய்யப்பட வேண்டும்,

கர்த்தா காலை நித்யானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு மங்கள த்ரவ்யங்கள் தரித்து கிழக்கு முகமாக உட்கார்ந்து வலப்புறத்தில் குழந்தை ஸஹிதம் பத்நியை அமர்த்தி தேசம் காலம் ப்ரார்த்தித்து—மம அஸ்ய குமாரஸ்ய பீஜ கர்ப ஸமுத்பவ ஏனோ நிபர்ஹணத்வாரா ஆயுர் வர்ச்சோரபிவ்ருத்தி த்வாராச ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் சூடா கரணாக்யம் கர்ம கரிஷ்யே—ததங்கம் கணபதி பூஜநம் புண்யாக வாசநம் நாந்தீ ஶ்ராத்தம் உதக சாந்தி ப்ரதிஸர ரக்ஷா பந்தநம் அங்குராரோபணம் ச கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய—யுக்த ரீதியில் செய்யவும்.

ஔபாஸநாக்நி ப்ரதிஷ்டை செய்து—பரிஸ்தீர்ணம் போட்டு மயிக்ருண்ஹாமியில் ஆரம்பித்து வ்யாஹ்ருத்யந்தம் ஹோமம் செய்து—இங்கு ப்ரதான ஹோமமில்லை. ஆகவே—இமம் மே வருண இத்யாதி ப்ரஜாபதே இத்யந்தம் ஆஹுதி செய்து—ஜயாதி ப்ரப்ருதி ஸம்ஸ்தா ஜபாந்தம் செய்து—தேச காலம் ப்ரார்த்தித்து ஸங்கல்பித்து முன்போல் த்ரிவ்ருதந்த ஹோமம் புண்யாக வாசநமும் செய்த பிறகு,

அக்நியின் மேற்கில் வலது புறத்தில் குமாரன் மத்தியில் கர்த்தா இடது பக்கம் தாயார்/ஒரு ப்ரம்ஹசாரி கையில் கொஞ்சம் காளைமாட்டு சாணியுடன் இருந்து—முன்னரே தயாரிக்கப்பட்ட மிதமான சூடுள்ள வெந்நீரை பையன் தலையில் தடவி தென்புறம்—[பாவனையாக

நர்பையை நறுக்குவது]-ஆப உந்தந்து ஜீவஸே தீர்க்காயுத்வாய வர்ச்சஸே என்று—இவ்விடம் தர்ப்பையின் நுனி மேலே பார்க்க வைக்கவும். ஒஷதே த்ராயஸ்வைநம் என்று। தர்ப்பையுடன் கத்தியை வைத்து—ஸ்வதிதே மைநகும் ஹிகும் ஸீ: ।। பிறகு நறுக்குவது—தேவ ஶ்ரூரே தாநி ப்ரவபே ॥ இவ்விதம் மற்ற மூன்று பக்கங்களிலும்—ஆனல் நறுக்கும் மந்த்ரம் வேறு ।। ப்ரதக்ஷிணமாக செய்ய வேண்டும். மேல் புறம் நறுக்க—யேநாவபத் ஸவிதா க்ஷுரேண ஸோமஸ்ய ராஜ்ஞோ வருணஸ்ய வித்வாந்। தேந ப்ரம்ஹணோ வபதே தமஸ்யோர்ஜமகும் ரய்யா வர்ச்சஸா ஸகும் ஸ்ருஜாதா என்று ॥

பிறகு இடது புறம்—யேந பூஷா ப்ருஹஸ்பதே ரக்நேரிந்த்ரஸ்யசாயுஷேவபத்। தேந தேஹம் வபாம்ய-ஹம் [பையன் சர்மன்] சொல்லவும் ।। பிறகு முன்புறம்—யதா ஜ்யோக் ஸுமநா அஸத்। ஜ்யோக்ச ஸூர்யம் த்ருசே என்று ॥ சுற்றிலும் வபனம்: பிறகு நாவிதனைக் கொண்டு குடுமி வைக்கச் செய்யவும். நறுக்கிய கேசங்களை காளை மாட்டுச் சாணியுடன் சேர்த்து தர்ப்பை புதரினடியில் குழி தோண்டி போடவும்—யத்ர பூஷா ப்ருஹஸ் பதி : ஸவிதா ஸோமோ அக்நி:। தேப்யோ நிதாநம் பஹுதாவ்யைச்ச்சந் அந்தரா த்யாவா ப்ருதிவீ அப: ஸுவ: ।। பிறகு சுத்த ஸ்னனம் செய்விக்கப்பட்டு குமாரன் ஆசார்யரையும் பெரியோர்களேயும் வணங்குவான். பிறகு நாவிதனுக்கு நெய் கலந்த அன்னம்; வஸ்த்ரம்; தக்ஷிணை கொடுக்க வேண்டும்.

—o—



## ॥ உபநயநம் ॥

குழந்தைக்கு வயது ஏழு நடக்கும்பொழுது—வஸந்த ருது சுக்ல பக்ஷத்தில் ஒரு நல்ல நக்ஷத்ரத்தில் செய்யவேண்டிய கர்மா.

உபநயந தினத்தின் முதல் நாள் புண்யாக வாசனம் உதக சாந்தி—நாந்தீ ச்ரார்த்தம் புண்யாக வாசநம் அங்குர ப்ரதிஸர பந்தனம் இவற்றை செய்து.

அன்று காலை ஆசார்யன் [பிதா அல்லது வேறு மனிதர்] பத்நி குமாரன் இவர்கள் யதாசாரம் ஸ்நாநம் அலங்காரம் செய்து கொண்டு புதிய வஸ்திரமும் தரித்து கிழக்கு முகமாக உட்கார்ந்து தனது வலப் புறம் குமாரன் பத்நி இவர்களை உட்கார்த்தி தேசம் காலம் ப்ரார்த்தித்து—மம அஸ்ய குமாரம்/வடும் உபநேஷ்யே என்று ஸங்கல்பித்து—லௌகிக அக்நியை ப்ரதிஷ்டை செய்து பரிஸ்தரணம் போட்டு மயிக்ருண்ஹாமி . . . . பராகாத் என்று அக்நியை சேர்த்து—அக்நிக்கு வடபுறம் தர்ப்பை பரப்பி பாத்ர ஸாதனங்களை—தர்வீ ஆஜ்யஸ்தாலீ ப்ரணீதா பாத்ரம் ப்ரோக்ஷணீ பாத்ரம் இத்மம் பர்ஹி: தர்பை உபவேஷம் கடி ஸுத்ரம் கச்சம் யஜ்ஞோபவீதம் மேகலை அச்மாநம் கூர்ச்சம் தண்டம் அஜிநம் பிக்ஷாபாத்ரம் ஏழு பலாச சமித்துக்கள் வஸ்த்ரம் பசு (கோ) இவற்றை திரட்டி வைப்பது.

ஆசார்யன் ப்ரம்ஹவர்ணம் முதல் பரிதி பரிதாநாந்தம் செய்து பையனுக்கு குமாரபோஜனம் வபனம் ஸ்னானம் அலங்காரம் செய்விக்கப்பட்டு புதிய வஸ்த்ரம் தரித்த குமாரனை/வடுவை அக்நியின் வடபுறம் வந்து மந்தரமின்றி கடி ஸுத்ரம் கச்சம் [கௌபீநம்] தரிக்கச் செய்து ஆசமனம் செய்விக்கவும்.

பிறகு தேசம் காலம் ப்ரார்த்தித்து — நக்ஷத்ரே — ராசௌ ஜாதஸ்ய — சர்மண: அஸ்ய மம குமாரஸ்ய/ வடோஸ்ய ச்ரௌத ஸ்மார்த்த கர்மானுஷ்டாந யோக்யதா ஸித்யர்த்தம் யஜ்ஞோபவீத தாரணம் காரயிஷ்யே. இதி ஸங்கல்ப்ய மந்த்ரம் சொல்லி யஜ்ஞோபவீதம் தரிக்கும்படி செய்யவும். யஜ்ஞஸ்ய உபவீதேந உபவ்யயாமி। தீர்க்கா யுத்வாய ஸுப்ரஜாஸ்த்வாய ஸுவீர்யாய யசஸே ப்ரம்ஹணே ப்ரம்ஹவர்ச்சஸாய ஸர்வேஷாம் வேதாநாம் ஆதி பத்யாய। ஓம் யஜ்ஞோபவீதம் பரமம் பவித்ரம் ப்ரஜாபதேः யத்ஸஹஜம் புரஸ்தாத்। ஆயுஷ்யம் அக்ரயம் ப்ரதிமுஞ்ச சுப்ரம் யஜ்ஞோபவீதம் பலம் அஸ்துதேஜ:॥ என்று ஆசார்ய தத்த யஜ்ஞோபவீதம் தரித்த குமாரன் ஆசமன செய்து ஆசார்யனுக்கு முன்பும் அக்நிக்கு பின்பாகம் வும்—இடைவழியில் சென்று ஆசார்யனின் வலது புறம் கிழக்குப் பார்த்து உட்கார வேண்டும். உடனே ஆசார்யன் அக்நிக்கு பரிஷேசனாதி ஸாமான்ய ப்ரதாந ஹோமம் செய்து வ்யாஹ்ருதி ஹோமமும் செய்து ப்ரதாந ஹோமம் —ஆயுர்தா அக்நே ஹவிஷோ ஜுஷாணோ க்ருதப்ரதீகோ க்ருத யோநிரேதி। க்ருதம் பீத்வா மது சாரு கவ்யம் பிதேவ புத்ரம் அபிரக்ஷதாதிமகும் ஸ்வாஹா। ஆயுர்தே அக்நய இதம் நமம॥ ஆயுர்தா தேவஜரஸம் க்ருணாநோ க்ருத ப்ரதீகோ க்ருத ப்ருஷ்டோ அக்நே। க்ருதம் பிபந்ந ம்ருதம் சாரு கவ்யம் பிதேவ புத்ரம் ஜரஸேநயேமகும் ஸ்வாஹா। ஆயுர்தே தேவாயாக்நய இதம் நமம॥ என்ற இரண்டு ப்ரதான ஆஹுதிகளுக்குப்பின் — இமம்மே வருண இத்யாதி ஸ்விஷ்ட க்ருத இத்யந்தம் ஹோமம் செய்து.

உத்தர பரிதிஸந்தியின் உத்தர பாகத்தில் அச்மாநம் வைத்து குமாரனை தனக்கும் அக்நிக்குமிடையில் வரும்படி செய்து வலது பாதத்தை முதலில் அம்மி மீது வைத்து ஏறி கிழக்கு முகமாக நிற்கச் செய்யவும். — ஆதிஷ்டேம மச்மாந



மச்மேவத்வகும் ஸ்திரோ பவ। ப்ரம்ருணீஹி துரஸ்யூந்த் ஸஹஸ்வ ப்ருதநாயத என்று ॥

பிறகு புதிய வஸ்த்ரம் எடுத்து கிழக்கு முகமாக கட்டி விடுவது — யா அக்ருந்தந் நவயந்யா அதந்வதயாச்ச தேவீ ரந்தாந பிதோ ததந்த। தாஸ்த்வா தேவீர் ஜரஸா ஸம் வ்யயந்த்வா யுஷ்மாநிதம் பரிதத்ஸ்வ வாஸ:॥ பரிதத்த தத்த வாஸஸைநகும் சதாயுஷம் க்ருணுத தீர்க்க மாயு:। ப்ருஹஸ்பதி: ப்ராயச்ச்சத் வாஸ ஏதத் ஸோமாய ராஜ்ஞே பரிதாதவாஉ। ஜராங்கச்ச்சாஸி பரிதத்ஸ்வ வாஸோ பவா க்ருஷ்டீநாமபி சஸ்திபாவா॥ சதம் ச ஜீவ சரத: ஸுவர்ச்சா ராயச்சபோஷ முபஸம் வ்யயஸ்வ என்று। பிறகு இருமுறை ஆசமனம் செய்து இம் மந்த்ரம் சொல்ல வும்— பரீதம் வாஸோதிதா ஸ்வஸ்தயே பூராபீணாமபி சஸ்தி பாவா। சதம் ச ஜீவ சரத: புரூசீ: வஸூநி சாய்யோ விபஜாஸ ஜீவந்॥ என்று.

பிறகு மேகலையை ப்ரதக்ஷிணமாக மூன்று சுற்று களாக இடுப்பில் கட்டவும். — யாதுரிதா பரிபாத மாநா சர்ம வரூதே புநதீந ஆகாத்। ப்ராணா பாநாப்யாம் பலமாவஹந்தீ ஸ்வஸா தேவா நாகும் ஸுபகா மேகலே யம் என்று॥ நாபியின் இடது புறம் மூன்று முடிச்சுப் போட்டு நாபியின் வலது புறம் இழுத்து விடவும்.

பிறகு [அஜிநத்தை உத்தரீயமாக போடுவது. அல்லது அஜிநத்தை யஜ்ஞோப வீதத்தில் சேர்ப்பது]—மித்ரஸ்ய சக்ஷு: தருணம் தரீய: தேஜோ யசஸ்விஸ்த விரகும் ஸமித் தம்। அநாஹநஸ்யம் வஸநம் ஜரிஷ்ணு பரீதம் வாஜ்ய ஜிநம் தத்ஸ்வாம் சர்மந்। பிறகு இருதோள்களையும் அணைப்பது—வேத ஸ்யாநு வக்தவை மேதாயை ச்ரத் தாயா அநூக்தஸ்யாநிராகரணாய ப்ரம்ஹணே ப்ரம்ஹ வர்ச்சஸாய ॥

இந்த்ராய த்வாம் பரிததே—என்று ஆசார்யன் சொல்ல —பரிதேஹி என்று மாணவன் பதில் கூறுவான்.—பரீமம் இந்த்ர ப்ரம்ஹணே மஹே ச்ரோத்ராய தத்மஸ்யதைநம் ஜரிமாணயேஜ்யோக் ச்ரோத்ரேதி ஜாகரத் ॥

பிறகு மாணவன் அக்நியின் மேற்கு புறம் பிதாவின் வடக்கு புறம் உட்கார்ந்து ஆஹுதி சேஷம் ஆஜ்யத்தை மூன்று மந்த்ரமும் சொல்லி ஒரே முறை சாப்பிட வேண்டும்- த்வயி மேதாம் த்வயி ப்ரஜாம் த்வய்யக்நி: தேஜோ ததாது । த்வயி மேதாம் த்வயி ப்ரஜாம் த்வயீந்த்ர இந்த்ரியம் ததாது । த்வயி மேதாம் த்வயி ப்ரஜாம் த்வயி ஸூர்யோ ப்ராஜோ ததாது ॥

[பிறகு மாணவன் ஆசமநம் செய்வான்.]

ஆசார்யன் ஆஜ்யம் சாப்பிட்ட மாணவனை குளுமையாக பார்ப்பது—யோகே யோகே தவஸ்தரம் வாஜே வாஜே ஹவா மஹே । ஸகாய இந்த்ர மூதயே । இம மக்ந ஆயுஷே வர்ச்சஸே க்ருதி ப்ரியகும் ரேதோ வருண ஸோம ராஜந் ॥ மாதே வாஸ்மா அதிதேதி சர்ம யச்ச்ச விச்வே தேவா ஜரதஷ்டிர் யதாஸத் ॥

பிறகு சுத்தாசமனம் செய்த குமாரன் ஆசார்யனை மந்த்ரமின்றி தொடுவது. ஆசார்யனும் அவனை தொட்டுச் சொல்வது.—சதமிந்து சரதோ அந்தி தேவா யத்ரா ந ச்சக்ரா ஜரஸம் தநூநாம் । புத்ராஸோ யத்ர பிதரோ பவந்தி மாநோ மத்யாரீரிஷ தாயுர்கந்தோ: ॥

பிறகு அக்நியை ப்ரதக்ஷிணமாக வந்த வடுவைப் பார்த்து ஆசார்யன்—ஆகந்தா ஸமகந் மஹி ப்ரஸ ம்ருத் யும் யுயோதந । அரிஷ்டா: ஸஞ்சரேமஹி ஸ்வஸ்திச்சரதா திஹ ஸ்வஸ்த்யா க்ருஹேப்ய: ॥



ஆசார்யன் வடுவிடம் உபநயநார்த்தம் சொல்லுவது. —ப்ரம்ஹசார்யமாகா முபமாநயஸ்வ ப்ரம்ஹசாரீ பவாநி தேவேந ஸவித்ரா ப்ரஸூத: ॥ பிறகு ஆசார்யன் கேட்கிறார்—கோ நாமாஸி । அதற்கு மாணவன் பதில் தனது பெயரையும் நக்ஷத்ர நாமாவையும் சொல்லுவான்.— — (சர்மா) அஸ்மி । —(நக்ஷத்ர நாமா) அஸ்மி ॥ ஆசார்யன் கூறுவது: ஸ்வஸ்தி தேவ ஸவிதரஹமநேந—(சர்மந்) உத்ருச மசீய ॥

பிறகு தர்ப்பையினால் தீர்த்தத்தை இருவரும் மார்ஜநம் செய்து கொள்வார்கள்—சம்நோ தேவீரபிஷ்டய ஆபோ பவந்து பீதயே । சம்யோ ரபிஸ்ரவந்து ந: ॥ இவ் விதம் ப்ரோக்ஷணமான பிறகு உபநயநத்திற்கான ஸுமுஹூர்த்தத்தை எதிர் பார்த்திருப்பார்கள்.

பிறகு ப்ரதாந உபநயனம் ॥ ஆசார்யன் கிழக்கு முகமாக நின்று மேற்கு பார்த்து நிற்கும் மாணவனை தனது வலது கையினால் அவனது வலது தோளையும் இடது கையால் இடது தோளையும் தொட்டு அணைத்து தனது வலது கையினால் அவனது ஹ்ருதயத்தைத் தொட்டு ஸமீபத்தில் அழைத்துக் கொள்வது—பூர்புவ: ஸுவ: தத்ஸ விது: வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி । தியோயோந: ப்ரசோதயாத் ॥ தேவஸ்யத்வா ஸவிது: ப்ரஸவே ச்விநோர் பாஹுப்யாம் பூஷ்ணோ ஹஸ்தாப்யா முபநயே— — —சர்மந் ॥

ஆசார்யன் தனது வலது கையினால் வடுவின் வலது கையை கட்டை விரல் உள்பட பிடித்து தூக்குவது— அக்நிஷ்டே ஹஸ்த மக்ரபீத் ஸோமஸ்தே ஹஸ்த மக்ரபீத் ஸவிதா தே ஹஸ்த மக்ரபீத் சரஸ்வதீதே ஹஸ்த மக்ர பீத் பூஷாதே ஹஸ்த மக்ரபீத் ப்ருஹஸ்பதிஸ்தே ஹஸ்த மக்ரபீத் மித்ரஸ்தே ஹஸ்த மக்ரபீத், வருணஸ்தே

ஹஸ்த மக்ரபீத் த்வஷ்டா் தே ஹஸ்த மக்ரபீத் தாதா தே ஹஸ்த மக்ரபீத் விஷ்ணுஸ்தே ஹஸ்த மக்ரபீத் ப்ரஜா பதிஸ் தே ஹஸ்த மக்ரபீத் ॥ பிறகு வடுவைப் பார்த்து—ஸவிதா த்வாபி ரக்ஷது மித்ரஸ்த்வமஸி தர்மணாக்நிரா சார்ய: தவ தேவேந ஸவித்ரா ப்ரஸூதோ ப்ருஹஸ்பதே: ப்ரம்ஹசாரீ பவ— — —சர்மந் ॥ ஆசார்யன் குமாரனுக்கு ப்ரஹ்மசாரியின் கடமைகளை உணர்த்துதல்.

| | |
|---|---|
| ஆசார்யன்—அபோ ஶாந ॥ | மாணவன்—பாடம் ॥ |
| ஸமித ஆதேஹி ॥ | பாடம் ॥ |
| கர்ம குரு ॥ | பாடம் ॥ |
| மாதிவாஸ்வாப்ஸீ: ॥ | பாடம் ॥ |

ஆசார்யன் தனது வலது கையால் ப்ரம்ஹசாரியின் வலது தோளை மறுபடி மறுபடி தடவிக் கொடுத்து ஹ்ருதய தேசத்தை தொட்டுக் கொண்டு—மம ஹ்ருதயே ஹ்ருதயம் தே அஸ்து மம சித்தம் சித்தே நாந்வேஹி மம வாசமேகம நா ஜுஷஸ்வ ப்ருஹஸ்பதிஸ்த்வா நியுநக்த மஹ்யம் மாமே வா நு ஸகும் ரபஸ்வ மயி சித்தாநி ஸந்து தே மயி ஸாமீச்ய மஸ்து தே மஹ்யம் வாசம் நியச்ச்சதாத் ॥ பிறகு நாபீ தேசத்தை தொட்டு—ப்ராணாநாம் க்ரந்திரஸி ஸமா விஸ்ரஸ: ॥

பிறகு குமாரனைப் பார்த்து—பூர்புவ: ஸுவ: ஸுப்ரஜா: ப்ரஜயா பூயாஸகும் ஸுவீரோ வீரை: ஸுவர்ச்சா வர்ச்சஸா ஸுபோஷ: போஷை: ஸுமேதா மேதயா ஸுப்ரம்ஹா ப்ரம்ஹசாரிபி: ॥ மறுபடியும் குமாரனைப் பார்த்து சொல்வது—பூர்ருக்ஷுத்வாக்நௌ ப்ருதிவ்யாம் வாசி ப்ரம்ஹணி ததே—சர்மந் ॥ புவோ யஜு: ஷுத்வா வாயா வந்தரிக்ஷே ப்ராணே ப்ரம்ஹணிததே—சர்மந் ॥ ஸுவ: ஸாமஸுத்வா ஸூர்யே திவி சக்ஷுஷி ப்ரம்ஹணி



ததே—சர்மந் ॥ இஷ்ட தஸ்தே ப்ரியோஸாநி—சர்மந் ॥ அநலஸ்ய தே ப்ரியோ ஸாநி—சர்மந் ॥ இதம் வத்ஸ் யாவ: ப்ராண ஆயுஷி வத்ஸ்யாவ: ப்ராண ஆயுஷிவஸாம்—சர்மந் ॥

பிறகு ப்ரம்ஹசாரியின் வலது கையை தூக்கி கட்டை விரல் உள்பட பிடித்துக்கொண்டு—அக்நி ராயுஷ்மாந்த்ஸ வநஸ்பதி பிராயுஷ்மாந் தே நத்வா யுஷாயுஷ்மந்தம் கரோமி। ஸோம ஆயுஷ்மாந்த் ஸ ஓஷதீ பிராயுஷ்மாந் தே நத்வா யுஷாயுஷ்மந்தம் கரோமி ॥ யஜ்ஞ ஆயுஷ்மாந்த்ஸ தக்ஷிணாபி ராயுஷ்மாந் தே நத்வா யுஷாயுஷ்மந்தம் கரோமி ॥ ப்ரம்ஹாயுஷ்மதத் ப்ராம்ஹணைராயுஷ்மத் தே நத்வா யுஷாயுஷ்மந்தம் கரோமி ॥ தேவாயுஷ்மந்தஸ் தே ம்ருதே நா யுஷ்மந்தஸ் தேநத்வா யுஷாயுஷ்மந்தம் கரோமி ॥

பிறகு இரண்டு மந்த்ரங்களை வடுவின் வலது காதில் ஜபிக்கவும்—ஆயுஷ்டே விச்வதோ ததயமக்நி: வரேண்ய: ॥ புநஸ்தே ப்ராண ஆயதி பராயக்ஷ்மகும் ஸுவாமிதே ॥ அக்நௌ ப்ருதிவ்யாம் ப்ரதிதிஷ்ட வாயாவந்த ரிக்ஷே ஸூர்யே திவி யாகும். ஸ்வஸ்தி மக்நிர் வாயுராதித்ய ச்சந்த்ரமா ஆபோநு ஸஞ்சரந்தி தாகும் ஸ்வஸ்தி மநு ஸஞ்சர—சர்மந் ॥ ப்ராணஸ்ய ப்ரம்ஹசார்யபூ:—சர்மந் ॥ மேலும் இரண்டு மந்திரங்களை இடது காதில்—ஆயுர்தா அக்நே ஹவிஷோ ஜுஷாணோ க்ருத ப்ரதீகோ க்ருத யோநிரேதி। க்ருதம் பீத்வா மது சாரு கவ்யம் பிதேவ புத்ரம் அபிரக்ஷதாதிமம் ॥ அக்நௌ ப்ருதிவ்யாம் ப்ரதிதிஷ்டவாயா வந்த ரிக்ஷேஸூர்யே திவியாகும் ஸ்வஸ்தி மக்நிர் வாயுரா தித்யச்சந்த்ரமா ஆபோநு ஸஞ்சரந்தி தாகும் ஸ்வஸ்தி மநு ஸஞ்சர—சர்மந் ॥ ப்ராணஸ்ய ப்ரம்ஹசார்யபூ:—சர்மந் ॥ பிறகு ப்ரம்ஹசாரியின் முகத்தோடு முகம் வைத்து ஜபதி—மேதாந்த இந்த்ரோத்தாது மேதாம் தேவீ ஸாரஸ்வதீ।

மேதாந்தே அச்விநாவுபாவாதத்தாம் புஷ்கர ஸ்ரஜௌ ॥ பிறகு வடுவைத் தூக்கி நிறுத்தி—பரிதாநம்—ஆசார்ய: கஷகாயத்வா பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா: அந்தகாயத்வா பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா: அகோராயத்வா பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா: கதாயத்வா பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா: யமாயத்வா பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா: மகாயத்வா பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா: வசிந்யைத்வா பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ப்ருதிவ்யைத்வா ஸவைச்வாநராயை பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா: அத்ப்யஸ்த்வா பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா: ஓஷதீப்யஸ்த்வா பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா: வநஸ்பதிப்யஸ்த்வா பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா: த்யாவா ப்ருதிவீப்யாம் த்வா பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா: ஸு॒பூதாயத்வா பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா: ப்ரம்ஹவர்ச்சஸாயத்வா பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா: விச்வேப்யஸ்த்வா தேவேப்ய: பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா: ஸர்வேப்யஸ்த்வா பூதேப்ய: பரிததாமி । வடு: பரிதேஹி ॥ ஆசா; ஸர்வாப்யஸ்த்வா தேவதாப்ய: பரிததாமி । வடு பரிதேஹி.

—o—

## பின் ஸாவித்ரீ க்ரஹணம் ॥
## [ப்ரம்ஹோபதேசம்.]

ஆசார்யன் காயத்ரீ உபதேசம் செய்வதற்காக கிழக்கு முகமாக போடப்பட்ட கூர்ச்சத்தின் மேல் உட்காரவும்— ராஷ்ட்ர ப்ருதஸ்தா சார்யா ஸந்திமாத்வத்யோஷம் ॥

ப்ரம்ஹசாரீ ஆதித்யனை அஞ்ஜலியால் நமஸ்கரித்து ஆசார்யனின் வலது பாதம் இடது பாதத்தின் மீது போட்டு [தொட்டு இடது பாதத்தையும்] தனது வலது கையினால் சேர்த்து தொடுவது—உபஸங்க்ரஹணம் ॥



ஆசார்யனுக்கு நமஸ்காரம் — அபிவாதநம் — வலது கையால் இடது காதையும் இடது கையால் வலது காதையும் தொட்டுக்கொண்டு — ருஷிப்ரவரம் — கோத்ரம் — ஸூத்ரம் வேத சாகை — சர்மா சொல்லி அஹம்போ அபிவாதயே என்று உச்சரித்து தலை வணங்கி ஆசார்யனுக்கு நமஸ்காரம் செய்யவும். உதாரணம்: அபிவாதயே கௌசிக, தநஞ்ஜய, லோஹித, அஷ்டக, பூரண பரீதாபி அஹமர்ஷண ஸப்தாருஷய: ப்ரபராந்வித: கௌசிக கோத்ர: ஸத்யாஷாடஸூத்ர: யஜு॒ச்சாகாத்யாயி ஶ்ரீராம சர்மா நாமாஹம் அஸ்மிபோ ॥

ஆசார்யன்—ஆயுஷ்மாந் பவ - - - சர்மந் என்று நீட்டி உயர்ந்த குரலால் உச்சரித்து ஆசீர்வாதம் செய்வார். பையன் விநய பாவத்துடன் அருகில் இருப்பான். ஸர்வ வேதங்களையும் ஆரம்பிக்குமுன் ஸாவித்ரீ உபதேசம் வேண்டுமென ஆசைப்பட்டு மாணவன் இம்மந்த்ரம் சொல்லி வேண்டுகிறான்—அதீஹிபோ: ஸாவித்ரீம் போ அநுப்ரூஉஉஹி ॥

ஆசார்யன் வடுவுக்கு உபதேசம் : [இருவரும் பட்டினால் போர்த்தப்பட்டு] ஆசார்யன் தனக்கு வலது புறமாக வடுவை உட்கார்த்தி மந்த்ரம் சொல்லுவது—ஓம் கணாநாம் த்வா கணபதிகும் ஹவாமஹே கவிம் கவீநாம் உபமச்ர வஸ்தமம் । ஜ்யேஷ்டராஜம் ப்ரம்ஹணாம் ப்ரம்ஹணஸ்பத ஆந: ச்ருண்வந்நூதிபி: ஸீதஸாதநம் ॥ ஓம் பூ: தத்ஸவிது: வரேண்யம் । புவ: பர்க்கோ தேவஸ்ய தீமஹி । ஸு॒வ: தியோ யோந: ப்ரசோதயாத் । ஓம் பூர்புவ: தத்ஸவிதுர்வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி । ஸு॒வ: தியோயோந: ப்ரசோதயாத் । ஓம் பூர்புவ: ஸு॒வ: தத்ஸ விதுர்வரேண்யம் பர்கோதேவஸ்ய தீமஹி தியோ யோந: ப்ரசோதயாத் ॥—என்று உச்சரிக்க முடிந்தவரை யதா சக்தி சொல்லி வைப்பது. தைத்திரீய சாகைக்

காரருக்கு காயத்ரீ ஆரம்பமான பிறகுதான் ஸர்வ வேதாரம்பமும் ஏற்படுகிறது. பிறகு கர்மாங்க தேவதா ப்ரீதியாக பத்து ப்ராம்ஹணர்களுக்கு குறையாமல் சக்தியை அனுஸரித்து பூர்ண பலம்—தேங்காய் தாம்பூல ஸஹிதம் தக்ஷிணையும் விருந்தும் அளித்து அவர்களின் ஆசியைப் பெற்றுக் கொள்ளவும்.

குமாரன் தேசம் காலம் ப்ரார்த்தித்து—மம மேதாத்யபி வ்ருத்தித்வாரா ப்ரம்ஹசர்ய வ்ரத க்ரஹணாங்கம் ஸப்த பலாச ஸமித் ஹோமம் கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய ஆசார்யன் செய்ய வேண்டியது— [நெய்யில் நன்கு தோய்க்கப்பட்ட நுணியுடன் கூடிய ஏழு பலாச ஸமித்துக்களை வைத்துக் கொண்டு]—அக்நயே ஸமித மாஹார்ஷம் ப்ருஹதே ஜாத வேதஸே । யதாத்வமக்நே ஸமிதா ஸமித்யஸ ஏவம்மாம் மேதயா ப்ரஜ்ஞயா ப்ரஜயா பசுபி: ப்ரம்ஹ வர்ச்ச ஸேநாந்நாத்யேந ஸமேதயஸ்வாஹா । என்று ஒரு ஸமித் தால் ஹோமம் அக்நய இதம் நமம ॥ அக்நயே ஸமிதா வாஹார்ஷம் ப்ருஹதே ஜாதவேதஸே । யதாத்வ மக்நே ஸமிதா ஸமித்யஸ ஏவம்மாம் மேதயா ப்ரஜ்ஞயா ப்ரஜயா பசுபி: ப்ரம்ஹ வர்ச்சஸேநாந்நாத்யேந ஸமேதயஸ்வாஹா ॥ என்று இரண்டு ஸமித்துகளால் ஹோமம். அக்நய இதம் நமம ॥ அக்நயே ஸமித: ஆஹார்ஷம் ப்ருஹதே ஜாத வேதஸே । யதாத்வமக்நே ஸமிதா ஸமித்யஸ ஏவம்மாம் மேதயா ப்ரஜ்ஞயா ப்ரஜயா பசுபி: ப்ரம்ஹவர்ச்ச ஸேநாந் நாத்யேந ஸமேத யஸ்வாஹா ॥ என்று நான்கு ஸமித்து களால் ஹோமம். அக்நயே இதம் நமம ॥ மேலே ஆசார்யன் ஸம்ஸ்தா ஜபாந்தம் கர்மாவை பூர்த்தி செய்ய வேண்டியது.

பிறகு ப்ரம்ஹசர்யாச்ரம வ்ரத க்ரஹணம். ஆசார்யன் ப்ரம்ஹசாரிக்கு செய்யவேண்டிய வ்ரத நியமங்களை



அறிவுறுத்துகிறார்.—ப்ரம்ஹசாரீ ந காயேத் நரோதேத் ந ந்ருத்ய தர்சீஸ்யாத் இத்யாதீநி ப்ரம்ஹசாரி ப்ரகரணஸ்த தர்ம: ॥ மேலே தேசம் காலம் ப்ரார்த்தித்து—மம ப்ரம்ஹசர்யாச்ரம விகித ஸகல வ்ருதாநாம் க்ரஹணம் யாவத் ஸமாவர்த்தநம் யதா சக்தி கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய குறிப்பிட்ட தேவதையை குறித்து சொல்லுவது—அக்நே வ்ரதபதே வ்ரதம் சரிஷ்யாமி தச்ச்சகேயம் தந்மே ராத்ய தாம் । வாயோ வ்ரதபதே வ்ரதம் சரிஷ்யாமி தச்சகேயம் தந்மே ராத்யதாம் । ஆதித்ய வ்ரதபதே வ்ரதம் சரிஷ்யாமி தச்சகேயம் தந்மே ராத்யதாம் । வ்ரதாநாம் வ்ரதபதே வ்ரதம் சரிஷ்யாமி தச்சகேயம் தந்மே ராத்யதாம் ।—இந்த ப்ரகாரமாக வ்ரத க்ரஹணம் செய்து ஸமாவர்த்தந கர்மா வில் இவ்வ்ரத தியாகம் செய்ய வேண்டுமென கூறப் பட்டுள்ளது. பிறகு குரு வந்தனம்/ குரவே வரம் [பசு] ததாதி என்று.

மேலே ஆசார்யன் மாணவனை எழுந்திருக்கச் செய்வது—உதாயுஷா ஸ்வாயுஷோ தோஷதீநாகும் ரஸே நோத் பர்ஜந்ய்ஸ்ய சுஷ்மேணோதஸ்தாம ம்ருதாகும் அநு ॥ ஆசார்யன்: ஸூர்யைஷதே புத்ரஸ்தம் தே பரிததாமி । வடு: பரிதேஹி ॥

ஆசார்யனோ/ப்ரம்ஹசாரியோ ஆதித்யனை குறித்து—தச்சக்ஷுர்தேவஹிதம் புரஸ்தாச்ச்சுக்ரமுச்சரத் । பச்யேம சரத: சதம் ஜீவேம சரத: சதம் நந்தாம சரத: சதம் மோதாம சரத: சதம் ச்ருணவாம சரத: சதம் ப்ரப்ரவாம சரத: சதம் அஜீதா: ஸ்யாம சரத: சதம் ஜ்யோக்ச ஸூர்யம் த்ருசே ॥

பிறகு ஆசார்யன் தண்டம் கொடுப்பது:—அக்நிஷ்ட ஆயு: ப்ரதராம் க்ருணோத்வக்நிஷ்டே புஷ்டிம் ப்ரதராம் ததாது இந்த்ரோ மருத்பி ரிஹதே ததாது ஆதித்யஸ்தே வஸுபிராததாது ।

மந்த்ரமில்லாமல் பிக்ஷா பாத்ரத்தை குமாரனிடம் கொடுத்து சொல்வது—பிக்ஷாசர்யம் சர ॥ ப்ரம்ஹசாரீ ஓம் என்று ஆக்ஞை பெற்று முதலில் தாயாரிடம் பிக்ஷை கேட்க—பவதீ பிக்ஷாம் தேஹி ॥ தாயார் பிக்ஷை [இங்கு அந்நம்] இட முதல் பிக்ஷையை கொண்டு வந்து ஆசார்யனிடம் நிவேதநம் செய்தல்—பைக்ஷ்யம் போ: । ஆசார்யன் அதை ஏற்றுக் கொள்வது । பிறகு ஜ்ஞாதி பந்துக்களிடம் பிக்ஷை ஏற்க [இங்கு அரிசி].

பிறகு ஆசார்யன் முன்பளித்த வஸ்த்ரத்தை திரும்ப பெற்றுக்கொள்வது—யஸ்ய தே ப்ரதமா வாஸ்ய கும் ஹராம: தம்த்வா விச்வே அவந்து தேவா: । தம்த்வா ப்ராதர: ஸு ஹ்ருதோ வர்த்தமாந மநு ஜாயந்தாம் பஹவ: ஸுஜாதம் ॥

பின் தேசம் காலம் ப்ரார்த்தித்து—மம அஸ்ய குமாரஸ்ய உபநயநாங்கம் த்ரிவ்ருதந்ந ஹோமம் புண்யாக வாசநஞ்ச கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய யுக்த ரீதியில் செய்ய வேண்டியது.

இங்கு ஸாவித்ரீ க்ரஹணாங்கம் த்ரயஹ வ்ரதம் மூன்று நாட்களுக்கு கூறப்படுகிறது. வ்ரத நியமங்களை ஆசார்யன் கூறுகிறார். ஆசார்யன்—புளி உப்பு உளுந்து பருப்பு முதலிய தான்யம் மது மாம்ஸம் இவை உண்ணத் தகுந்தவையல்ல. படுக்கையில் படுப்பது மண்பாத்திரத்தில் ஜலபானம், தான் சாப்பிட்ட மிச்சத்தை சூத்ரனுக்கு அளிப்பது பகலில் தூங்குவது போன்றவையு ஒதுக்கத்தக்கவை. இரண்டு வேளையும் பிக்ஷை எடுத்துண்ணவேண்டும். மாலை தொடங்கி இரு வேளையும் அல்லது மாலை மாலையிலோ ஸமிதாதாநம் செய்ய வேண்டும். இதைக் கேட்ட ப்ரம்ஹசாரீ தேசம் காலம் ப்ரார்த்தித்து—மம ஸாவித்ரீ வ்ரத க்ரஹாதிகார ஸித்யர்த்தம் அக்ந்யாதி



ஸந்நிதௌ யதாசக்தி த்ரயஹ வ்ரத க்ரஹணம் கரிஷ்யே. இதி ஸங்கல்ப்ய குறிப்பிட்ட தேவதையை குறித்து ப்ரார்த்தனை செய்வது—அக்நே வ்ரதபதே வ்ரதம் சரிஷ்யாமி தச்ச்சகேயம் தந்மே ராத்யதாம் । வாயோ வ்ரதபதே வ்ரதம் சரிஷ்யாமி தச்ச்சகேயம் தந்மே ராத்யதாம் । வ்ரதாநாம் வ்ரதபதே வ்ரதம் சரிஷ்யாமி தச்ச்சகேயம் தந்மே ராத்யதாம் । என்று. மூன்று நாள் வ்ரதம் இருந்து நான்காவது நாள் யுக்தரீதியில் விஸர்க்கம் செய்ய வேண்டியது.

பிறகு [அக்நி கார்யம்] <u>ஸமிதாதாநம்</u>.

இங்கு [ப்ராத: காலஸ்ய அதீதத்வாதர்தாத் ஸாயமுபக்ரம்ய] மாலை தொடங்கி இருவேளையும் அல்லது மாலை மாலையோ செய்யவேண்டும். ப்ரம்ஹசாரீ ஆசமநம் ப்ராணாயாமம் செய்து—மம உபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம் ஸாயம் / ப்ராத: அக்நிகார்யம் / ஸமிதாதாநம் கரிஷ்யே இதி ஸங்கல்பம் செய்து—அக்நியை முன்பாக வைத்துக் கொண்டு—ஓம் யதாஹ தத் வஸவ: கௌர்யஞ்சித் பதிஷிதாம் அமுஞ்சதா யஜத்ரா: । ஏவாத்வம் அஸ்மத் ப்ரமுஞ்ச அவ்யயகும் ப்ராதார் யக்நே ப்ரதராந்த ஆயு: ॥ என்று அக்னியை பரிஸமுஹ்ய பரிஸ்தீர்ணம் போட்டு — பரிஷேசநம் அதிதே அநு மந்யஸ்வ என்று அக்நியின் தென்புறம் மேற்கிலிருந்து கிழக்காக தீர்த்தம் விடவும் । அநுமதே அநுமந்யஸ்வ என்று அக்னியின் மேற்குபுறம் தெற்கிலிருந்து வடக்காக தீர்த்தம் விடவும். ஸரஸ்வதே அநு மந்யஸ்வ என்று அக்னியின் வடக்குபுறம் மேற்கிலிருந்து கிழக்காக தீர்த்தம் விடவும். தேவஸவித: ப்ரஸுவ என்று [வடக்கும் கிழக்கும் சேரும் இடம்] ஈசான்ய மூலையில் ஆரம்பித்து ப்ரதக்ஷிணமாக மறுபடி அதே இடத்தில் முடியும்படி தீர்த்தம் விடவும்—இவ்விதம் பரிஷேசநம் செய்து—எட்டு ஸமித்துகளால் ஒவ்வொரு ஸ்வாஹா

காரத்திற்கும் ஒன்று ஒன்றாக ஹோமம் செய்யவும். ஓம்பூ: ஸ்வாஹா—அக்நய இதம் நமம। புவ ஸ்வாஹா—வாயவ இதம்நமம। ஸுவ: ஸ்வாஹா—ஸுர்யாய இதம் நமம। ஓம்பூர் புவஸ்ஸுவஸ் ஸ்வாஹா—ப்ராஜாபதய இதம் நமம॥ ஏஷாதே அக்நே ஸமித்தயா வர்த்தஸ்வச ஆப்யாயஸ்வ। வர்த்திஷீ மஹிசவயம் ஆசப்யாஸிஷீமஹி ஸ்வாஹா—அக்நய இதம் நமம॥ மேதாம் ம இந்த்ரோ ததாது மேதாம் தேவீ ஸரஸ்வதீ। மேதாம் மே அச்விநௌ உபாவாதத்தாம் புஷ்கரஸ்ரஜௌ ஸ்வாஹா—இந்த்ராய ஸரஸ்வத்யா அச்விப்யாம் இதம் நமம॥ அப்ஸராஸுச யா மேதா கந்தர்வேஷுச யந்மந:। தைவீம் மேதா மநுஷ்யஜா ஸாமாம் மேதா ஸுரபி: ஜுஷதாகும் ன்வாஹா—மேதாயா இதம் நமம॥ ஆமாம் மேதா ஸுரபி: விச்வரூபா ஹிரண்ய வர்ணா ஜகதீ ஜகம்யா। ஊர்ஜஸ்வதி பயஸா பிந்வ மாநா ஸாமாம் மேதா ஸுப்ரதீகா ஜுஷதா கும் ஸ்வாஹா—மேதாயா இதம் நமம॥ பிறகு முன்போல் யதாஹதத்....... ப்ரதராந்ந ஆயு:। என்று பரிஸமுஹ்ய பரிஷேசநம் [முன்போல் தென்புறம் ஆரம்பித்து] — அதிதே அந்வ மக்குஸ்தா:। ஸரஸ்வதே அந்வ மக்குஸ்தா:। தேவஸவித ப்ராஸாவீ: என்று॥ பரிஸ்தீர்ண விஸர்க்கம் செய்து அக்நியை நோக்கி ப்ரார்த்தனே—யத்தே அக்நே தேஜஸ் தேநா ஹம் தேஜஸ்வீ பூயாஸம் யத்தே அக்நே வர்ச்சஸ் தேநா ஹம் வர்ச்சஸ்வீ பூயாஸம் யத்தே அக்நே ஹரஸ்தேநா ஹம் ஹரஸ்வீ பூயாஸம்॥ மயி மேதாம் மயிப்ரஜாம் மய்யக்நி: தேஜோததாது மயிமேதாம் மயி ப்ரஜாம் மயீந்த்ர இந்த்ரியம் ததாது மயிமேதாம் மயி ப்ரஜாம் மயி ஸுர்யோ ப்ராஜோததாது॥ மாநஸ்தோகே தநயே மாந ஆயுஷி மாநோ கோஷு மாநோ அச்வேஷு ரீரிஷ:। வீராந் மாநோ ருத்ர பாமிதோ வதீர் ஹவிஷ் மந்தோ நமஸா விதேமதே॥ பஸ்மா தரிக்க—மேதாவீ பூயாஸம் தேஜஸ்வீ பூயாஸம் ஓஜஸ்வீ பூயாஸம் வர்ச்சஸ்வீ பூயாஸம் ப்ரம்ஹ வர்ச்சஸீ பூயாஸம் ஆயுஷ்மாந் பூயாஸம்



அந்நாதோ பூயாஸம் ஸ்வஸ்திமாந் பூயாஸம்॥ ஸ்வஸ்தி. ச்ரத்தாம் மேதாம் யச: ப்ரஜ்ஞாம் வித்யாம் புத்திம் ச்ரியம் பலம் ஆயுஷ்யம் தேஜ ஆரோக்யம் தேஹிமே ஹவ்ய வாஹந॥ என்று அக்நி ப்ராத்தனை, நமஸ்காரம் அபிவாதநம்। அக்நயே நம:॥ மந்த்ர ஹீநம் க்ரியா ஹீநம் பக்தி ஹீநம் ஹுதாசந। யத்ஹுதம்து மயாதேவ பரிபூர்ணம் ததஸ்துதே॥ ப்ராயச்சித்தாநி அசேஷாணி தப: கர்ம ஆத்மகாநிவை। யாநி தேஷாம் அசேஷாணாம் கிருஷ்ணாநு ஸ்மரணம்பரம்॥ ஸ்ரீ க்ருஷ்ணாய நம:॥ அபிவாதநம் அருகில் உள்ள பெரியோர்களுக்கும் உண்டு.

பிறகு மாத்யாந்ஹீகம் செய்யவும்.

—०—

## ॥ சதுர்த்த திவஸ க்ருத்யம் ॥

நான்காவது நாள் காலை ஆசார்யன் குமாரன் ஸ்னனம் செய்து நித்ய கர்மாக்களை முடித்து கிழக்கு முக மாக உட்கார்ந்து தேசம் காலம் ப்ரார்த்தித்து த்ரிவ்ருதந்ந ஹோமம் புண்யாகவாசநம் ததங்கம் கணபதி பூஜநம் கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய ஆசார்யனே அக்நி ப்ரதிஷ்டை செய்து மயிக்ருண்ஹாமி இத்யாதி வ்யாஹ்ருத்யந்தம் செய்து அந்ந ஹோமம் செய்து உபஹோமங்களும் செய்து ஸம்ஸ்தா ஜபாந்தம் செய்து புண்யாகவாசநம் செய்து ப்ரம்ஹசாரீ தேச காலம் ப்ரார்த்தித்து—மயா ஸ்வீ க்ருதஸ்ய த்ரயஹ வ்ரதஸ்ய விஸர்க்கம் கரிஷ்யே. இதி உத்தேசித்த தேவதையை குறித்து சொல்லுதல்—அக்நே வ்ரதபதே த்ரயஹ வ்ரதம சாரிஷம் ததசகம் தந்மே ராதி। வாயோ வ்ரதபதே த்ரயஹ வ்ரதம சாரிஷம் தத சகம் தந்மே ராதி॥ வ்ரதாநாம் வ்ரதபதே த்ரயஹ வ்ரதம சாரிஷம் ததசகம் தந்மே ராதி॥ என்று வ்ரத விஸர்க்கம்.

—*—

## ॥ வேத வ்ரதோபாகரண ப்ரயோக: ॥

[ஸமாவர்தனத்திற்கு முன்பாக ஆசார்யன் மூலம் செய்யப்பட வேண்டிய கர்மாக்கள் ॥ யுக்தமான இடங்களில் ப்ரம்ஹசாரீ செய்யலாம் ॥

ஆசார்யன் ப்ரம்ஹசாரியுடன் நதியிலோ குளத்திலோ ஸ்நாநம் செய்து நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்து கிழக்கு முகமாக உட்கார்ந்து தனது வலது புறம் ப்ரம்ஹசாரியை உட்கார்த்தி தேசம் காலம் ப்ரார்த்தித்து—அஸ்ய-சர்மணோ ப்ரம்ஹசாரிணோ வேதாத்யயநாதிகார ஸித்தி த்வாரா ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம் ப்ராஜாபத்ய ஸௌம்ய ஆக்நேய வைச்வ தேவாக்ய சதுர்ணாம் காண்ட வ்ரதாநாம் உபாகரணாதி தந்த்ரேண கரிஷ்யே ததங்கம் கணபதி பூஜநம் புண்யாகவாசநம் நாந்தீ ச்ராத்தம்ச கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய யுக்தமான ரீதியில் செய்யவும்.

லௌகிகாக்நி ப்ரதிஷ்டை செய்து பரிஸ்தரணம் போட்டு பரிஷேசனம் செய்து மயிக்ருண்ஹாமி இத்யாதி வ்யாஹ்ருத்யந்தம் செய்து விசேஷ ஹோமம்—ஸதஸஸ்பதிமத்புதம் ப்ரியம் இந்த்ரஸ்ய காம்யம் । ஸநிம் மேதா மயாஸிஷம் ஸ்வாஹா—ஸதஸஸ் பதய இதம் நமம ॥ ப்ரஜாபதயே காண்டர்ஷயே ஸ்வாஹா—ப்ரஜாபதயே காண்டர்ஷய இதம் நமம ॥ ஸோமாய காண்டர்ஷயே ஸ்வாஹா—ஸோமாய காண்டர்ஷய இதம் நமம ॥ அக்நயே காண்டர்ஷயே ஸ்வாஹா—அக்நயே காண்டர்ஷய இதம் நமம ॥ விச்வேப்யோ தேவேப்ய: காண்டர்ஷிப்ய ஸ்வாஹா । விச்வேப்யோ தேவேப்ய: காண்டர்ஷிப்ய இதம் நமம॥ மேலே இமம்மே வருண இத்யாதி பரிஷேக விஸர்காந்தம் ஆசார்யனே செய்து முடிக்கவும்.



பிறகு ப்ரம்ஹசாரீ குறிப்பிட்ட தேவதையை உத்தேசித்து அக்நி ஸந்நிதியில் ப்ரார்த்தனை—அக்நே வ்ரதபதே வ்ரதம் சரிஷ்யாமி தச்சகேயம் தந்மே ராத்யதாம் । வாயோ வ்ரதபதே வ்ரதம் சரிஷ்யாமி தச்சகேயம் தந்மே ராத்யதாம் । ஆதித்ய வ்ரதபதே வ்ரதம் சரிஷ்யாமி தச்சகேயம் தந்மே ராத்யதாம் । வ்ரதாநாம் வ்ரதபதே வ்ரதம் சரிஷ்யாமி தச்சகேயம் தந்மே ராத்யதாம் என்று சொல்லவும். பிறகு ஆசார்யன் ஸம்ஸ்தா ஜபாந்தம் செய்து பூர்த்தி செய்வார். இங்கு த்ரிவ்ருதந்ந ஹோமமில்லை. ப்ரம்ஹசாரீ அவனுக்கு விதித்துள்ள வ்ரதம் அனுஷ்டித்து, வேத அத்யயநம் செய்வான்.

—o—

## ॥ வேத வ்ரத உத்ஸர்ஜநம் ॥

ஆசார்யன் ப்ரம்ஹசாரீ ஸஹிதம் நதி குளத்தில் ஸ்நாநம் செய்து நித்ய கர்மாக்களை முடித்துக் கொண்டு தான் கிழக்கு முகமாக உட்கார்ந்து தனது வலது புறம் ப்ரம்ஹசாரியை அமர்த்தி தேசம் காலம் ப்ரார்த்தித்து—அஸ்ய—சர்மணோ ப்ரம்ஹசாரிணோ வேதாத்யயந அங்கத்வேந ஸ்வீக்ருதாநாம் ப்ராஜாபத்யாதி சதுர்ணாம் காண்டாக்ய வ்ரதாநாம் உத்ஸர்ஜநம் தந்த்ரேண கரிஷ்யே ததங்கம் கணபதி பூஜநம் புண்யாகவாசநம் நாந்தீ ச்ராத்தம் ச கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய யுக்தரீதியாக செய்யவும்.

லௌகிக அக்நி ப்ரதிஷ்டை செய்து மயிக்ருண்ஹாமீத்யாதி வ்யாஹ்ருத்யந்தம் ஹுத்வா வைசேஷிக ஹோமே ஸதஸஸ் பதிம் ப்ரஜாபதிம் காண்டர்ஷிம் ஸோமம்

காண்டர்ஷிம் அக்நிம் காண்டர்ஷிம் விச்வேதேவாந் காண்டர்ஷிம் என்று ஆஜ்யேந ஹுத்வா இமம்மே வருண இத்யாதி பரிஷேக விஸர்காந்தம் ஆசார்யனே செய்யவும்.

ப்ரம்ஹசாரீ குறிப்பிட்ட தேவதையை அக்நி ஸந்நிதியில் ப்ரார்த்திப்பது-அக்நேவ்ரதபதே வ்ரதம சாரிஷம் ததசகம் தந்மேராதி । வாயோ வ்ரதபதே வ்ரதமசாரிஷம் ததசகம் தந்மே ராதி । ஆதித்யவ்ரதபதே வ்ரதம சாரிஷம் ததசகம் தந்மேராதி । வ்ரதாநாம் வ்ரதபதேவ்ரதமசாரிஷம் ததச கம் தந்மே ராதி । என்று வ்ரத விஸர்க்கம் செய்வது, ஆசார்யன் மேலே ஸம்ஸ்தா ஜபாந்தம் செய்து பூர்த்தி செய்வார், இங்கும் த்ரிவ்ருதந்த ஹோமம் இல்லை.

—o—

## ॥ சுக்ரிய வ்ரதோபாகரணம் ॥

ஆசார்யன் சந்த்ராநுகூல்ய சுப திநத்தில் கிழக்கு முகமாக தானும் தனது வலப் புறம் ப்ரம்ஹ சாரியும் உட்கார்ந்து தேசம் காலம் ப்ரார்த்தித்து—அஸ்ய ப்ரம்ஹசாரிணோ வேதாத்யயநாதிகாரஸித்தி த்வாரா ஸ்ரீபரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் ஸௌம்ய வ்ரதாந்தர்கத சுக்ரிய வ்ரத உபாகரணம் கரிஷ்யே ததங்கம் கணபதி பூஜனம் புண்யாக வாசநம் நாந்தீ ச்ராத்தம் ச கரிஷ்யே இதி ஸங்கல்பம் செய்து யுக்த ரீதியில் செய்யவும். மாலை ஹோமம் செய்து முடித்த பிறகு ஸூர்ய அஸ்தமநத்திற்கு பின் க்ராமத்தின் கிழக்கிலோ மேற்கிலோ ஒரு ஜல ஸமீபம் சென்று அவ்விடம் கிழக்குமுகமாக இருவரும் அமர்ந்து தேசம் காலம் ப்ரார்த்தித்து சுக்ரிய வ்ரதாங்கம் லௌகிகம் அக்நிம் பிரதிஷ்டை செய்து ப்ராணாயாமாந்தம் செய்து அக்நியின் இடது பாகத்தில் உதகும்பம் வைத்து மதந்தி தேவதை



வருணன் ஆவாஹநம் செய்து—நமோ வாசெ யாசோதிதா யாசாநுதிதா தஸ்யை வாசெ நமொ நமொ வாசெ நமொ வாச ஸ்பதயெ நம ருஷிப்யொ மந்த்ர க்ருத்ப்யொ மந்த்ர பதிப்யொ மாமா ம்ருஷயொ மந்த்ர க்ருதொ மந்த்ர பதய: பராதுர்மா ஆஹ ம்ருஷீந் மந்த்ர க்ருதொ மந்த்ர பதீந் பராதாம் வைச்வ தேவீம் வாச முத்யாஸம் சிவா மதஸ்தாம் ஜுஷ்டாம் தெவெப்ய: சர்ம மெத்யௌ: சர்ம ப்ருதிவீ சர்ம விச்வம் இதம் ஜகத் । சர்ம சந்த்ரச்ச ஸூர்ய்ச்ச சர்ம ப்ரம்ஹ ப்ரஜா பதீ । பூதம் வதிஷ்யெ புவநம் வதிஷ்யெ தெஜொ வதிஷ்யெ யசொ வதிஷ்யெ தபொ வதிஷ்யெ ப்ரம்ஹ வதிஷ்யெ ஸத்யம் வதிஷ்யெ தஸ்மா அஹமிதம் உபஸ்தரணம் உபஸ் த்ருண உபஸ்தரணம் மெ ப்ரஜாயெ பசூநாம் பூய்ாஸம் ப்ராணா பாநௌ மாமா ஹாஸிஷ்டம் மது மநிஷ்யெ மது ஜநிஷ்யெ மது வக்ஷ்யாமி மது வதிஷ்யாமி மது மதீம் தெவெப்யொ வாசமுத்யாஸம் சுச்ரூஷெண்யாம் மநுஷ்யெப்ய: தம் மா தேவா அவந்து சொபாயெ பிதர: அநுமதந்து ॥ ஓம் சாந்திச் சாந்திச் சாந்தி: ॥

மேலே அக்நி கார்யம் வ்யாஹ்ருத்யந்தம் ஹுத்வா ப்ரோக்ஷணீம் தர்வீம் ஆஜ்யஸ்தாலீம் ஔதும்பர ஸமித்துக்கள் நான்கு, வஸ்த்ரம் தர்ப்பம் இவற்றை சேகரித்து ப்ரோக்ஷணீ ஸம்ஸ்காரம் முதல் பரிஷேகாந்தம் வரை செய்து ஸமித்ஹோமம்—ஓம் ப்ருதிவீ ஸமித் । தாமக்நி: ஸமிந்தே । ஸாக்நிகும் ஸமிந்தே । தாமஹகும் ஸமிந்தே । ஸாமா ஸமித்தா । ஆயுஷாதேஜஸா । வர்ச்சஸா ச்ரியா । யசஸா ப்ரம்ஹவர்ச்சஸேநா । அந்நாத்யேந ஸமிந்தாகும் ஸ்வாஹா—அக்நய இதம் நமம ॥ ஓம் அந்தரிக்ஷகும் ஸமித் । ஸாவாயுகும் ஸமிந்தே । தாமஹகும் ஸமிந்தே । ஸாமா ஸமித்தா । ஆயுஷா தேஜஸா । வர்ச்சஸா ச்ரியா । யசஸா ப்ரம்ஹவர்ச்சஸேநா । அந்நாத்யேந ஸமிந்தாகும்

ஸ்வாஹா-வாயவ இதம் நமம। ஓம் த்யெள: ஸமித்। தாமாதித்ய: ஸமிந்தே। ஸாதித்யகும் ஸமிந்தே। தாமஹகும் ஸமிந்தே। ஸாமா ஸமித்தா। ஆயுஷா தேஜஸா। வர்ச்சஸா ச்ரியா யசஸா ப்ரம்ஹவர்ச்ச ஸேநா। அந்நாத்யேந ஸமிந்தாகும் ஸ்வாஹா—ஆதித்யாயேதம் நமம ॥ ஓம் ப்ராஜா பத்யாமே ஸமிதஸி ஸபத்நக்ஷயணீ। ப்ராத்ருவ்யஹா மேஸி ஸ்வாஹா—ப்ரஜாபதய இதம் நமம ॥ பிறகு ப்ராயசித்தார்த்தம் வ்யாஹ்ருதி ஹோமம் செய்து பரிஷேசநம் ॥ இங்கு மதந்திஜபம்—சந்நோ வாத: பவதாம் ....... தந்நோ மாஹாஸீத் இதி ॥ பிறகு ப்ரம்ஹசாரீ வேதாத்யயநாங்கம் அக்ந்யாதி ஸந்நிதௌ சுக்ரிய வ்ரத க்ரஹணம் கரிஷ்யே. இதி ஸங்கல்ப்ய உத்தேசித்த தேவதையை குறித்து—அக்நே வ்ரதபதே வ்ரதம் சரிஷ்யாமி தச்ச்சகேயம் தந்மே ராத்யதாம்। வாயோ வ்ரதபதே ...॥ ஆதித்ய வ்ரதபதே ....॥ வ்ரதாநாம் வ்ரதபதே ...॥ இவைகளால் வ்ரத ஸ்வீகரணம் செய்து ஸௌம்யாநுவாகத்தில் கொஞ்சம் அத்யயநம் செய்து வஸ்திரத்தினால் தலையும் முகமும் நன்கு மூடப்பட்டவனாக க்ராமத்திற்குள் மறுபடி வந்து அன்று இரவு முழுவதும் மௌனமாக இருக்க வேண்டும். சூர்யோதயமானதும் தலை முகம் மூடப்பட்ட வஸ்த்ரத்தை விலக்கி நித்ய கர்மாக்களை செய்து அக்நி கார்யமும் செய்து ஆதித்யனை நோக்கி—வய: ஸுபர்ணா உபஸேதுரிந்த்ரம் ப்ரியமேதா ருஷயோ நாத மாநா:। அபத்வாந்த மூர்ணுஹி பூர்த்தி சக்ஷு: முமுக்த்யஸ் மாந் நிதயேவ பத்தாந் ॥ தச்சக்ஷு: தேவஹிதம் புரஸ்தாச்ச்சுக்ரமுச்சரத் ॥ பச்யேம சரத:சதம் ஜீவேம சரத:சதம் ...,.. ஜ்யோக் ச ஸூர்யம் த்ருசே இதி। உடனே ஆதித்யன் அக்நி கருங்கல் உதகும்பம் பசுங்கன்று ஸ்வர்ணம் இவற்றை பார்க்கவும் ॥

—o—



## ॥ சுக்ரிய வ்ரத உத்ஸர்ஜநம் ॥

ஆசார்யன் ப்ரம்ஹசாரீ ஸஹிதம் செய்யவேண்டிய நித்யகர்மாக்களுக்கு பிறகு கிழக்குமுகமாக தானும் ப்ரம்ஹசாரியும் உட்கார்ந்து தேசம் காலம் ப்ரார்த்தனை செய்த பிறகு—அஸ்ய ப்ரம்ஹசாரிணோ வேதாத்யயநாங்கத்வேந ஸ்வீக்ருதஸ்ய சுக்ரிய வரதஸ்ய உத்ஸர்ஜநம் கரிஷ்யே இதி கணபதி பூஜனம் முதலியவை செய்து லௌகிக அக்நிபிரதிஷ்டை முதல் வ்யாஹ்ருத்யந்தம் வ்ரத உபாகரணத்தைப்போல் செய்து ஸமித்ஹோமத்தில் முக்யமாக த்யெள: ஸமிதிதி ஆரம்பித்து தலைகீழாக—விலோமக்ரமமாக நான்கு ஔதும்பரஸமித்துகளால் ஆஹுதி செய்து பூர்வவத் கும்பம் வைத்து மதந்தி ஜபம் செய்து அந்த ஜலத்தினால் ப்ரம்ஹசாரிக்கு ப்ரோக்ஷணம் செய்து—மாணவனால் ஆதித்ய வ்ரதபதே வ்ரதமசாரிஷம் ததசகம் தந்மேராதி எனத்தொடங்கி தலைகீழாக—வ்யுத்க்ரமபாடமாகச் சொல்லச் செய்து ஹோம சேஷ கார்யம் ஆசார்யனால் செய்து பூர்த்தி செய்யப்படவேண்டும்.

வ்ரத உபாகரணம் ஒவ்வொரு காண்டத்திற்கும் தனித் தனியாகச் செய்யும் பக்ஷத்தில் ஸௌம்ய காண்ட உபாகரணத்திற்கு பிறகு சுக்ரிய வ்ரத உபாகரணம் உத்ஸர்ஜநம் செய்து பிறகு ஸௌம்ய காண்ட உத்ஸர்ஜநம் செய்ய வேண்டும்.

—o—

## ॥ ஸமாவர்தநம் ॥

[முன்பு சொல்லப்பட்ட வேதோபாகரண உத்ஸர்ஜந வ்ரதங்களை அனுஷ்டித்து யதா சக்தி வேதம் அத்யயநம் செய்த பிறகு உத்தராயணத்தில் சுக்லபக்ஷத்தில் ரோஹிணீ ம்ருக திஷ்ய உத்தராபல்குனீ ஹஸ்த சித்ரா விசாகாதி

நக்ஷத்திரங்களில் ஒரு சுப தினத்தில் உபநயந கர்மாவுக்கு ஏற்ற தினத்தில் ஸமாவர்தந கர்மா செய்யப்படவேண்டும். இதற்கு மற்றொரு பெயர் 'ஸ்நாநம்'. இதைச் செய்ய ப்ரம்ஹசாரிக்கு அதிகாரமுண்டு.]

ப்ரம்ஹசாரீ நித்ய கர்மாக்களை முடித்து ப்ராதஸ்ஸமிதாதானத்திற்கு பிறகு ஆசார்ய ஸஹிதம் ஜலஸமீபம் ஒரு சுத்தமான இடத்தில் கிழக்குமுகமாக உட்கார்ந்து தேசம் காலம் ப்ரார்த்தித்து—மம க்ருஹஸ்தாத்யாச்ரம ஸித்தி த்வாரா ஸ்ரீ பரமேச்வர ப்ரீர்த்யர்த்தம் ஸமாவர்தநாக்யம் கர்ம கரிஷ்யே ததங்கம் கணபதி பூஜநம் புண்யாகவாசநம் நாந்தீச்ராத்தம்ச கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்து யுக்த ரீதியில் செய்யவும்.

பிறகு லௌகிக அக்நி ப்ரதிஷ்டை செய்து பரிஸ்தீர்ணம் போட்டு பரிஷேசநம் செய்து மயிக்ருண்ஹாமீத்யாதி வ்யாஹ்ருத்யந்தம் செய்து தர்வீ பலாச ஸமித்து பல்துலக்க அரசு குச்சி உஷ்ணசீதஜலம் கத்தி காளை மாட்டு கோமயம் ஒரு உருண்டை வாஸனையுள்ள சந்தநம் வஸ்த்ரம் குண்டலங்கள் மணி (ஒரு ருத்ராக்ஷம்) மாலை கண்ணாடி ஆஞ்சநம் குடை தண்டம் (மூங்கில்) காலணிகள் க்ராம ப்ரவேசத்திற்கு வாஹநம் இவற்றை சேகரித்து ப்ரதாந ஹோமம் பலாச ஸமித்தால்—இமகும் ஸ்தோம மர்ஹதே ஜாதவேதஸே ரதமிவ ஸம்மஹே மா மநீஷயா। பத்ராஹிந: ப்ரமதி ரஸ்ய ஸகும் ஸத்யக்நே ஸக்யேமா ரிஷாமா வயம் தவ ஸ்வாஹா—ஜாதவேத ஸேக்நய இதம் நமம। பிறகு வ்யாஹ்ருதி ஹோமம் செய்து—த்ரயாயுஷம் ஜமதக்நே கச்யபஸ்ய த்ரயாயுஷம் யத்தேவாநாம் த்ரயாயுஷம் தந்மே அஸ்து த்ரயாயுஷகும் ஸ்வாஹா—அக்நய இதம் நமம ॥ பிறகு இமம்மே வருண இத்யாதி செய்து த்ரிவ்ருதந்ந ஹோமம் புண்யாக வாசநாந்தம் செய்யவும். பிறகு உபநயந காலத்தில் ஸ்வீகரித்த ஸகல ப்ரம்ஹசாரி



வ்ரதங்களையும் விஸர்க்கம் செய்யவும்—அக்நே வ்ரதபதே வ்ரதமசாரிஷம் தத்சகம் தந்மேராதி। இவ்விதம் வாயோ வ்ரதபதே, ஆதித்ய வ்ரதபதே. வ்ரதாநாம் வ்ரதபதே. இத்யாதி சொல்லி யுக்த ரீதியில் விரத விஸர்க்கம் செய்யவும்.

பிறகு உதுத்யம் சித்ரமிதி இரு மந்த்ரங்களால் ஆதித்ய ப்ரார்த்தனை செய்து உத்தரீயம் அஜிநம் வஸ்த்ரம் இதை கீழே வைப்பது. உதுத்தமம் வருண பாசமஸ்மத்ச்ரதாய இதி கௌபீநம் இடுப்பில் கட்டிய வஸ்த்ரம் இவற்றையும் களையவும். அவாதமம் வருணபாச மஸ்மத் ச்சரதாய இதி வேறு வஸ்த்ரம் தரித்து இருமுறை ஆசமநம் செய்யவும். பிறகு மேகலையை எடுத்து விடவும். இம் மந்த்ரம் சொல்லி விமத்யமம் வருணபாச மஸ்மச்சரதாய। தண்டத்தை வைக்க—அதாவய மாதித்ய வ்ரதே தவாநாகஸோ அதிதயேஸ்யாம ॥

பிறகு அஜிநம் வஸ்த்ரம் மேகலை தண்டம் இவற்றை மந்த்ரமின்றி ஜலத்தில் விஸர்ஜநம் செய்ய வேண்டும். திரும்பி அக்நியின் மேற்கு புறம் அமர்ந்து கத்தியை தொட்டு—க்ஷுரோ நாமாஸி ஸ்வதிதிஸ்தே பிதா நமஸ்தே அஸ்து மாமாஹிகும்ஸீ: ॥ என்று. பிறகு மந்த்ரமின்றி வெந்நீரை எடுத்து தடவ—சிவாநொ பவத ஸகும் ஸ்ப்ருசே ॥ ஆப உந்தந்து ஜீவஸே தீர்க்காயுத்வாய வர்ச்சஸே। என்று சொல்லி தென்புறம் கோதாநம் / வபநம் செய்ய. கோதாநத்தின் பொழுது தர்ப்பை நுனி மேலே பார்க்க வைத்துக் கொள்ளவும்—ஓஷதெத்ராய ஸ்வைநமிதி ॥ தர்பையின் மேல் கத்தி வைக்க—ஸ்வதிதேமைநம் ஹிம்ஸீ: ॥ மேலே கோதாநஸ்தாநே தர்பை கேசம் இவற்றை நறுக்குவது—தேவச்ரூரே தாநி ப்ரவபே ॥ பிறகு நாவிதனை அழைப்பது—யத்க்ஷுரேண மர்ச்சயதா ஸுபேசஸா வப்தர்வபஸி கேசச்மச்ரு வர்ச்சயா முகம் மாந ஆயு:

ப்ரமோஷீ: ॥ பிறகு தலைசிகை தவிர தலை முகம் கக்ஷம் கை கால் எல்லாவிடமும் க்ஷவரம் செய்து கொள்ளவும். நகங்களையும் நறுக்கி விடவும். ஸ்நாதகனின் பந்து ஜனங்கள் விழுந்த கேசங்களை காளை கோமயத்தால் ஒன்று திரட்டி உதும்பர தர்ப்பைபுதரிடையே ஒரு குழி வெட்டிப் போடுவார்கள்—இதமஹமமுஷ்யா முஷ்யாயண ஸ்ய பாப்மா நமவகூஹாமி ॥ என்று. ஔதும்பர குச்சியால் பற்களை நன்கு துலக்கி—அந்நாத்யாய வ்யூஹத்வம் தீர்க் காயுத்வாய வ்யூஹத்வம் ப்ரம்ஹவர்ச்சஸாய வ்யூஹத்வம் தீர்க்காயுரஹமந்நாதோ ப்ரம்ஹவர்ச்சஸீ பூயாஸம் ॥ பிறகு ப்ரதாந ஸ்நாநம்—குளிர்ந்த ஜலம் சேர்ந்த சுடுநீ ரால் ஆபோ ஹிஷ்டேதி மூன்று ஹிரண்ய வர்ணா இதி நான்கு பவமாந ஸுவர்ஜந இதி அநுவாகம் பூராவும் சொல்லி— ஸ்நாநம் செய்ய வேண்டியது.

ஸ்நாநம் செய்து இருமுறை ஆசமநம் செய்து வெள்ளை வஸ்த்ரம் தரித்து இரு முறை ஆசமனம் செய்து பந்து ஜனங் களால் கொண்டு தரப்பட்ட ஸர்வ ஸுகந்தமுள்ள சந்த ணத்தை வைத்துக்கொண்டு கிழக்கு முகமாக தேவதா நமஸ் காரம் செய்யவும்—ஓம் நமோ க்ரஹாயசாபி க்ரஹாய்ச। ஓம் நம: சாகஜம் ஜபா ப்யாம் நமஸ்தாப்யோ தேவதா ப்யோயா அபிக்ரஹணீ: ॥ அச்சந்தனத்தை பூசிக்கொள்ள —அப்ஸராஸுசயோகந்தோ கந்தர்வேஷுசயத்யச: ॥ தைவ்யோ யோ மாநுஷோ கந்த: ஸமாமாவிசதாதிஹ ॥ என்று, பிறகு கோடி வஸ்த்ரம் எடுத்து ஜலம் ப்ரோக்ஷித்து —ஸோமஸ்ய தநூரஸிதநுவம் மே பாஹி ஸ்வாமாத நூராவிசசிவா மாதநூராவிச என்று நாபிக்கு கீழ் முழங் காலுக்கு மேலே தரிக்கவும். இதேபோல உத்தரீயமும் தரித்து இரு முறை ஆசமநம் செய்யவும்.

பிறகு அக்நியின் மேற்கு புறம் கிழக்கு முகமாக உட் கார்ந்து ஸ்வர்ணத்தால் மூடப்பட்ட இலந்தை கொட்டை



யாலோ சந்தண கட்டையாலோ செய்யப்பட்ட மணி குண் டலங்களை தர்ப்பையில் கட்டி அக்நியின்மேல் பிடித்துக் கொண்டு ஐந்து மந்த்ரங்களால்—தர்வியால் ஆஹுதி ॥ ஆயுஷ்யம் வர்ச்சஸ்யம் ராயஸ்போஷ மௌத்பிதம் । இதம் ஹிரண்யம் ஆயுஷே வர்ச்சஸே ஜைத்ராயாவிசதாம் மாம் ஸ்வாஹா—ஹிரண்யாயேதம் நமம। ॥ உச்சைர்வாஜி ப்ருத நாஸாஹம் ஸபாஸாஹம் தநம் ஜயம் । ஸர்வா: ஸமக்ரா ருத்தயோ ஹிரண்யேஸ்மிந்த்ஸமா ப்ருதா: ஸ்வாஹா— ஹிரண்யாயேதம் நமம ॥ சுநமஹம் ஹிரண்யஸ்ய பிதுரிவ நாமாக்ர பீஷம் । தம்மா ஹிரண்ய வர்ச்சஸம் கரோது புருஷு ப்ரியம் ப்ரம்ஹவர்ச்சஸிநம் மாகரோது ஸ்வாஹா- ஹிரண்யாயே தம் நமம ॥ ப்ரியம் மா குரு தேவேஷு ப்ரியம் மா ப்ரம்ஹணி குரு ॥ ப்ரியம் விச்வேஷு சூத்ரேஷு ப்ரியம் மா குரு ராஜஸு ஸ்வாஹா-ஹிரண்யாயேதம் நமம॥ இயமோஷதே த்ராய மாணா ஸஹமாநா ஸஹஸ்வதீ । ஸாமா ஹிரண்ய வர்ச்சஸம் கரோது புருஷுப்ரியம் ப்ரம்ஹ வர்ச்சஸிநம் மா கரோது ஸ்வாஹா—ஹிரண்யாயேதம் நமம ॥ குண்டலங்களை உதபாத்ரத்தில் போட்டு—மேலே படித்த மந்த்ரங்களிலுள்ள ஸ்வாஹா காரத்தை விடுத்து மற்றவை சொல்லி மூன்று முறை ப்ரதக்ஷிணமாக சுற்றி அலம்பவும். பிறகு வலது காதில் குண்டலம் தரிக்க— விராஜஞ்ச ஸ்வராஜஞ்சாபிஷ்டிர்யாசநே க்ருஹே । லக்ஷ்மீ ராஷ்ட்ரஸ்ய யாமுகே தயா மாஸ கும் ஸ்ருஜாமஸி ॥ இதே மந்த்ரத்தால் இடது காதிலும் தரிக்க. இரண்டுகாதுகளிலும் தரித்த குண்டலங்களை கீழேவிழாமல் நன்கு பதியச் செய்ய மந்த்ரம்—ருதுபிஷ்ட்வார்தவைராயுஷே வர்ச்சஸே ஸம்வத் ஸரஸ்ய தாயஸா தேந ஸந்நநுக்ருண்ஹாஸீ: ॥ பிறகு கழுத்தில் மணி (ருத்ராக்ஷம்) கட்டிக்கொள்வது—இயம் ஓஷதே த்ராய மாணாஸஹமாநா ஸஹஸ்வதீ । ஸாமா ஹிரண்ய வர்ச்சஸம் கரோது புருஷுப்ரியம் ப்ரம்ஹ ஸ்வர்ச்சஸிநம் மா கரோத்வபாசோஸீ: பிறகு இரண்டு வடம் மாலை அணிதல்—சுபிகே சோபமாரோஹசோப

யந்தீ முகம் மம। முகஞ்ச மம சோபய பூயாகும் ஸஞ்ச பகம் குரு ॥ 1 ॥ யாமாஹரஜ்ஜமதக்நி: ச்ரத்தாயை காமாயாஸ்யை ॥ இமாம் தாம் ப்ரதிமுஞ்சேஹம் பகேநஸஹ வர்ச்சஸா ॥ 2 ॥ கண்களுக்குமைதீட்டுதல்—யதாஞ்ஜநம் த்ரை ககுதம் ஜாதகும் ஹிமவத உபரி। தேந வாமாஞ்ஜே ஹம் பகேந ஸஹ வர்ச்சஸா மயிபர்வத பூருஷம் ॥ இரண்டு கண்களுக்கும் ஏக காலத்தில் முடியாவிட்டால் முதலில் இடது கண்ணில் இட்டு பிறகு வலது கண்ணில் இடவும்.

பிறகு கண்ணாடியில் தன்னை பார்த்துக்கொள்ளுதல்- யந்மே மந: பராகதம் யத்வாமே அபராகதம்। ராஜ்ஞா ஸோமேந தத் வயமஸ்மாஸு தாரயாமஸி ॥ பிறகு மூங்கில் தண்டத்தை பெற்றுக்கொண்டு சொல்லுவது—தேவஸ்ய த்வாஸவிது: ப்ரஸவே அசவிநோர் பாஹுப்யாம் பூஷ்ணோ ஹஸ்தாப்யாம் ப்ரதிக்ருண்ஹாமி। மூன்று முறை அதை உருவி விட—இந்த்ரஸ்ய வஜ்ரோஸ்யச்விநௌ மா பாதம் ॥

பிறகு ஒரு மந்திரத்தால் தண்டத்தை சிரஸுக்குமேல் மும்முறை ப்ரதக்ஷிணமாக சுற்றுவது—வேகவேஜயாஸ்மத் த்விஷத: தஸ்கராந்த்ஸரீஸ்ருபாந்ச்ச்வாபதாந்ரக்ஷாகும் ஸி பிசாசாந் பௌருஷேயாத் பயாந்நோ: தண்டரக்ஷவிச் வேஸ்மாத் பயாத் ரக்ஷ ஸர்வதோ ஜஹி தஸ்கராநநக்ந: ஸர்வ வ்ருக்ஷேஷு ஜாயஸேத்வ கும் ஸபத்நஹா। ஜஹி சத்ருகணாந்த்ஸர்வாந்த் ஸமந்தம் மகவாநிவ। பிறகு ஒரு மந்த்ரம் சொல்லி கால்களில் பாதரக்ஷை அணிதல்— ப்ரதிஷ்டேஸ்தோ தேவதேமா மா ஸந்தாப்தம்॥ அடுத்து குடையைப் பெற்றுக் கொள்ளுதல்—ப்ரஜா பதே : சரணம ஸி ப்ரம்ஹணச்சதி:।

பிறகு ரதம்—குதிரை—யானை ஏதோ ஒரு வாஹன மேறி ஸ்நாதகன் மதுபர்க பூஜை செய்பவர் வீட்டை அடைகிறான். ரதத்தில் ஏறினால்—ரதந்தரமஸி வாம



தேவ்யமஸி। ப்ருஹதஸ்யம் கௌந்யங்காவபிதோ ரதம் யௌத்வாம் தம் வாதா க்ரமநு ஸஞ்சரந் தௌ தூரே ஹேதி ரிந்த்ரியாவாந் பதத்ரீ தேநோக்நய: பப்ரய: பார யந்து। அயம் வா மச்விநாரதோ மாது:க்கே மாஸுகேரி ஷத் । அரிஷ்ட: ஸ்வஸ்திகச்சது விவிக்நந்நபிதா ஸத:। இஹ த்ருதி ரிஹ வித்ருதி ரிஹரந்தி ரிஹரமதாம் ॥

குதிரைமீதேறினால்—அச்வோஸிஹயோஸி மயோஸ் யத்யோஸி நரோஸ்யர்வாஸி ஸப்திரஸி வாஜ்யஸி வ்ருஷாஸி ந்ருமணா அஸியயுர் நாமாஸி இத்யேகா தசபிரச்வா நாமபிரச்வம் ॥

யானை மீது ஏறினால்—இந்த்ரஸ்யத்வா வஜ்ரேண்ய ப்யுப விசாமி வஹ கால வஹச்ரியம் மாபிவஹ ஹஸ்த்யஸி ஹஸ்தியசஸமஸி ஹஸ்தி வர்சஸமஸி ஹஸ்தியசஸீ ஹஸ்தி வர்ச்சஸீ பூயாஸம் ॥ ஏறிய பிறகு செல்லும் திசையை குறித்து சொல்லிக்கொண்டே செல்லுவது—ஸகும்ஸ்ரவந்து திசோ மயி ஸமாகச்சந்து ஸூந்ருதா: ஸர்வே காமா அபியந்து ந: ப்ரியா அபிஸ்ரவந்து ந: ப்ரியா। பிறகு பூஜகர் வீட்டை அடைந்ததும் இறங்குவார் ॥ அங்கு பூஜகரும் ஸ்நாதகரும் ஒருவருக்கொருவர் பார்த்து — யசோஸி யசோஹம் த்வயி பூயாஸம் ॥ என்று சொல்லி கொள்ளுதல்.

—o—

## ॥ மதுபர்க: ॥

ஸமாவர்தந தினத்தன்று தனது வீட்டிற்கு வந்த ஸ்நாதகனை உபசரித்து கிழக்கு முகமாக உட்கார்த்தி தான் வடக்கு முகமாக உட்கார்ந்து மதுபர்க பாத்திரங் களும் ஸாமான்களும் சேர்த்துக் கொள்வது. (ஹ்ரஸீய: ஸு) நான்கு பாத்திரங்களில் கூர்ச்சம் பாத்யம் அர்க்யம்

ஆசமநம் இவற்றிற்கு தனித்தனியாக தீர்த்தம் வைத்து இலையால் மூடி அப்படியே [ஹ்ரஸீயஸீ] வெண்கலத்தில் தயிர் தேன் நெய் அல்லது தயிர் தேன் நெய் ஜலம் ஸத்துமா என்று வைத்து இலையால் மூடி ஐந்து பாத்திரங்களும் பசு வஸத்ரம் யஜ்ஞோபவீதம் ஆபரணமும் வைத்துக் கொள்வது.

பூஜகர் ஆசமநம் செய்து தேசம் காலம் ப்ரார்த்தித்து உபஸ்திதம் ஸ்நாதகம் மது பர்கேண பூஜயிஷ்யே என்று அர்க இதி த்ரி: ப்ராஹ। பூஜ்ய: குருத இதி ப்ரத்யாஹ। பூஜக: கூர்ச்ச இதி த்ரி: ப்ராஹ। பூஜ்ய: ஸு கூர்ச்ச: என்று சொல்லி கையால் வாங்கி பாதங்களுக் கடியில் கிழக்கு முகமாக கூர்ச்சத்தின் நுனி இருக்கும்படி உட்காருதல் —ராஷ்ட்ர ப்ருதஸ்யாசார்யாஸ்ந்தீ மாத்வத்யோஷம்॥ பூஜக: பாத்யம் இதி த்ரி ப்ராஹ। பூஜ்ய: ஸு பாத்யம் என்று பதில்। பூஜகர் கீழ்வரும் மந்த்ரம் சொல்லி பூஜ்யரின் பாதங்களை அலம்பி விட வேண்டும். முதலில் வலது பாதத்தை அலம்பி பிறகு இடது பாதத்தை அலம்ப வேண்டும்.—ஓம் அஸ்மிந் ராஷ்ட்ரெ ச்ரியமாவெச யாம்யதொ தெவீ: ப்ரதி பச்யாம் யாப:। தக்ஷிணம் பாதமவநெ நிஜெஸ்மிந் ராஷ்ட்ர இந்த்ரியம் ததாமி। ஸவ்யம் பாதமவநெ நிஜெஸமிந் ராஷ்ட்ர இந்த்ரியம் வர்த்தயாமி। பூர்வமந்ய மபர மந்யம் பாதாவ வநெ நிஜெ। தெவா ராஷ்ட்ரஸ்ய குப்த்யா அபயஸ்யாவருத்யை। ஆப: பாதா வநெ ஜநீர் த்விஷந்தம் நிர்தஹம் துமெ। ச்சரணம் பவித்ரம் விததம் புரரணம் யெந பூதஸ் தரதி துஷ்க்ருதாநி। தெந பவித்ரணெ சுத்தெந பூதா:। அதி பாப்மாந மராதிம் த்ரெம। லோகஸ்ய த்வார மர்ச்சிமத் பவித்ரம்। ஜ்யொதிஷ் மத் ப்ராஜமாநம் மஹஸ்வத்। அம்ருதஸ்ய தாரா பஹுதா। தொஹமாநம்। ச்சரணம் நொ லொகெ ஸுதிதாம் ததாது। அக்நிர் மூர்த்தா புவ:। அநுநொத்யாநு மதிரந் விதநுமதெ



த்வம்। ஹவ்ய வாஹகும் ஸ்விஷ்டம்। மேலே பூஜயர் பூஜகரின் கைகளை பற்றிக் கொண்டு—விராஜொ தொஹொஸி மயி தொஹ: பாத்யாயை விராஜ:—என்ற மந்த்ரம் சொல்லவும். பிறகு—மயிதெஜ இந்த்ரியம் வீர்ய மாயு: கீர்த்திர் வர்ச்சொயசொ பலம்—என்ற மந்த்ரம் சொல்லி ஹ்ருத யத்துடன்பூஜகரை அணைத்துக் கொள்ள வேண்டும்.

பூஜகர் வஸ்த்ராலங்கார த்ரவ்யங்களுடன் அர்க்ய ஜலமும் கொண்டு வந்து அர்க்ய மிதி த்ரி: ப்ராஹ। பூஜ்ய: ஸ்வர்க்யம் என்று சொல்லி அர்க்யமுடன் வஸ்த்ரம் முதலானதும் பெற்றுக் கொள்வார்—ஆமாகந் யசஸா ஸகும்ஸ்ருஜ தேஜஸா வர்ச்சஸா பயஸாச தம் மா குருப்ரியம் ப்ரஜாநாம் அதிபதிம் பசூநாம்। பூஜகரால் கொடுக்கப்பட்ட அர்க்ய ஜலத்தை கொஞ்சம் க்ரஹித்து சேஷத்தை திருப்பிக் கொடுக்க அதை பூமியில் விடுவது—ஸமுத்ரம்வ: ப்ரஹிணோம் யக்ஷிதா: ஸ்வாம்யோநி மபிகச்சத। அச்ச்சித்ர: ப்ரஜயா பூயாஸம் மா பராஸேசிமத் பய: என்று॥ பிறகு பெற்றுக் கொள்ளப்பட்ட வஸ்த்ரம் ஆபரணம் இவற்றை தரித்தல், இருமுறை ஆசமநம் செய்தல்.

பூஜக: ஆசமநீயம் இதி த்ரி: ப்ராஹ। பூஜ்ய: ஸ்வாசமநீயம் என்று சொல்லி அம்ருதோபஸ்தரணமஸி இதி ஜலம் ஆசமநம்செய்ய வேண்டும். பிறகு பூஜகர் மதுபர்கம் கொண்டு வந்து மதுபர்க இதி த்ரி: ப்ராஹ। பூஜ்ய: ஸுமதுபர்க: என்று சொல்லி கைகளினால் ஆகாயத்தை நோக்கி அஞ்ஜலி செய்து பெற்றுக் கொள்வது— ஸாவித்ரீ மந்த்ரம் / தேவஸ்யத்வா இத்யாதி சொல்லி॥ பிறகு அதை பூமியில் வைப்பது—ப்ருதிவ்யாஸ்த்வா நாபௌ ஸாதயாமீடா யா: பதே। என்று. வலதுகை கட்டைவிரலை பவித்ர விரலோடு

சேர்த்து ப்ரதக்ஷிணமாக கலக்குவது—யந் மதுநோ மதவ்யம் பரம மந்நாத்யம் ரூபம்। தேநாஹம் மதுநோ மதவ்யேந பரமேண ரூபேண பரமோமதவ்யோந் நாதோ பூயாஸம்। என்று. பிறகு மந்த்ரம் சொல்லி கட்டைவிரலும் பவித்ரவிரலும் சேர்ந்து எடுத்து மும்முறை சாப்பிடுவது—தேஜஸேத்வா ச்ரியை யசஸே பலாயாந் நாத்யாய ப்ராச்நாமி॥ மீதியை தனது ஸ்நேகிதனிடம் கொடுத்து சாப்பிடச் செய்தல். பிறகு அம்ருதாபிதாநமஸி என்று ஆசமநம்.

பிறகு பூஜகர் கௌரிதி த்ரி: ப்ராஹ। பூஜ்ய: ஸுகௌ ரிதி உக்த்வா-காம் உத்ஸ்ருஜதி॥ ———கௌர் தேநுர் பவ்யா ஓம் மாதா ருத்ராணாம் துஹிதா வஸூநாகும் ஸ்வஸா தித்யாநாமம்ருதஸ்ய நாபி:। ப்ரணுவோசம் சிகிதுஷே ஜநாய மா கா மநாகாமதிதிம் வதிஷ்ட। பிபதூதகம் த்ருணாந்யத்து। ஓமுத்ஸ்ருஜத என்று॥ பிறகு பூஜகர் ஸித்தே அக்நே பூதமிதி த்ரி:ப்ராஹ। பூஜ்ய: தத்ஸுபூதம் விராடந்நம் தந்மாக்ஷாயி தந்மேசிய தந்ம ஊர்ஜம் தாஸ் தத்ஸுபூதமிதி ப்ரத்யாஹ। புன: பூஜ்ய ஆஹ। ப்ராம்ஹணாந் போஜயத இதி। பிறகு பூஜகர் ப்ராம்ஹண போஜநத் திற்குபிறகு பூஜ்யருக்கு சேஷமந்நம் அளிப்பார். பூஜ்யர் அதை பெற்றுக்கொள்வார்——த்யௌ ஸ்தே ததாது ப்ருதிவீ ப்ரதி க்ருண்ஹாது ப்ருதிவீ தே ததாது ப்ராண: ப்ரதி க்ருண்ஹாது ப்ராண ஸ்த்வாச்நாது ப்ராண: பிபது॥ பிறகு வேண்டிய மட்டும் சாப்பிடுவார் ———இந்த்ராக்நீ மே வர்ச்ச: க்ருணுதாம் வர்ச்ச: ஸோமோ ப்ருஹஸ்பதி:॥ வர்ச்சோ மே விச்வேதேவா வர்ச்சோ மே தத்த மச்விநா॥ பிறகு சுத்தாசமநம்॥

—*—



# ॥ கந்யாவரணம் ॥

## வாக்தாநம்

ஸமாவர்தநம் செய்து கொண்டு வீட்டிற்கு திரும்பிய குமாரனின் தாய் தந்தை அவனது விவாஹம் பற்றி யோஜித்து தனது கோத்ரமில்லாத ஒரு நல்ல பெண்ணை தேர்ந்து எடுக்க. விவாஹத்திற்கு ஏற்ற ஒரு நல்ல நாளில் இரண்டு அல்லது நான்கு அல்லது எட்டுக்கு மேற்படாத எண்ணிக்கையில் நல்ல ஆடை அலங்காரங்களுடன் கூடிய ப்ராம்ஹணர்களை வரனின் சார்பில் பெண் பார்க்க அனுப் புவது—

அந்ருக்ஷராருஜவ: ஸந்து பந்தாயேபி: ஸகாயோ யந்தி நோ வரேயம்। ஸமர்யமா ஸம்பகோநோ நிநீயாத் ஸம் ஜாஸ்பத்யம் ஸுயமமஸ்து தேவா:॥ என்று மந்த்ரங் களை படித்துக்கொண்டு. ப்ராம்ஹணர்கள் வஸ்த்ராபர ணம், மங்களத்ரவ்யம் இவற்றுடன் பெண் வீட்டை அடை வார்கள்.

அங்கு சென்றதும் நல்ல ஸுப வஸ்த்ரத்தால் மூடப் பட்ட பீடத்தில் கிழக்கு முகமாக நல்ல அலங்காரம் செய் யப்பட்ட கந்நிகையை உட்காரச் செய்து கந்த தாம்பூலாதி ஸௌபாக்ய த்ரவ்யங்களை அவள் கையில் கொடுத்து விட்டு கிழக்கு முகமாக உட்கார்ந்து கணபதி பூஜைசெய்து.

கந்யா பிதாவை ப்ராம்ஹணர்கள் கேட்கிறார்கள்.—— ப்ரவராந்வித ——— கோத்ரோத்பந்நாய ——— ப்ரபௌத்ராய ——— பௌத்ராய ——— புத்ராய ——— சர்மணே வராய॥ ——— ப்ரவரோபேதாம் ——— கோத்ரோத்பந்நாம் ——— ப்ரபௌத்ரீம் ——— பௌத் ரீம் ——— புத்ரீம் ——— நாம்நீம் கந்யாம் பார்யாத்

வாய தர்ம ப்ராஜ்த்வாய வ்ருணீமஹே என்று ॥ கந்யா
தாதா தனது பார்யை பந்து ஜனங்களின் அநுமதி பெற்று
——— வ்ருணீத்வம் என்று சொல்லுவார் பிறகு ப்ரதாஸ்
யாமி என்று மூன்று முறை உரத்த குரலில் பெண்ணின்
தகப்பனுர் சொல்லுவார்.

பிறகு கந்யாதாதா பெண்ணை தனது இடது புறம்
உட்கார்த்தி தானும் கிழக்கு முகமாக உட்கார்ந்து தேசம்
காலம் ப்ரார்த்தித்து கரிஷ்யமாண விவாஹாங்க பூதம்
வாக்தாந மஹம் கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய ததங்கம்
கணபதி பூஜனம் கரிஷ்யே இதி செய்து மம ———நாம்நீம்
கந்யாம் ஜ்யோதிர் விதாதிஷ்டே முஹூர்த்தே தாஸ்யே
இதி வாசா ஸம் ப்ரததே என்று வாக்கு கொடுக்கிறார்.
இமாம் கந்யாம் ப்ரதாஸ்யாமி தேவாக்நி த்விஜ ஸந்நி
தௌ ॥ வாசா தத்தா மயா கந்யா புத்ரார்த்தம் ஸ்வீக்ருதா
த்வயா । கந்யாவலோகந விதௌ நிச்சித ஸ்த்வம் ஸுகீ
பவ ॥ என்று வர பிதாவை நோக்கி சொல்கிறார். அவர்
பதிலாக வாசா தத்தா த்வயா கந்யா புத்ரார்த்தம்
ஸ்வீக்ருதா மயா ॥ வராவலோகந விதௌ நிச்சிதஸ்த்வம்
ஸுகீ பவ ॥ என்று கந்யா பிதாவை நோக்கிச் சொல்லு
வார். பின்பு ப்ராம்ஹணர்கள் ——— சிவா ஆப:
ஸந்து । ஸௌமநஸ்ய மஸ்து । அக்ஷதம் சாரிஷ்டம்
சாஸ்து । தீர்க்கமாயு: ச்ரேய: சாந்தி: புஷ்டி: துஷ்டிச்ச
அஸ்து ॥ ஏதத்வ: ஸத்ய மஸ்து ॥ என்று கூறி ———
ஸமாநீவ ஆகூதி: ஸமாநா ஹ்ருதயா நிவ: ஸமா
நமஸ்துவோ மநோ யதாவ: ஸுஸஹாஸதி ॥ என்று
மந்த்ரம் படிப்பார்கள்.

—*—



## ॥ வரஸ்ய வதூ க்ருஹ கமநம் ॥

விவாஹ தினத்தன்று : காலை வரன் தனது நித்ய கர்மாக்
களை முடித்துக் கொண்டு கணபதி பூஜநம் புண்யாகவாச
நம் நாந்தீச்ராத்தம் அங்குராரோபணம் ப்ரதிஸர பந்தநம்
வபநம் ஸ்நாநம் செய்து நல்ல வஸ்த்ராலங்காரங்களுடன்
இஷ்டதேவதை குரு பெரியோர்களை நமஸ்கரித்து அவர்கள்
அநுமதி பெற்று சக்திக்கு ஏற்றவாறு ஒரு வாஹநமேறி
ஜ்ஞாதி பந்து ஜனங்களுடன் கநிக்ரதத் . . . இயமேவ ஸாயா
. . . இத்யாதி மங்கள ஸூக்த படநம் செய்யும் ப்ராம்ஹ
ணர்கள் முன்செல்ல பூர்ண கலசம் கண்ணாடி புஷ்பம்
அக்ஷதை தீபம் பொறி போன்ற ஸௌபாக்ய த்ரவ்
யங்களை ஏந்திய ஸுமங்கலிகளுடனும் வதூக்ரஹம்
அடைந்து அக்ருஹ வாயிலில் கிழக்கு முகமாக நின்று
கந்யா தாதாவினால் அளிக்கப்படும் பூர்ண கும்ப மரியா
தையை ஏற்று காட்டப்படும் நீராஜந ஹாரத்தியுடன்
க்ருஹத்திற்குள் சென்று மண்டப நடுவே நன்கு அலங்கரிக்
கப்பட்டுள்ள பீடத்தில் கிழக்கு முகமாக உட்கார
வேண்டியது,

—o—

## ॥ மதுபர்க்கேண வரஸ்ய பூஜா ॥

விவாஹ மண்டபத்தில் வந்து அமர்ந்துள்ள வரனின்
எதிரில் கந்யாதாதா வடக்கு முகமாக உட்கார்ந்து தனது
வலப்புறம் பத்நியை அமரச்செய்து தேசம் காலம் ப்ரார்த்
தித்து ——— விவாஹார்த்தம் உபஸ்திதம் வரம் மதுபர்
க்கேண பூஜயிஷ்யே இதி ஸங்கல்ப்ய கூர்ச்சம் முதல் ஸகல
மதுபர்க பூஜைக்குரிய ஸாமக்ரியைகளையும் சேர்த்து வைத்
துக்கொண்டு முன்பு ஸமாவர்தநத்தில் சொல்லியபடி மது
பர்க பூஜை யுக்த ரீதியில் செய்ய வேண்டியது.

(பூஜா விபரம் 47-50 பக்கம் பார்க்க)

—O—

## ॥ கந்யா தாநம் ॥

கந்யா தாதா தன்னால் அளிக்கப்பட்ட வஸ்ராபரணாதிகளால் நன்கு அலங்கரிக்கப்பட்ட மணப்பெண்ணை வரனுக்கு அளித்தல்.

பெண்ணின் தகப்பனார் வதூவரனுக்கு வலதுபுறம் வடக்குமுகமாக அமர்ந்து தனது வலதுபுறம் தனது பத்நியையும் அமர்த்திக்கொண்டு தேசம் காலம் ப்ரார்த்தித்து மம ஸமஸ்த பித்ரூணாம் நிரதிசய ஸாநந்த ப்ரம்ஹ லோகாவாப்த்யாதி கந்யா ப்ரதிபாதந கல்போக்த பலாவாப்தயே அநேந வரேணா ஸ்யாம் கந்யாயா முத்பாதயிஷ்யமாண ஸந்தத்யா த்வாத சாவராந் த்வாதச பராந் புருஷாந் பவித்ரீகர்த்து மாத்மநச்ச லக்ஷ்மீநாராயண ப்ரீதயே ப்ராம்ஹ விவாஹ விதிநா கந்யாப் திபாதநமஹம் கரிஷ்யே இதிஸங்கல்ப்ய ॥ வரனை மஹாவிஷ்ணு ஸ்வரூபமாக தியானித்து பாதபூஜை செய்து ——— ப்ரவரம் சொல்ல. தாதா: ——— ப்ரவராந்வித——கோத்ரோத்பந்நாய ——— ப்ரபௌத்ராய ——— பௌத்ராய ———புத்ராய ——— சர்மணே கந்யார்த்திநே ஸ்ரீதர ரூபிணே வராய ॥ ——— ப்ரவரோத் பேதாம்——— கோத்ரோத் பந்நாம் ——— ப்ரபௌத்ரீம் ——— பௌத்ரீம் ————புத்ரீம்————நாம்நீம் கன்யாம் வரார்த்திநீம் ஸ்ரீரூபிணீம் மதீயாம் கந்யாம் ॥ இவ்விதம் மூன்று முறை சொல்லிய பிறகு: தனது பத்நியுடன் வடக்கு முகமாக நின்று மேற்கு முகமாக நிற்கும் பெண்ணின் வலது தோளை தொட்டுக் கொண்டு கந்யாம் கநக ஸம்பந்நாம் கநகாபரண பூஷிதாம் । தாஸ்யாமி விஷ்ணவே துப்யம் ப்ரம்ஹலோக ஜிகீஷயா ॥ விச்வம்பர: ஸர்வபூதா: ஸாக்ஷிண்ய: ஸர்வ தேவதா: । இமாம் கந்யாம் ப்ரதாஸ்யாமி பித்ரூணாம்



தாரணாயச ॥ என்று மந்திரம் படித்து வெண்கல பாத்திரத்தின்மேல் பெண் வலது கை இருக்க வரனின் வலதுகையில் தனது வலது கையால் தாம்பூலாதிகளுடன் பத்நியால் ஜலம் தத்தம் செய்ப்பட்டு அந்த தீர்த்தம் சொட்டச் சொட்ட இமாம் கந்யாம் ப்ரஜாபதி தைவத்யாம் ப்ரஜாஸஹத்வ கர்மப்ய: துப்யமஹம் ப்ரதி பாதயேத் என்று சொல்லி கொடுப்பது. வரன்: ஓம் ததா ॥ என்று பெற்றுக்கொள்ளுதல்.

பிறகு தாதா சொல்வார்: கௌரீம் கந்யாம் இமாம் விப்ரயதா சக்தி விபூஷிதாம் । ——— – கோத்ராய ——— சர்மணே துப்யம் தத்தாம் விப்ர ஸமாச்ரய ॥ கந்யே மம மாக்ரதோ பூயா: கந்யேமே தேவி பார்ச்வயோ: । கந்யே மே ப்ருஷ்டதோ பூயா: த்வத்தாநாந் மோக்ஷ மாப்நுயாம் ॥ மம வம்ச குலே ஜாதா பாலிதா வத்ஸராஷ்டகம் । துப்யம் விப்ர மயா தத்தா புத்ர பௌத்ர ப்ரவர்த்திநீ ॥ தர்மே சார்த்தேச காமேச நாதிசரிதவ்யா த்வயேயம் ॥ நாதிசராமி இதி வரன் பதில் ॥ கன்யாதாதா செய்யப்பட்ட கந்யா ப்ரதிபாதநஸ்ய ஸாங்கதா ஸித்யர்த்தம் யதா சக்தி தக்ஷிணாம் ஸம்ப்ரததே என்று வரன் கையில் தக்ஷிணை கொடுத்து நமம என்று சொல்லுவார். வரன் பெற்றுக் கொள்ள மந்த்ரம் ——— தேவஸ்யத்வா ஸவிது: ப்ரஸவேச்விநோர் பாஹுப்யாம் பூஷ்ணோ ஹஸ்தாப்யாம் ப்ரதிக்ருண்ஹாமி ராஜாத்வா வருணோ நயது தேவி தக்ஷிணேக்நயே ஹிரண்யம் தேநாம்ருதத்வ மச்யாம் வயோ தாத்ரே மயோமஹ்யமஸ்து ப்ரதிக்ர ஹீத்ரேகஇதம் கஸ்மா அதாத் காம: காமாய காமோ தாதா காம: ப்ரதிக்ரஹீதா காமகும் ஸமுத்ர மாவிச காமேநத்வா ப்ரதி க்ருண்ஹாமி காமைதத்த ஏஷாதே காம தக்ஷிணோத்தாநஸ்த்வாம்நீரஸ: ப்ரதிக்ருண் ஹாது ॥ என்பது.

பிறகு பெண்ணின் தகப்பனார் தனது சக்திக்கு ஏற்ற வாறு பாத்ரங்கள் படுக்கை பசு எருமை பூமி வாஹநம் குதிரை வேலைக்காரன் வேலைக்காரி அலங்காரப்பொருள் கள் இவற்றை சங்கல்ப பூர்வகம் வரனுக்கு அன்புடன் அளிப்பது.

அடுத்து ப்ராம்ஹணர்களால் தர்ப்பை, அருகம் புல், மாவிலை இவற்றின் மூலம் தீர்த்த ப்ரோக்ஷணம், சொல்லப்பட வேண்டிய மந்த்ரம்———ஆபோஹிஷ்டா மூன்று ரிக்குகள். ஸமுத்ர ஜ்யேஷ்டா என்ற நான்கு ரிக்குகள். இத்துடன் ஓம் ஆந: ப்ரஜாம் ஜநயது ப்ரஜா பதி ராஜரஸாய ஸமநக்த்வர்யமா ! அதுர்மங்களீ: பதி லோகமாவிச சம்நோ பவ த்விப தே சம் சதுஷ்பதே ॥ அகோர சக்ஷுரபதிக்ந்யேதி சிவா பசுப்ய: ஸுமநா: ஸுவர்ச்சா: । வீரஸுர்தேவகாமாஸ்யோநா ச ம் நே ா பவத்விபதே சம்சதுஷ்பதே। இமாம் த்வமிந்த்ர மீட்வ: ஸுபுத்ராம் ஸுபகாம் க்ருணு। தசாஸ்யாம் புத்ராநா தேஹி பதிமேகா தசம் க்ருதி ॥

—o—

## ॥ மாங்கல்ய தாரணம் ॥

[தாம்பூலாதி ஸௌபாக்ய த்ரவ்ய ஸஹிதம் திரு மாங் கல்யம் ஸுத்ரம்—சரடு வஸ்த்ரம் ஆபராணாதிகள் வரனால் பெண்ணுக்கு அளிக்கப்பட வேண்டியவை] இவற்றை ஒரு தட்டில் வைத்து —— ப்ராம்ஹணர்கள் பந்து ஜ்ஞாதி மித்ரர்கள் ஸுவாஸிநிகள் இவர்களது அநுக்ரஹம் வாங்கி பிறகு கந்நிகையிடம் கொடுக்க ———ஸுமங்கலீரியம் வதூரிமாகும் ஸமேத பச்யத। ஸௌபாக்ய மஸ்யை தத்வயாதாஸ்தம்விபரேதந ॥



இமாம் த்வமிந்த்ர மீட்வ: ஸுபுத்ராகும் ஸுபகாங்குரு। தசாஸ்யாம் புத்ராநாதேஹி பதிமேகா தசம் குரு ॥ என்று. இவற்றை விநயமுடன் பெற்றுக் கொண்ட பெண் வஸ்த்ரா ப்ரணாதிகளை அணிந்து கொண்டபின் அக்நியின் ஈசான்ய பாகத்திலிருந்து ஸுமங்கலிகளால் அழைத்து வரப்பட வேண்டியது. லௌகிக அக்நி ப்ரதிஷ்டை செய்து நாந்தீ ச்ராத்தம் புண்யாக வாசநம் செய்து புண்யாக ஜலேந வதூ வரன் இருவருக்கும் ப்ரோக்ஷித்து, திருமங்கல்யம் கோர்க்கப்பட்ட ஸுத்ரத்தை வரன் தனது கையில் எடுத்து இஷ்ட தேவதை குல தேவதை ஸ்மரணத்துடன் வதூவின் கழுத்தில் கட்டவேண்டும். —— மாங்கல்யம் தந்துநாநேந பர்த்ரு ஜீவந ஹேதுநா। கண்டே பத்நாமி ஸுபகே ஸாஜீவ சரதாம் சதம்। என்ற மந்த்ரம் சொல்லி.

—o—

## ॥ விவாஹ ஹோம: ॥

கிழக்குமுகமாக வரன் உட்கார்ந்து ஆசமநம் ப்ராணா யாமம் செய்து தேசம் காலம் ப்ரார்த்தித்து———பரிக்ருஹீ தாயாம் வத்வாம் பார்யார்த்வ ஸித்தி த்வாராக்நாவௌ பாஸநத்வ ஸித்தி த்வாரா ச ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம் விவாஹ ஹோமம் கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய———லௌகி காக்நிம் ப்ரதிஷ்டை செய்து ப்ராணாயாமாந்தம் க்ருத்வா அம்மி பொறி நெல் அபிஷேகார்த்தம் கலசம் தீர்த்தம் ஸமித் தர்வி போன்றவைகளையும் சேர்த்து வைத்துக் கொண்டு ———— பரிதி பரிதாநாந்தம் செய்யவும். வதூ பாத்ர ஸாதனங்களுக்கு வடக்காக வந்து அக்நிக்கும் ஸ்வாமிக்கும் இடையே சென்று வரனின் வலது புறம் அமர்ந்து ஆசமநம் செய்வாள்.

வரன் பரிஷேகாதி ஸாமாந்ய ப்ரதாநாந்தம் ஹுத்வா ப்ரதாந ஹோமம் செய்கிறார். ———ஓம் அக்நிரைது ப்ரதமோ தேவதாநாகும் ஸோஸ்யை ப்ரஜாம் முஞ்சது

ம்ருத்யு பாசாத் । ததய கும் ராஜா வருணோநு மந்யதாம் யதேயகும் ஸ்த்ரீ பௌத்ர மகம்நரோதாத் ஸ்வாஹா ——— அக்நீ வருணாப்யாம் இதம் ந மம (1) இமா மக்நிஸ்த்ராயதாம் கார்ஹபத்ய ப்ரஜாமஸ்யை நயது தீர்கமாயு: । அசூந்யோபஸ்தா ஜீவதாமஸ்து மாதா பௌத்ரமாநந்தமபி ப்ரபுத்யதாமியகும் ஸ்வாஹா ——— அக்நயே கார்ஹபத்யாய இதம் ந மம । (2) மாதே க்ருஹே நிசிகோஷ உத்த்தாதந்யத்ரத்வத் ரு தத்தய: ஸம்விசந்து । மாத்வம் விகேச்யுர ஆவதிஷ்டா ஜீவ பத்நீ பதி லோகே விராஜ ப்ரஜாம் பச்யந்தீ ஸுமநஸ்ய மாநாகும் ஸ்வாஹா ——— அக்நய இதம் ந மம. [3] த்யௌஸ்தே ப்ருஷ்டகும் ரக்ஷது வாயு ரூரு அச்விநௌ ச ஸ்தநந் தயதஸ்தே புத்ராந்த்ஸவிதாபிரக்ஷது । ஆவாஸஸ: பரிதாநாத் ப்ருஹஸ்பதிர்விச்வேதேவா அபிரக்ஷந்து பச்சாத் ஸ்வாஹா——திவே வாயவே அச்விப்யாம் ஸவித்ரே ப்ருஹஸ்பதயே விச்வேப்யோ தேவேப்ய இதம் ந மம [4] அப்ரஜஸ்தாம் பௌத்ர ம்ருத்யும் பாப்மாந முத வாகம்। சீர்ஷ்ண: ஸ்ரஜமிவோந் முச்யத் விஷத்ப்ய: ப்ரதிமுஞ்சாமி பாபகும் ஸ்வாஹா——— அக்நய இதம் ந மம. [5] தேவக்ருதம் ப்ராம்ஹணம் கல்பமாநம் தேந ஹந்மி யோநிஷத: பிசாசாந் । க்ரவ்யாதோ ம்ருத்யூநதராந் பாதயாமி தீர்க்கமாயு: தவ ஜீவந்து புத்ரா: ஸ்வாஹா ——— அக்நய இதம் ந மம. [6] பிறகு இமம் மே வருண தத்த்வா யாமி த்வந்நோ அக்நே ஸத்வந்நோ அக்நே த்வமக்நே அயாஸி ப்ரஜாபதே இதி ஆறு ஆஹுதிகளும் செய்து அக்நிக்கு வடக்கே வடக்கு பரிதி ஸந்தியில் அம்மி வைத்து அங்கு வதூவின் வலது பாதத்தை முதலில் அம்மிமேல் எடுத்து வைத்து கிழக்கு முகமாக வதூவை அம்மிமீது நிற்கச் செய்யவும் —— பிறகு இம் மந்திரத்தைச் சொல்லவும் ——ஆதிஷ்டேம மச்மாந மச்மே வத்வகும் ஸ்திரா பவ । ப்ரம்ருணீஹி துரஸ்யூந்த் ஸஹஸ்வ ப்ருதநாயத । என்று.

—O—



# ॥ பாணி க்ரஹணம் ॥

பாணிக்ரஹணத்திற்கு பிறகே ஸஹத்வம் என்கிற தர்ம சாஸ்த்ர வாக்யப்படி விவாஹத்தில் பாணிக்ரஹணம் தான் ப்ரதானமாகும். ஆகவே விவாஹத்திற்கென நிச்சயிக்கப்பட்ட சுப முஹூர்த்தத்தில் இந்த கர்மா நடைபெறுவது மிக மிக முக்யம்.

அக்நியின் மேற்கே கீழ்புறம் ஒன்றும் மேல் புறம் ஒன்றுமாக இரு தர்ப்பங்களை வடக்கு நுனியாக வைக்கவும். கிழக்கு தர்ப்பைமீது (வரன்) தான் மேற்கு முகமாக நின்று கொண்டு மேற்கு தர்ப்பையின் மீது வதூவை கிழக்கு முகமாக நிறுத்தி வைத்துக் கொண்டு அவளது வலது கை கட்டை விரல் உள்பட, மேல் நோக்கியுள்ள எல்லா விரல்களையும் சேர்த்து கையை பிடிக்கவேண்டும். ——— ஓம் ஸரஸ்வதிப்ரேதமிவஸுபகே வாஜிநீ வதி ; தாம் த்வா விச்வஸ்யபூதஸ்ய ப்ரஜாயாமஸ்யக்ரத: । க்ருண்ஹாமிதே ஸுப்ரஜாஸ்த்வாய ஹஸ்தம் மயா பத்யா ஜரதஷ்டிர்யதாஸத் । பகோ அர்யமா ஸவிதா புரந்திர் மஹ்யம்த்வாது: கார்ஹபத்யாய தேவா ॥

பிறகு அவளை முதலில் வலது புறமிருந்து ப்ரதக்ஷிணமாக சுற்றி தனது வலது புறத்தில் மேற்கு முகமாக நிற்கச் செய்து சொல்ல வேண்டியது ஆறு மந்த்ரங்கள் ——— ஓம் அகோர சக்ஷுரபதிக்நீ யேதி சிவா பசுப்ய: ஸுமநா: ஸுவர்ச்சா: । ஜீவஸூர்வீரஸூ: ஸ்யோநா சம் ந ஏதி த்விபதே சம் சதுஷ்பதே. [1] தாம் ந: பூஷஞ்ச்சிவதமாமேரய ஸ்வ யஸ்யாம் பீஜம் மநுஷ்யாவபந்தி । யா ந ஊரூ உசதீ விஸ்ரயாதை யஸ்யாமுசந்த: ப்ரஹரேமசேபம் [2] ஸோம: ப்ரதமோ விவிதே கந்தர்வோ விவித உத்தர: । த்ருதீயோ அக்நிஷ்டே பதிஸ்துரீயோஹம் மநுஷ்யஜா:. [3] ஸோமோ

ததத் கந்தர்வாய கந்தர்வோக்நயே ததாத் । பசூகும்ச்ச மஹ்யம் புத்ராகும்ச்சாக்நிர் ததாத் யதோ த்வாம். [4] அமூ ஹமஸ்மி ஸாத்வம் த்யௌரஹம் ப்ருதிவீத்வகும் ஸாமாஹம் ருக்த்வம் தாவேஹி । ஸம்பவாவ ஸஹரேதோ ததாவஹை புகும்ஸே புத்ராயவேத்தவை ராயஸ்போஷாய ஸுப்ரஜாஸ்த்வாய ஸுவீர்யாய. [5] இமாம் த்வமிந்த்ர மீட்வ: ஸுபுத்ராகும் ஸுபகாம்குரு । தசாஸ்யாம் புத்ராநாதேஹி பதிமேகாதசம் குரு ॥ [6]

—o—

## ॥ லாஜ ஹோமம் ॥

பிறகு அவளை முன்போல தனது வலது புறமாக உட்கார்த்தி வைத்து தானும் உட்கார்ந்து அவளது அஞ்சலிகளை ஆஜ்யத்தால் மந்த்ர மின்றி தடவி அங்கு மந்த்ரா விருத்யாக அவளது ஸஹோதரன் மூலம் யதாசாரம் பொறியை இருமுறை நிரப்பவும் ——— பஞ்சாவத்திகளானால் மும்முறை ॥ மந்த்ரம் - - - - - ஓம் இமாம்ல்லாஜாநாவபாமி ஸம்ருத்திகரணாந் மமதுப்யஞ்ச ஸம்வநநம் ததக்நி: அநுமந்யதாமயம் ॥ மந்த்ரமின்றி அபிகாரம் செய்து தர்வீஸ்தானத்தில் அவளது அஞ்ஜலிகளை கொண்டு வரன் ஆஹுதி செய்வார் இம் மந்த்ரம் சொல்லி. - - - - - - ஓம் இயம் நாரீ உபப்ருதே அக்நௌ லாஜாநாவபந்தீ தீர்காயு: அஸ்துமே பதிரேதம்தாம் ஜ்ஞாதயோ மம ஸ்வாஹா - - - - அக்நய இதம் நமம ॥ பிறகு வதூவை எழுந்திருக்க செய்து - - - - - உதாயுஷா ஸ்வாயுஷோதோஷதீநாகும் ரஸே நோத்பர்ஜந்யஸ்ய சுஷ்மேணோதஸ்த்தாமம்ருதாகும் அநு ॥ என்று. பிறகு வதூவுடன் கூட ப்ரதக்ஷிணமாக அக்நியை சுற்றிவர மந்த்ரம் - - - - - விச்வா உதத்வயா வயம் தாரா உதந்யா இவ । அதிகாஹேம ஹித்விஷ ॥ மறுபடியும் முன்போலவே வதூவை உட்கார்த்தி அஞ்ஜலிகளை உபஸ்தீர்ய இருமுறை



பொறியால் மந்த்ரம் சொல்லி நிரப்பி அபிகாரம் செய்து முன்போலவே மந்த்ரம் சொல்லி ஆஹுதி செய்து மந்த்ரம் சொல்லி வதூவை எழுந்திருக்கச் செய்து மந்த்ரம் சொல்லி ப்ரதக்ஷிணம் செய்து அமரவும். இதேமாதிரி மூன்ருவது முறையும் செய்து பிறகு ஆஜ்யத்தால் ஸ்விஷ்டக்ருத ஹோமம் செய்யவும். பிறகு ஜயாதி ஹோமம் செய்ய வேண்டும். பிறகு ஸம்ஸ்த்தா ஜபாந்தம் செய்து கர்மாவை பூர்த்தி செய்யவும். இங்கு த்ரிவ்ருதந்த ஹோம மில்லை.

—O—

## ॥ ஸப்த பதி ॥

பிறகு அக்நியின் மேற்கில் கிழக்காகவோ மேற்காவோ ஸப்தபதி மந்த்ரம் சொல்லி வதுவின் தக்ஷிண பாதத்தை வரன் பிடித்து ஒருதப்படி முன்னால் நகர்த்தியதும் வதூ தனது இடது பாதத்தை நகர்த்தி முன்வைக்கப்பட்ட வலது பாதத்திற்கு முன் செல்லாமல் ஸமமாக நிறுத்தவேண்டுமென பார்யைக்கு சொல்லிக் கொடுத்து அவளது வலது பாதம் பிடித்து ஏழுமுறை மேலே மேலே நகர்த்தி ஒவ்வொரு தடவைக்கும் ஒரு மந்த்ரம் சொல்லி நகரச் செய்ய வேண்டியது: - - - - ஓம் ஏகமிஷே விஷ்ணு ஸ்த்வாந்வேது । த்வே ஊர்ஜே விஷ்ணு ஸ்த்வாந்வேது । த்ரீணி வ்ரதாய விஷ்ணுஸ்த்வாந்வேது ॥ சத்வாரி மா யோபவாய விஷ்ணு ஸ்த்வாந்வேது । பஞ்ச பசுப்யோ விஷ்ணுஸ்த்வாந்வேது । ஷட்ராயஸ்போஷாய விஷ்ணுஸ்த்வாந்வேது । ஸப்தஸப்தப்யோ ஹோத்ராப்யோ விஷ்ணுஸ்த்வாந்வேது । என்று. இவ்விதம் ஏழாவது தடவை எடுத்து வைக்கப்பட்ட பாதத்தைத் தொட்டுக் கொண்டு வரன் சொல்ல வேண்டிய மந்த்ரம் - - - - - - - ஸகாயௌ ஸப்த பதாவபூவ ஸக்யம் தே கமேயகும் ஸக்யாத்தே மாயோஷகும் ஸக்யாந்மே மாயோஷ்டா என்று.

பிறகு வதூவின் வலது பாதத்தை தனது வலது பாதத்தால் தொட்டுக் கொண்டு தனது வலது கையால் வதூவின் வலது தோள் பாகத்தை மேலே மேலே தடவிக்கொடுத்து ஹ்ருதய தேசத்தைத் தொட்டு மந்த்ரம் சொல்லவும் —— மம ஹ்ருதயே ஹ்ருதயம் தே அஸ்து மம சித்தம் சித்தே நாந்வேஹி மம வாச மேகமநாஜுஷஸ்வ ப்ருஹஸ்பதிஷ்ட்வா நியுநக்து மஹ்யம் மாமேவாநுஸகும்ரபஸ்வ மயி சித்தாநி ஸந்துதே மயி ஸாமீச்யமஸ்துதே மஹ்யம் வாசம் நியச்ச்சதாத் ॥ என்று, பிறகு அவளது நாபீ தேசத்தை தொடுவது———ப்ராணாநாம் க்ரந்தி ரஸி ஸமாவிஸ்ரஸ ॥ என்று.

பிறகு அப்பெண்ணை அக்நியின் மேற்கு புறம் கிழக்கு முகமாக உட்கார்த்தி அவளது எதிரில் மேற்கு முகமாக தான் நின்று கொண்டு ஆபோஹிஷ்டா என்று மூன்றும் ஹிரண்ய வர்ணா: சுசய: பாவகா என்று நான்கையும் பவமாந: ஸுவர்ஜந என்று அநுவாகம் முழுமையும் படித்துக் கொண்டே முன்னர் அக்நியின் வடக்கே ஸ்தாபிக்கப்பட்ட கலசத்திலுள்ள தீர்த்தத்தால் தர்ப்பை கொண்டு வதூவுக்கு ப்ரோக்ஷணம் செய்ய வேண்டும்.

பிறகு செய்யப்பட்ட விவாஹ ஹோமம் ஸாங்கதாஸித்யர்த்தம் ஆசார்யர் முதலியவர்களை கந்த தாம்பூலாதிகள் கொண்டு உபசரித்து கர்மா நன்கு பூர்த்தியானதற்கு விஷ்ணுஸ்மரணமும் செய்யவும்.

— o —

## ॥ க்ரஹ ப்ரவேசம் ॥

விவாஹ ஹோமம் ஆன உடனேயே வதூ பந்து ஜனங்கள் ஸஹிதம் தகப்பனார் வீட்டை விட்டு கணவனும் தானும் ரதாதி வாகனமூலம் பர்த்ரு க்ருஹம் அடைகிறாள்.



விவாஹாக்நி ஸர்வம் ஒரு பாத்ரத்தில் வைத்து கணவன் மனைவியுடன் பின்தொடர்ந்து எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

வரன் தனது வீட்டு வெளிப்புறம் அடைந்து பார்யையைப் பார்த்து சொல்லுகிறார். - - - தக்ஷிணம் பாத மக்ரே திஹர தேஹலிம் மாதிஷ்டா ॥ என்று. அவளும் எப்படி சொன்னாரோ அதேமாதிரி வலது பாதத்தை முன்னே வைத்து வாயிற்படியை மிதிக்காமல் உள்ளே செல்கிறாள் பிறகு வீட்டின்முன் பகுதியில் தனது மனைவியுடன் கிழக்கு முகமாக உட்கார்ந்து ஆசமநம் ப்ராணாயாமம் செய்து தேசம் காலம் ப்ரார்த்தித்து - - - - - மம விவாஹாக்நேர் க்ருஹ்யத்வ ஸித்தித்வாரா ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம் விவாஹாங்க பூதம் க்ருஹப்ரவேசநீயாக்யம் கர்ம கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய கணேச பூஜநமும் செய்து உத்தநநாதி பூ ஸம்ஸ்காரம் செய்து அவ்விடத்தில் விவாஹாக்நியை ப்ரதிஷ்டை செய்து அக்நியின் மேற்கே சிவப்பு நிற காளை மாட்டு தோலை கிழக்கு முகமாக பரத்தி அது கிடைக்காவிட்டால் பட்டுப் பாய் விரித்து அதன் மீது தான் கிழக்கு முகமாக உட்கார்ந்து தனது வலதுபுறம் பார்யையும் உட்கார்த்தி வைத்துக்கொண்டு அவளிடம் சொல்லுவது - - - - - - - இஹ காவோ நிஷீதந்த்விஹாச்வா இஹ பூருஷா: । இஹோ ஸஹஸ்ர தக்ஷிணோபி பூஷா நிஷீதத் ॥ என்று. பிறகு நக்ஷத்ரம் உதயமாகும் வரையில் இருவரும் மௌனமாக இருக்கவேண்டும்.

நக்ஷத்ரம் உதயமானவுடன் வீட்டின் வெளியே கிளம்பி கிழக்கிலோ மேற்கிலோ சென்று எந்த இடத்தில் த்ருவ நக்ஷத்ரம் நன்கு தெரிகின்றதோ அவ்விடத்தில் கிழக்கு முகமாகவோ வடக்கு முகமாகவோ நின்று வதூஸஹிதம் வடக்கு திசையைப் பார்த்து சொல்ல வேண்டியது - - - - -

தேவீ: ஷடுர்வீருருண: க்ருணோத விச்வே தேவாஸ இஹ வீரயத்வம் ॥ பிறகு நக்ஷத்ரங்களை நோக்கி - - - - - - - - மாஹாஸ்மஹி ப்ரஜயாமா தநூபி: ॥ பிறகு சந்த்ரன் இருந்தால் பார்த்து அல்லது திக்கைப் பார்த்து - - - - - - மாரதாமத்விஷதே ஸோமராஜந் ॥ பிறகு ஸப்த ரிஷிகளை நோக்கி - - - - - - ஸப்தர்ஷய: ப்ரதமாம் க்ருத்திகாநாமருந்ததீம் யே த்ருவதாகும் ஹநிந்யு: । ஷட் க்ருத்திகா முக்யயோகம் வஹந்திய மஸ்மாகம் ப்ராஜத்-வஷ்டமீ ॥ பிறகு த்ருவ நக்ஷத்ரத்தை நோக்கி ———— த்ருவ க்ஷிதிர் த்ருவ யோநிர் த்ருவ மஸி த்ருவதஸ்திதம்; த்வம் நக்ஷத்ராணாம் மேத்யஸி ஸமாபாஹி ப்ருதந்யத: । நமோ ப்ரம்ஹணே த்ருவாயாச்யுதாயாஸ்து நமோ ப்ரம்ஹண: புத்ராய ப்ரஜாபதயே நமோ ப்ரம்ஹண: புத்ரேப்யோ தேவேப்ய ஸ்த்ரய ஸ்த்ரிகும்சேப்யோ நமோ ப்ரம்ஹண: புத்ர பௌத்ரேப்யோங் கிரோப்யோ யஸ்த்வாம் த்ருவமச்யுதகும் ஸபுத்ரகும் ஸபௌத்ரம் ப்ரம்ஹ வேத த்ருவா அஸ்மிந் புத்ரா: பௌத்ரா பவந்தி ப்ரேஷ்யாம் தே வாஸிதோ வஸநம் கம்பலாநி ககும்ஸகும் ஹிரண்யகும் ஸ்த்ரியோ ராஜாநோந்நமபய மாயு: கீர்த்தி: வர்ச்சோ யசோ பலம் ப்ரம்ஹ வர்ச்சஸமந்நாத்யமித்யேதாநி மயி ஸர்வாணி த்ருவாண்யச்யுதாநி ஸந்து ॥ த்ருவம் த்வா ப்ரம்ஹவேத த்ருவோஹமஸ்மிந் லோகேஸ்மிக்குச்ச ஜநபதே பூயாஸம் । அச்யுதம் த்வா ப்ரம்ஹ வேத மாஹமஸ்மால்லோகாதஸ்மாச்ச ஜநபதாச்ச்யோஷி த்விஷந் மே ப்ராத்ருவ்யோ ஸ்மால்லோகா தஸ்மாச்ச ஜநபதாத்ச்யவதாம் । அசேஷ்டம் த்வா ப்ரம்ஹவேத மாஹமஸ்மால்லோகா தஸ்மாச்ச ஜநபதா ச்சேஷ்டிஷி த்விஷந் மே ப்ராத்ருவ்யோ ஸ்மால்லோகா தஸ்மாச்ச ஜநபதாச்சேஷ்டதாமவ்யதமாநம் த்வா ப்ரம்ஹவேத மாஹமஸ்மால்லோகா தஸ்மாச்ச ஜநபதாத்வ்யதிஷி த்விஷந் மே ப்ராத்ருவ்யோஸ்மால் லோகாதஸ்மாச்ச



ஜநபதாத் வ்யததாம் । நப்யம் த்வாஸர்வஸ்ய வேத நப்ய மஹமஸ்ய ஜநபதஸ்ய பூயாஸம் । மத்யம் த்வா ஸர்வஸ்ய வேத மத்ய மஹ மஸ்ய ஜநபதஸ்ய பூயாஸம் । தம்திம் த்வா ஸர்வஸ்ய வேத தம்திரஹ மஸ்ய ஜநபதஸ்ய பூயாஸம் । மேதீம் த்வா ஸர்வஸ்ய வேத மேத்ய மஹமஸ்ய ஜநபதஸ்ய பூயாஸம் । நாபிம் த்வா ஸர்வஸ்ய வேத நாபி ரஹமஸ்ய ஜநபதஸ்ய பூயாஸம் । யதா நாபி: ப்ராணாநாம் விஷூவாநேவ மஹம் விஷூவாநேகசதம் பாப்மாநம்ருச்சது யோஸ்மாந் த்வேஷ்டி யஞ்சவயம் த்விஷ்மோ பூயாகும்ஸி மாமேக சதாத் புண்யாந்யாகச்சந்து ॥ என்று இம் மந்த்ரங்களால் த்ருவ நக்ஷத்ர ப்ரார்த்தனை நக்ஷத்ரங்கள் தெரியாமல் ஏதாவது மேக மறைப்பு ஏற்பட்டு நக்ஷத்ரங்கள் பார்க்கப்படவில்லையானாலும் அந்த திக்கை நோக்கி உபஸ்தாநம் செய்ய வேண்டியது அவசியமாகும். பிறகு உபஸ்தாந தேசத்தில் ஒருவருக்கொருவர் வேடிக்கை அன்பு ப்ரியம் மிகுந்த வார்த்தைகளால் ஸம்பாஷணை செய்து மறுபடியும் பார்யை ஸஹிதம் வீட்டின் முன் பகுதியில் ப்ரவேசிக்கவும்.

— o —

## ॥ க்ருஹப்ரவேச ஸ்தாலீபாக ப்ரயோக: ॥

இக்கர்மா ராத்ரி த்ருவ நக்ஷத்ரம் பார்த்து ப்ரார்த்தனை செய்த பிறகே செய்ய வேண்டியது.

நக்ஷத்ர உபஸ்தாநத்திற்கு பின் வீட்டின் முன் பகுதிக்கு திரும்பிய வரன் வதூ ஸஹிதம் கிழக்கு முகமாக உட்கார்ந்து ஆசமநம் ப்ராணாயாமம் செய்து தேசம் காலம் ப்ரார்த்தித்து: க்ருஹப்ரவேசாங்க பூத ஆக்நேய

ஸ்தாலீபாகேந யக்ஷ்யே. என்று ஸங்கல்பம் செய்து விவாஹாக்நியை வைத்து ஜ்வாலை வரச்செய்து பரிஸ்தீர்ணம் போட்டு அக்நியின் வடக்கே தர்ப்பை பரப்பி உபயோகத்திற்கான பாத்ரஸாதனங்களை சேர்ப்பது ---- தர்வீ ஆஜ்ய ஸ்தாலி சரு பாத்ரங்கள் ப்ரோக்ஷணீ பாத்ரம் உரல் உலக்கை தாந்யம் ஆஜ்யம் ஸம்மார்க தர்பாந் சரு எடுத்து வைத்துக்கொள்ளும் பாத்ரம் மேக்ஷணம் பவித்ரம் இவை ---- ப்ரோக்ஷணீ ஸம்ஸ்காரம் முறையே செய்யப் பட்டபின் பாத்ரஸாதனங்களை ப்ரோக்ஷித்து உரலில் தாந்யம் நிரப்பி உலக்கையால் பத்நியைக்கொண்டு குத்தச் செய்து அக்ஷதை எடுத்து அலம்பி சரு தயாரிக்க வைத்துள்ள பாத்திரத்தில் இட்டு எதிரே உள்ள அக்நியில் வைத்து பக்குவம் செய்து சரு தயாரித்து கீழே இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

மேலே த்ர்வீ ஆஜ்ய ஸம்ஸ்காரம் செய்து மயிக்ருண் ஹாமி முதல் தொடங்கி ப்ரஸாதந்யை ஸ்வாஹா இத்யந்தம் செய்து வ்யாஹ்ருதி ஹோமமும் செய்து பின் சமைக்கப் பட்ட சருவை அபிகாரம் செய்து வடக்கே இறக்கி எடுத்து வைத்துக் கொள்ளவென்ற பாத்திரத்தில் மேக்ஷணத்தின் உதவியால் எடுத்துப் போட்டு அக்நியின் மேற்கே வைத்துக் கொண்டு பரிஷேசநம் செய்து இரண்டு ஸமித்துகளை மந்திரமின்றி சொருகி அக்நியை உண்டாக்கி சருவை தர்வி யில் இரு முறை எடுத்து வைத்து ஒரு முறை அபிகாரம் செய்து ஆஹுதி செய்ய வேண்டும். ----- ஓம் அக்நயே ஸ்வாஹா ------- அக்நய இதம் நமம। மறுபடியும் தர்வியில் சருவை ஒரு முறை எடுத்து வைத்து இரு முறை அபிகாரம் செய்து எடுத்து அக்நியில் இடது பாதியின் கிழக்கு பாதியில் ஆஹுதி செய்ய வேண்டும். ------- அக்நயே ஸ்விஷ்ட க்ருதே ஸ்வாஹா ----- அக்நயே ஸ்விஷ்டக்ருத இதம் நமம ॥ என்று. செய்யப்பட்ட கர்மா வில் ஏற்பட்ட தவறுதல்களுக்காக ப்ராயச்சித்த ஹோமம்



க்ஷ்யே என்று வ்யாஹ்ருதி நாலும் ஹோமம் செய்து பிறகு இமம்மே வருண இத்யாதி ப்ரஜாபதே இத்யந்தம் செய்து பரிஷேக விஸர்கம் செய்யவும். ஸ்தாலீபாக சேஷாந்நத்தால் ப்ராம்ஹணர் வித்தை பயின்றவருக்கு போஜநமளித்தல். செய்யப்பட்ட விவாஹ கர்மாக்கள் நன்கு நடைபெற்ற பலன் பெறுவதற்கு ஆசார்யருக்கு பூஜை செய்து வ்ருஷபம் இல்லையேல் அதன் ப்ரதிநிதியாக ஹிரண்யமாவது கொடுத்து கர்ம ஸாத்குண்யமாக விஷ்ணு ஸ்மரணம் செய்யவும்.

ஒரே க்ராமத்தில் விவாஹம் நடந்திருந்தால் வீட்டிற்கு வந்தவுடனேயே க்ருஹப்ரவேசநீய ஹோமம் செய்வது உசிதம். வேறு இடத்தில் விவாஹம் நடந்திருந்தால் தனது வீட்டை என்று அடைகிறரோ அன்று ஆரம்பிக்குமளவில் அக்நியை முன்பு சொல்லப்பட்ட விதம் எடுத்து வர வேண்டும். அல்லது அக்நி ஸமித் ஸமாரோபணம் செய்தாவது வரவேண்டும். இவ்விதம் க்ரஹப்ரவேச கர்மா பூர்த்தி ॥

—०—

## ॥ ஔபாஸந ஹோமம் ॥

க்ருஹப்ரவேச ஸ்தாலீபாகத்தை செய்து ஹோம உபக்ரமம் செய்து கொள்ள வேண்டும். ஹோம த்ரவ்யம் நெல் யவை: யதா ஆசாரம். பாணிக்ருஹணம் செய்து கொண்ட பின்பு யாவத் ஜீவம் காலை மாலை இரு வேளையும் செய்ய வேண்டிய கர்மா ஔபாஸனம். விவாஹாக்நியில் ஸாயம் ஆரம்பிக்கவும்.

அக்நியின் மேற்கே கிழக்கு முகமாக பத்நியுடன் உட்கார்ந்து ஆசமநம் ப்ராணாயாமம் செய்து தேசம் காலம் ப்ரார்த்தித்து ஸாயம் ப்ராத: ஔபாஸநம் ஹோஷ்யே இதி ஸங்கல்ப்ய அக்நியை பரிஸ்தீர்ணம் பரிசேஷசநம் செய்து ------ சத்வாரி ச்ருங்கா - இதி த்யாநம் செய்து அர்ச்சனை செய்து நெல்லை கையில் எடுத்து இடது கையில் கொஞ்சம் வைத்துக் கொண்டு வலது கையில் உள்ள நெல்லை ஆஹுதி செய்ய வேண்டும். ------ அக்நயே ஸ்வாஹா அக்நயே இதம் நமம॥ பிறகு இடதுகை நெல்லை வலதுகையில் மாற்றி ப்ரஜாபதயே ஸ்வாஹா ப்ரஜாபதய இதம் நமம என்று. பிறகு வ்யாஹ்ருதி ஹோமம் பரிஷேசக விஸர்கம் செய்து அக்நி ப்ரார்த்தனை ------ அக்நேநய இதி. ஔபாஸந ஸாத்குண்யார்த்தம் விஷ்ணுஸ்மரணம். பஸ்ம தாரணம் [இவற்றை விபரமாக முதல் பாகம் தமிழில் 41ம் பக்கம் பார்க்க].

---

## ॥ த்ரிராத்ரீ வ்ருதம் ॥

ஔபாஸநம் ஆரம்பித்து ஸாயம் ஔபாஸநம் செய்த பிறகு வதூவரன் இருவரும் கிழக்கு முகமாக உட்கார்ந்து தேசம் காலம் ப்ரார்த்தித்து விவாஹாங்க பூதம் த்ரிராத்ர வ்ருதம் சரிஷ்யாவஹே இதி ஸங்கல்ப்ய ------ புளி உரைப்பு உப்பு சேர்க்காத அன்னம் உண்டு, வஸ்த்ராபரணாதிகளால் தங்களை அலங்கரித்துக் கொண்டு ப்ரம்ஹசாரீ வ்ரதமுடன் தரையில் படுத்து இருவரும் சேர்ந்து வசிப்போம் என்ற வ்ருதத்தை க்ருஹப்ரவேச தினத்திற்கு மேல் மூன்று இரவுகள் வதூவரன் கடைபிடிக்க வேண்டும்.

—0—



## ॥ சதுர்த்த தின சேஷ ஹோமம் ॥

க்ருஹப்ரவேச தினம் தொடங்கி நான்காவது நாள் இரவு மூன்று பாகம் கழிந்து சேஷ பாகத்தில் விவாஹாங்கமாக செய்ய வேண்டிய கர்மா இது :-

வரன் வதூ ஸஹிதம் கிழக்கு முகமாக உட்கார்ந்து ஆசமநம் ப்ராணாயாமம் செய்து தேசம் காலம் ப்ரார்த்தித்து ------ மம அஸ்யா: பார்யாயா: ஸோமாத்யுப புக்தி தோஷ பரிஹாரத்வாரா ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம் சதுர்த்தீ கர்ம ததங்கம் நவ ப்ராயச்சித்த ஹோமம்ச கரிஷ்யே ததங்கம் கணேச பூஜநம் கரிஷ்யே இதி சங்கல்ப்ய க்ருத்வா ॥

ஔபாஸந அக்நி ப்ரதிஷ்டை செய்து பரிஸ்தரணம் போட்டு பரிஷேசநம் செய்து மயிக்ருண்ஹாமி இத்யாதி ப்ரஸாதிந்யை ஸ்வாஹா இத்யந்தம் செய்து — வ்யாஹ்ருதீ ஹோமம் செய்து இமம்மேவருண தத்வாயாமி த்வந்நோ அக்நே ஸத்வந்நோ அக்நே இதி நான்கு ஆஹுதிகளும் செய்து ப்ரதாந ஹோமம் ------ அக்நே ப்ராயச்சித்தே த்வம் ப்ராயச்சித்திரஸி ப்ராம்ஹண ஸ்த்வா நாதகாம உபதாவாமி யாஸ்யை கோரா தநூஸ்தாமிதோ நாசயஸ்வாஹா — — — அக்நயே ப்ராயச்சித்தய இதம் நமம ॥ வாயோ ப்ராயச்சித்தே த்வம் ப்ராயச்சித்திரஸி ப்ராம்ஹணஸ்த்வா நாதகாம உபதாவாமி யாஸ்யை நிந்திதா தநூஸ்தாமிதோ நாசயஸ்வாஹா — — - வாயவே ப்ராயச்சித்தய இதம் நமம ॥ ஆதித்ய ப்ராயச்சித்தே த்வம் ப்ராயச்சித்திரஸி ப்ராம்ஹணஸ்த்வா நாதகாம உபதாவாமி யாஸ்யை பதிக்நீ தநூஸ்தாமிதோ நாசயஸ்வாஹா— — — ஆதித்யாய ப்ராயச்சித்தய இதம் நமம ॥ மறுபடி இதே மூன்று ஆஹுதிகளை பின் இருந்து முன் திருப்பி — — —

ஆதித்ய ப்ராயச்சித்தே த்வம் ப்ராயச்சித்திரஸி ப்ராம்ஹண ஸ்த்வா நாதகாம உபதாவாமி யாஸ்யை பதிக்நீ தநூஸ்தா மிதோ நாசய ஸ்வாஹா - - - - - ஆதித்யாய ப்ராயச்சித்தய இதம் நமம ॥ வாயோ ப்ராயச்சித்தே த்வம் ப்ராயச்சித்தி ரஸி ப்ராம்ஹணஸ்த்வா நாதகாம உபதாவாமி யாஸ்யை நிந்திதா தநூஸ்தாமிதோ நாசயஸ்வாஹா — — — — வாயவே ப்ராய்ச்சித்தய இதம் நமம ॥ அக்நயே ப்ராயச் சித்தே த்வம் ப்ராயச்சித்திரஸி ப்ராம்ஹணஸ்த்வா நாத காம உபதாவாமி யாஸ்யை கோரா தநூஸ்தாமிதோ நாசய ஸ்வாஹா — — — அக்நயே ப்ராயச்சித்தய் இதம் நமம ॥ மறுபடி மூன்று ஆஹுதிகளையும் முதலில் இருந்து ஆரம் பித்து — — — அக்நயே ப்ராயச்சித்தே த்வம் ப்ராயச்சித்தி ரஸி ப்ராம்ஹணஸ்த்வா நாதகாம உபதாவாமி யாஸ்யை கோரா தநூஸ்தாமிதோ நாசய ஸ்வாஹா அக்நயே ப்ராய்ச்சித்தய இதம் நமம ॥ வாயோ ப்ராயச்சித்தே த்வம் ப்ராயச்சித்திரஸி ப்ராம்ஹணஸ்த்வா நாதகாம உபதாவாமி யாஸ்யை நிந்திதா தநூஸ்தாமிதோ நாசய ஸ்வாஹா — — — வாயவே ப்ராயசித்தய இதம் நமம ॥ ஆதித்ய ப்ராயச்சித்தே த்வம் ப்ராயச்சித்திரஸி ப்ராம்ஹண ஸ்த்வா நாதகாம உபதாவாமி யாஸ்யை பதிக்நீ தநூஸ்தா மிதோ நாசய ஸ்வாஹா — — — — ஆதித்யாய ப்ராயச் சித்தய இதம் நமம ॥

நவாஹுதி ஹோம காலத்தில் ஸக்குஸ்ராவ ஆஜ்யம் வேறு பாத்திரத்தில் விட்டு அதே ஸக்குஸ்ராவ ஆஜ்யத் தைக் கொண்டு பத்நியின் தலை உச்சியில் ஆஹுதி செய்ய — — — — ஓம் பூ: பகம் த்வயி ஜுஹோமி ஸ்வாஹா — — — — அக்நய இதம் நமம ॥ ஓம் புவ: யசஸ்தவயி ஜுஹோமி ஸ்வாஹா — — — — வாயவ இதம் நம ॥ ஓம் ஸுவ: ச்ரியம் த்வயி ஜுஹோமி ஸ்வாஹா — — — — ஸூர்யாய இதம் நமம ॥ ஓம் பூர்புவ: ஸுவ: த்விஷிம்



த்வயி ஜுஹோமி ஸ்வாஹா — — — — ப்ரஜாபதய இதம் ந மம ॥ இந்த நாலு ஆஹுதி உச்சந்தலையில் செய்த பிறகு அக்னியில் ஹோமம் ஸ்விஷ்ட க்ருதம் செய்து। த்வமக்நே அயாஸீ இத்யாதி க்ரமேண ஸம்ஸ்த்தா ஜபாந்தம் செய்து முடிக்கவும். இங்கு த்ரிவ்ருதந்த ஹோமமில்லை.

பிறகு அக்நி ஸமீபம் ஜலம் நிரம்பிய கும்பம் ஒன்று வைத்து அக்நி உதகும்பம் இவற்றை இருவரும் ப்ரதக்ஷணம் செய்து அக்நியின் மேற்குபுறம் இருவரும் உட்கார்ந்து பத்நியின் இடுப்பை சுற்றி தனது வலது கையால் அவளது நாபீ தேசத்தை தொட்டுக்கொண்டு — — — — அபித்வா பஞ்ச சாகேந சிவேநாபி த்விஷாவதா। ஸஹஸ்ரேண யசஸ்விநா ஹஸ்தேநாபி ம்ருசாமஸி ஸுப்ரஜாஸ்த்வாய ॥ ஸந்நாம்ந: ஸகும் ஹ்ருதயாநி ஸந்நாபி: ஸந்த்வச:। ஸந்த்வா காமஸ்ய யோக்த்ரேண யுஞ்ஜாந்ய விமோசநாய ॥ பிறகு அவளை சேர்த்து அணைத்துக் கொண்டு — — — — மாமநு வ்ரதா பவ ஸஹசர்யா மயா பவ। யாதே பதக்நீ தநூர் ஜாரக்நீம் த்வேதாம் கரோமி சிவா த்வம் மஹ்ய மேதி க்ஷுர பவிர் ஜாரேப்ய: ॥ பிறகு அவளது முகத்துடன் தனது முகத்தை ஒட்டி வைத்துக் கொண்டு — — — — மதுஹே மத்விதம் மது ஜிஹ்வாமே மதுவாதிநீ। முகே மே ஸாரகம் மது தத்ஸு ஸம்வநநம் க்ருதம் ॥ சாக்ர வாக கும் ஸம்வநநம் யந்நதீப்ய உதாஹ்ருதம்। யத்யுக்தோ தேவ கந்தர்வஸ் தேந ஸம்வநிநௌ ஸ்வக: / ஸம்மநநாத் ஸ: ॥

பிறகு தம்பதியால் பலதானம் தாம்பூலதானம் உறவினர்களுக்கு யதாசாரம் செய்யப்பட வேண்டும். பிறகு தாம்பூல சர்வணம் யதா ஸம்ப்ரதாயம். இது நாலாவது நாள் சேஷஹோமம். இது செய்த பிறகுதான் விவாஹ கர்மா பூர்த்தியாகிறது.

## தர்ச பூர்ணமாஸ ஸ்தாலீபாக ப்ரயோக:

க்ருஹப்ரவேச ஸ்தாலீபாகம் ஆன பிறகு வரும் பௌர்ணமாஸையில் அல்லது பர்வாவில் பௌர்ண மாஸ்ய ஸ்தாலீபாகத்தை ஸ்வகாலத்தில் செய்யவேண்டும். காலம்: பௌர்ணமாஸ ஸ்தாலீபாகம் — க்ருஷ்ணபக்ஷ ப்ரதமை. தர்ச ஸ்தாலீபாகம் — சுக்லபக்ஷ ப்ரதமை !

தனது பத்நியுடன் ஔபாஸந அக்நியின் மேற்கே உட்கார்ந்து ஆசமநம் ப்ராணாயாமம் செய்து தேசம் காலம் ப்ரார்த்தித்து கணேச பூஜநம் செய்த பிறகு தேசம் காலம் ப்ரார்த்தித்து— — — —தர்ச பூர்ணமாஸ ஸ்தாலீபாகாப் யாம் யக்ஷ்யே தத்ராத்ய பௌர்ணமாஸ ஸ்தாலீபாகேண யக்ஷ்யே இதி பௌர்ணமாஸ்யாம். பூர்வ ஸங்கல்பித தர்ச ஸ்தாலீபாகேண யக்ஷ்யே. இதி அமாவாஸ்யா மிதி ஸங்கல்ப்ய — — — — — ஔபாஸந அக்நியில் ஹவிஸை பக்வம் செய்து அபிகாரம் செய்து தனி பாத்திரத்தில் எடுத்து வைத்து அபிகாரம் செய்து, அக்நியை பரிஸ் தீர்ணம் போட்டு மயிக்ருண்ஹாமி இத்யாதி ப்ரஸாதிந்யை தேவ்யை ஸ்வாஹா இத்யந்தம் செய்து வ்யாஹ்ருதி ஹோம மும் செய்து தர்வியில் இருமுறை ஹவிஸ் எடுத்து ஒரு முறை அபிஹாரம் செய்து — — — — ஓம் அக்நயே ஸ்வாஹா — — — — அக்நய இதம் ந மம॥ மறுபடி முன்போல் ஹவிஸ் ஒருமுறை எடுத்து இரு முறை அபிகா ரம் செய்து — — — — அக்நயே ஸ்விஷ்டக்ருதே ஸ்வாஹா — — — — அக்நயே ஸ்விஷ்டக்ருதே இதம் நமம। மேலே இமம்மே வருண இத்யாதி ஆஜ்யத்தால் செய்து பரிஷேக விஸர்கம் ஸம்ஸ்தா ஜபாந்தம் செய்து பூர்த்தி செய்யவும், இவ்விதமே தர்ச ஸ்தாலீபாகமும் ஆகும்.

—:O:—



## ருது சாந்தி

மாதவிடாய் மூன்று இரவுகளும் வேதத்தில் சொல்லப் பட்ட வ்ரதம் அனுஸரித்து நான்காவது நாள் ஸ்னனம் செய்து சுத்த வஸ்த்ரம் தரித்து ப்ராம்ஹணருடன் ஸம்பா ஷணை செய்து ஆசமநம் செய்து முடிக்க வேண்டும்.

மேலே சொன்னபடி முதல் ருதுதர்சனம் ஆன தினம் முதல் வ்ரதம் அனுஸரித்து நான்காவது நாள் காலை யஜமானன் பத்நி இருவரும் மங்கள ஸ்நாநம் செய்து திலகம் தரித்து ஆசமநம் செய்து ப்ராணாயாமம் செய்து ப்ராத ரௌபாஸநம் செய்து தேசம் காலம் ப்ரார்த்தித்து — — — மம தர்ம பத்ந்யா: ப்ரதம ரஜோ தர்சநே துஷ்ட மாஸாதி ஸூசித ஸகல அரிஷ்ட நிரஸந த்வாரா ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம் ஸக்ரஹமகாம் பௌதாயநோக்தாம் ருது சாந்தி ஜபஹோம கர்ம கரிஷ்யே. இதி ஸங்கல்ப்ய ததங்கம் கணபதி பூஜநம் நாந்தீ ச்ராத்தம் புண்யாகவாசநம்ச கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய யுத்த ரீதியில் செய்ய வேண்டும்.

கோமயத்தால் சுத்தி செய்யப்பட்ட பூமியில் தீர்த் தம் தெளித்து வேதிகட்டி அதன்மேல் நூல் சுற்றப்பட்ட ஒரு நல்ல கும்பம் வைத்து தீர்த்தம் நிரப்பி கும்பத்தை அலங்கரித்து கும்பத்தில் வருணன் விஷ்ணு இவர்களை ஆவாஹநம் செய்து புருஷம் புண்டரீகம் இதி த்யாநமும் செய்து பூஜித்து — — — அஸ்மிந் ருதுசாந்தி ஜப ஹோம கர்மணி ருத் விஜம் த்வாம்வ்ருணே இதி ப்ராம்ஹணர்களை வரித்து — — — — ஸர்வேப்யோ ப்ராம்ஹணேப்யோ நம: ருதுசாந்தி ஜப ஹோம கர்ம குருத்வம் என்று ப்ரார்த்தனை செய்ததும் ப்ராம்ஹணர்கள் குர்ம: என்று பதில் சொல்லு வது.

பிறகு ஆசார்யன் கும்பத்தை தொட்டுக் கொண்டு ப்ராம்ஹணர்களுடன் ஓம் நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி । தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத் ॥ என்று வைஷ்ணவ காயத்ரீ ஜபம் 1008 தடவையோ அல்லது 108 தடவையோ செய்வார். அதன் முடிவில் தத்ஸவிது: இதி காயத்ரீ ஒருதரம் ஜபித்து அக்நிமீளே இதி ஒரு ருக் இஷேத்வோர்ஜேத்வா இதி ஒரு அநுவாகம் அக்ந ஆயாஹி வீதய இதி ஒரு ருக் சந்நோ தேவீ இதி ஒரு ருக் இவற்றை ஜபித்து மேலே ஆபோஹிஷ்டா மயோபுவ இதி மூன்றும் ஹிரண்ய வர்ணா: சுசய: பாவகா இதி ஒரு அநுவாகம் யதத இத்யநுவாகம் பவமாந: ஸுவர்ஜந: இத்யநுவாகம் ஸஹஸ்ர சீர்ஷாபுருஷ: இத்யநுவாகம் விஷ்ணு ப்ரம்ஹ ருத்ர ஸூக்தங்கள் ஸ்ரீஸூக்தம் துர்க்கா ஸூக்தம் ருசாம் ப்ராசீ மஹதீ திக் உச்யதே என்ற அநுவாகமும் ஒரு முறை ஜபிக்கப்பட வேண்டும். இவ்விதம் ஜபம் முடித்து கும்பத்தின் வடக்கே தர்ப்பை மீது புது வஸ்த்ராபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட மனைவியை இடதுபுறம் அமர்த்திக் கொண்டு கிழக்கு முகமாக யஜமானன் உட்கார்ந்ததும் ப்ராம்ஹணர்களுடன் ஆசார்யர் வடக்கு முகமாக அமர்ந்து கும்ப தீர்த்தத்தை வேறு பாத்ரத்தில் எடுத்து கும்பத்தில் வைக்கப்பட்ட மாவிலை தர்ப்பை இவற்றால் ஆசீர்வாத மந்த்ரங்கள் படித்து அபிஷேகம் செய்வார். பிறகு கலச தீர்த்தத்துடன் சேர்க்கப்பட்ட வெந்நீரால் தம்பதி தைலாப்யங்கநம் (எண்ணெய்) செய்து கொண்டு நல்ல ஸ்நானம் (யதாசாரம்) செய்து அபிஷேக கால வஸ்த்ரங்களை களைந்து தம்பதி புதிய கோடி வஸ்த்ரம் தரித்து சந்தன குங்கும புஷ்பமாலை இவற்றை தரிக்க வேண்டும். களையப்பட்ட வஸ்த்ரம் ஆசார்யருக்கு கொடுக்கப்பட வேண்டும்.

பிறகு ஆசார்யன் முறைப்படி பஞ்ச கவ்யம் தயாரித்து யஜமான பத்நிக்கு கொடுப்பார். அவளும் இம் மந்த்ரம் சொல்லி யத் த்வகஸ்திகதம் பாபம் தேஹேதிஷ்டதி



மாமகே । ப்ராசநாத் பஞ்ச கவ்யஸ்ய தகத் யக்நிரிவ இந்தநம் । என்று வாங்கி சாப்பிட்டு ஆசமநம் செய்வாள்.

பிறகு ஆசார்யனும் ப்ராம்ஹணர்களும் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட லௌகிகாக்நியில் பரிஸ்தீர்ணம் செய்து மயிக்ருண்ஹாமி முதல் ப்ரஸாதிந்யை தேவ்யை ஸ்வாஹா இத்யந்தம் செய்து வ்யாஹ்ருதி ஹோமம் செய்து ப்ரதாந ஹோமம் ॥ விஷ்ணு ஸூக்தத்தால் விஷ்ணுவை குறித்து 108 தடவை பலாச (புரசு) ஸமித்தாலோ அரசு ஸமித்தாலோ ஆஹுதி செய்வார்கள். ப்ரம்ஹ ஸூக்தத்தால் ப்ரம்ஹாவை குறித்து 108 தடவை க்ருஹத்தில் ஸித்தமாக்கிய அன்னத்தை கொண்டு ஆஹுதி செய்வார்கள். ருத்ரஸூக்தத்தால் ருத்ரனை குறித்து 108 தடவை ஆஜ்யத்தால் ஆஹுதி செய்வார்கள். க்ருத ஸூக்தம் ஒவ்வொரு ருக்குக்கும் ஒருமுறை ஆயுஷ்ய தேவதையை குறித்து ஆஜ்ய ஹோமம் செய்வார். எந்த நக்ஷத்ரத்தில் முதல் ருது தர்சநம் நேர்ந்ததோ (அது தெரியவில்லையானால்) பெண்ணின் நக்ஷத்ரம் அந்த நக்ஷத்ரத்தின் அஷ்ட வாக்யம் கொண்ட மந்த்ரத்தால் 28 தடவை ஸமித் சரு ஆஜ்யம் இவற்றால் ஆஹுதி செய்வார்கள். பிறகு த்ரயம்பகம் யஜாமஹே என்ற ருக்கினால் 108 தடவை திலம் ஆஜ்ய ஆஹுதி செய்வார்கள். மேலே இமம்மே வருண இத்யாதி ராஷ்ட்ர ப்ரத் வரை செய்து ஹுதசேஷ த்ரவ்யேண ஸ்விஷ்டக்ருதம் ஆஹுதி செய்து மேலே பரித்யஞ்ஜநாதி ஸம்ஸ்த்தா ஜபம் முடித்து பூர்த்தி செய்வார்.

பிறகு ப்ராம்ஹணர்களை பூஜித்து தக்ஷிணாதாநம் செய்து போஜநம் செய்வித்து அவர்களின் மங்களாசீர்வாதம் தம்பதி பெறுவார்கள்.

—o—

# ॥ கர்பாதாநம் ॥

[குறிப்பிட்ட ஒரு நல்ல இரவில் செய்ய வேண்டும்.]

காலை ஔபாஸநம் செய்த பிறகு தனது பத்நியுடன் யஜமாநன் ஆசமனம் ப்ராணாயாமம் செய்து தேசம் காலம் ப்ரார்த்தித்து — — — — அஸ்யா: மம பார்யாயா: ப்ரதி கர்ப ஸம்ஸ்காராதிசயத்வாரா அஸ்யாம் ஜநிஷ்யமாண ஸர்வ கர்பாணாம் பீஜ கர்ப ஸமுத்பவ ஏனோ நிபர்ஹண த்வாரா க்ஷேத்ர ஸம்ஸ்காரத்வாராச அத்ய கர்பாதாந ஸம்ஸ்காராக்யம் கர்ம கரிஷ்யே — — — — ததங்கபூதம் கணபதி பூஜநம் ஸ்வஸ்தி புண்யாஹவாசநம் நாந்தீ ச்ராத்தம் ச கரிஷ்யே. இதி ஸங்கல்ப்ய யுக்த ரீதியில் செய்யவும். [நாந்தீ மறுநாள் காலை செய்வது ஒரு பக்ஷம்]. புண்யாஹ ஜலத்தினால் தம்பதிக்கு ப்ரோக்ஷணம்.

மாலை ஔபாஸநம். செய்து: இரவு குறிப்பிட்டதொரு நல்ல லக்நத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்ட பார்யையை அழகாக அலங்கரிக்கப்பட்ட அறைக்குள் யஜமானன் அழைத்துச் செல்ல இந்த ஒன்பது மந்த்ரங்களும். — — — ஓம் விஷ்ணும் யோநிம் கல்பயது த்வஷ்டா ரூபாணி பிகும்சது। ஆஸிஞ்சது ப்ரஜாபதி: தாதா கர்பம் ததாதுதே ॥ 1 ॥ கர்பம் தேஹி ஸிநீவாலி கர்பம் தேஹி சரஸ்வதி। கர்பம் தே அச்விநாவுபா வா தத்தாம் புஷ்கரஸ்ரஜௌ ॥ 2 ॥ ஹிரண்யயீ அரணீயம் நிர்மந்ததோ அச்விநா। தந்தே கர்பகும் ஹவாமஹே தசமாஸ்யாய ஸூதவை ॥ 3 ॥ யதாக்நி கர்பா ப்ருதிவீ த்யௌ: யதா இந்த்ரேண கர்பிணீ। வாயு: யதா திசாம் கர்ப ஏவம் கர்பம் ததாமிதே ॥ 4 ॥ யஸ்ய யோநிம் ப்ரதிரேதோ க்ருஹாண புமாந் புத்ரோ ஜாயதாம் கர்போ அந்த:। தம் மாதா தச மாஸோ



பிபர்து ஸஜாயதாம் வீரதம: ஸ்வாநாம் ॥ 5 ॥ ஆதே கர்போ யோநிமேது புமாந் பாண இவேஷுதிம்। ஆவீரோ அத்ர ஜாயதாம் புத்ர: தே தச மாஸ்ய: ॥ 6 ॥ கரோமி தே ப்ராஜா பத்ய மா கர்போ யோநி மேதுதே। அநூந: பூர்ணோ ஜாயதாம் அநந்தோ ச்லோணோ பிசாசதீர: ॥ 7 ॥ யாநி ப்ரபூணி வீர்யாணி ருஷபா ஜநயந்தி ந:। தை: த்வம் கர்பிணீ பவ ஸஜாயதாம் வீரதம: ஸ்வாநாம் ॥ 8 ॥ யோ வசாயாம் கர்போ யச்ச வேஹதீந்த்ர ஸ்தம் நிததே வநஸ்பதௌ। தேந த்வம் கர்பிணீ பவ ஸா ப்ரஸூ: தேநுகா பவ ॥ 9 ॥

பிறகு படுக்கையில் உட்கார்ந்து பத்நியின் இடுப்பை சுற்றி அணைத்துக் கொண்டு சொல்லவும் — — — — ஸந்நாம்ந: ஸகும் ஹ்ருதயாநி ஸந்நாபி: ஸந்த்வச:। ஸந்த்வா காமஸ்ய யோக்த்ரேண யுஞ்ஜாநி அவிமோசநாய ॥ மாமநுவ்ரதா பவ ஸஹசர்யா மயா பவ। யாதே பதிக்நீ தநூர்ஜாரக்நீம் த்வேதா கரோமி சிவா த்வம் மஹ்ய மேதிக்ஷுர்பவிர் ஜாரேப்ய: ॥ பிறகு அவளது முகத்துடன் தனது முகத்தை சேர்த்து வைத்துக் கொண்டு சொல்லுவது — — — — மது ஹே மத்விதம் மது ஜிஹ்வாமே மது வாதிநீ। முகே மே ஸாரகம் மது தத்ஸுவநம் க்ருதம் ॥ சாக்ர வாககும் ஸம்வநநம் யந்நதீப்ய உதாஹ்ருதம்। யத்யுக்தோ தேவ கந்தர்வ: தேந ஸம்வநிநௌ ஸ்வக: ॥ பிறகு பூ: ப்ரஜாபதிநாத்யருஷபேண ஸ்கந்தயாமி வீரம் தத்ஸ்வ [பார்யையின் பெயர்] புவ: ப்ரஜாபதிநாத்ய ருஷபேண ஸ்கந்தயாமி வீரம் தத்ஸ்வ [பார்யையின் பெயர்] ॥ ஸுவ: ப்ரஜாபதிநாத்யருஷபேண ஸ்கந்தயாமி வீரம் தத்ஸவ [பார்யையின் பெயர்] ॥ பிறகு [ஆசீர்வசந மந்த்ரம்] ஓம் நேஷ்ட: பத்நீமுதாநயேத்யாஹாக்நீ தேவநேஷ்டரி ரேதோ தததி நேஷ்டா பத்நியா முத்காத்ரா ஸங்க்யா பயதி ப்ரஜாபதிர்வா ஏஷ யதுத்காதா ப்ரஜாநாம் ப்ரஜநநாயாப உபப்ரவர்தயதி ரேத

ஏவ தத்ஸிஞ்சத்யூருணோப ப்ரவர்தயத்யூருணா ஹிரேத: ஸிச்யதேநக்நம் க்ருத்யோரு முப ப்ரவர்தயதி யதாஹி நக்ந ஊருர்பவத்யத மிதுநீ பவ தோ தரேத: ஸிச்யதேத ப்ரஜா ப்ரஜாயந்தே ॥

— o —

## ॥ பும்ஸவந ப்ரயோக: ॥

கர்பம் தரித்த மூன்றாவது மாதத்தில் சுக்ல பக்ஷத்தில் புனர்வஸு புஷ்ய அபிஜித் ஹஸ்த ப்ரோஷ்டபாத் அநுராதா அச்விநீ மூல ச்ரவண ரேவதீ ரோஹிணீ ம்ருக ஸம்ஜ காந்யதமே பும் நக்ஷத்ரே பும்ஸவநம் கார்யம்.

காலை ஔபாஸநம் செய்து । கர்த்தா கிழக்கு முகமாக உட்கார்ந்து தனது வலப்புறம் பார்யையை உட்கார்த்தி ஆசமநம் ப்ராணாயாமம் செய்து தேசம் காலம் ப்ரார்தித்து — — — மம அஸ்யாம் பார்யாயாம் வித்யமாந கர்பஸ்ய பும்ஸ்த்வ ப்ரதிபாதநத்வாரா பீஜகர்ப ஸமுத்பவ ஏனோ நிபர்ஹணத்வாரா க்ஷேத்ர ஸம்ஸ்காரத்வாராச ஸ்ரீபரமேச்வர ப்ரீத்யர்தம் பும்ஸவநாக்யம் கர்ம கரிஷ்யே । ததங்கம் கணபதி பூஜநம் புண்யாகவாசநம்ச கரிஷ்யே என்று ஸங்கல்பம் ॥ [முதல் நாள் காலை ப்ராம்ஹணர்களை சேர்த்து உதகசாந்தி நாந்திச்ராத்தம் புண்யாகவாசநம் ப்ரதிஸர பந்தநம் இவை செய்வது நல்லது. இயலா விட்டால் அன்று காலை கர்மா ஆரம்பிக்குமுன்பாகவும் செய்யலாம்].

ஔபாஸந அக்நி ப்ரதிஷ்டை செய்து பரிஸ்தீர்ணம் பரிஷேசநம் செய்து மயிக்ருண்ஹாமி இத்யாதி வ்யாஹ்ருதி



ஹோமம் முடிய செய்து ப்ரதாந ஹோமம் : — — — —
ஓம் தாதா ததாதுநோ ரயிமீசாநோ ஜகதஸ்பதி: । ஸந: பூர்ணேநவாவநத் ஸ்வாஹா । தாத்ர இதம் நமம ॥ தாதா ப்ரஜாயா உதராய ஈசே தாதேதம் விச்வம் புவநம் ஜஜாந । தாதா புத்ரம் யஜமாநாய தாதா தஸ்மா உஹவ்யம் க்ருதவத்விதேம ஸ்வாஹா । தாத்ர இதம் நமம ॥ தாதா ததாது நோ ரயிம் ப்ராசீம் ஜீவாது மக்ஷிதாம் । வயம் தேவஸ்ய தீமஹி ஸுமதிகும் ஸத்ய ராதஸ: ஸ்வாஹா । தாத்ர இதம் நமம ॥ தாதா ததாது தாசுஷே வஸூநி ப்ரஜா காமாய மீடுஷே துரோணே । தஸ்மை தேவா அம்ருதா: ஸம் வ்யயந்தாம் விச்வே தேவாஸோ அதிதி: ஸஜோஷா: ஸ்வாஹா । தாத்ர இதம் ந மம ॥ என்று இந்த நான்கு ஆஹுதி செய்த பிறகு அங்க ஹோமம் :- இமம்மே வருண, தத்வாயாமி த்வம்நோ அக்நே, ஸத்வந்நோ அக்நே, த்வமக்நே அயாஸி, ப்ரஜாபதே என்ற ஆஹுதிகள் செய்யவும். மேலே உப ஹோமம், ஜயாதி.

[அங்க ஹோமம்; உபஹோமம் ஜயாதி இவற்றை ஸூத்ர ப்ரயோகம் முதல் பாகம்-தமிழ்-47 பக்கம் முதல் 53 பக்கம் வரை காணலாம்].

பிறகு தேசம் காலம் ப்ரார்த்தித்து - மம தர்ம பத்நியா: பும்ஸவந கர்மாங்கம் அந்ந ஹோமம் கரிஷ்யே இதி ஸங்கல்பம் செய்து முறைப்படி த்ரிவ்ருதந்நம் சேர்த்து செய்யவும். இங்கு புண்யாகவாசநம் உண்டு. மேலே பரிஷேசக விஸர்காந்தம் செய்து அக்நிகார்யம் பூர்த்தி செய்யவும்.

பிறகு கர்த்தா அக்நிக்கு மேற்கே மேலே வெள்ளை வஸ்த்ரத்தால் வட்டமாக கட்டப்பட்ட விதானத்தின் கீழ் பத்நியை கிழக்கு முகமாக உட்கார்த்தி அவளுடைய வலது

கையில் ஒரு யவை (தான்ய்ம்) வைக்கவும். வ்ருஷாஸி என்று ॥ பிறகு யவையின் வலது இடது புறங்களில் ஒவ்வொரு கடுகு வைக்கவும். ஆண்டௌ ஸ்த என்று । அதன் மீது பசுந்தயிர் நெய் சேர்க்கவும். ச்வா வ்ருத்தத் - என்று । பிறகு மந்த்ரமின்றி அவளைச் சாப்பிடச் செய்ய வும். பிறகு அவள் சுத்த ஆசமநம் செய்த பின்பு அவளுடைய வயிற்றை யஜமாநன் கைகளினால் தடவிக் கொடுக்க ------ அபிஷ்ட் வாஹம் தசபிரபி ம்ருசாமி தச மாஸ்யாய ஸூதவை - என்று ॥

பிறகு ஆலம் மொட்டு நசுக்கப்பட்டு கிடைத்த ரஸத் துடன் நெய் சேர்த்து தனது தொடையில் அவளது தலையை வைத்து மெள்ள படுக்கச்செய்து அவளுடைய வலது நாசித்வாரத்தில் மந்திரமின்றி தெளிக்கவும். பிறகு விபூதி தரித்து பத்து ப்ராம்ஹணர்களுக்காவது போஜனம் செய்விக்கவும். தக்ஷிணை தாம்பூலம் கொடுத்து அவர்களின் ஆசிர்வாதம் பெறவும்.

கர்பம் பத்து மாதமும் ஸரிவர தரிக்கப்பட ----- ஈரக் கையினால் மந்த்ரம் சொல்லி நாபியின் மேல் ப்ரதேசத்தை மூன்று முறை தடவவும் ----- பராஞ்சம் த்வா நார் வாஞ்சம் த்வஷ்டா பத்நாது பந்தநே । ஸருதூநுபவேச்ய தசமாஸோ அவீரஹ - என்று ॥

—*—

## ॥ ஸீமந்தோந்நயந ப்ரயோக: ॥

கர்ப்பம் தரித்த நான்காவது ஆறாவது எட்டாவது அல்லது ஒன்பதாவது மாஸம் சுக்ல பக்ஷத்தில் ஞாயிறு வியாழன் வெள்ளி கிழமைகளில் புனர்வஸு புஷ்ய அபிஜித்



ஹஸ்த ப்ரோஷ்டபத அநுராதா அச்விநீ மூல ச்ரவண ரேவதீ ரோஹிணீ ம்ருகசீர்ஷம் போன்ற ஆண் நக்ஷத்ரங் களின் மத்தியில் உள்ள இருபாதங்களில் ஒன்றில் ஷஷ்டி அஷ்டமி த்வாதசி சதுர்தசி அமாவாஸை போன்ற திதிகளைத் தவிர ஒரு சுப தினத்தில் நல்ல லக்னத்தில் இக் கர்மா செய்ய உசிதம் ॥

யஜமானன் அன்று காலை நித்ய கர்மானுஷ்டானங் களை முடித்துக் கொண்டு சுப வஸ்த்ரத்தால் அலங்கரிக்கப் பட்ட பீடத்தில் கிழக்கு முகமாக தானும் தனது வலப்புறம் தன் பார்யையும் உட்கார்ந்து ஆசமனம் ப்ராணாயாமம் செய்து தேசம் காலம் ப்ரார்த்தித்து ------ மமாஸ்யாம் பார்யாயாம் வித்யமாந கர்பஸ்ய பைஜிக கார்பிக தோஷ பரிஹாரத்வாரா க்ஷேத்ர ஸம்ஸ்கார த்வாரா ச ஸ்ரீ பரமேச் வர ப்ரீத்யர்தம் ஸீமந்தோந்நயநாக்யம் கர்ம கரிஷ்யே ததங்கம் கணபதி பூஜநம் புண்யாகவாசநம் உதக சாந்தி கர்ம நாந்தீ ச்ராத்தம்—ப்ரதிஸர பந்தநம் ச கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய யுக்த ரீதியில் செய்யவும்.

ஔபாஸந அக்நி ப்ரதிஷ்டை செய்து வ்யாஹ்ருதி ஹோமம் முடிய செய்து ப்ரதாந ஹோமம் (பும்ஸவநம் பக்கம் 79-ல் உள்ளபடி) தாதா ததாது நோ ரயிம் இத்யாதி நான்கு ஆஹுதி செய்து இமம் மே வருண இத்யாதி ப்ரம்ஹோத்வாஸநம் வரை செய்து ஸங்கல்பம் செய்து த்ரிவ்ருதந்ந ஹோமமும் செய்து புண்யாகவாசன ஜபம் செய்த பிறகு ஸம்ஸ்தா ஜபாந்தம் செய்து அக்நி கார்யத்தை பூர்த்தி செய்யவும்.

பிறகு அக்நியின் மேற்கு புறம் முன்மாதிரி கட்டப் பட்ட மண்டல விதானத்தின் கீழே பத்நியை கிழக்கு முகமாக உட்கார வைத்து பன்றிமுள்ளை அத்திக் கொத்துடன் சேர்த்து வைத்துக் கொண்டு அவளுக்கு

எதிரில் மேற்கு முகமாக தான் நின்று கொண்டு (ஸீமந்தம்) செய்வது. அவளது லலாடதேசம் ஆரம்பித்து கேசத்தை இருபுறமும், பிரிப்பது ------ ஓம் பூர்புவ: ஸுவ: । ராகா மஹமும் ஸுஹவாகும் ஸுஷ்டுதீ ஹுவே ச்ருணோது ந: ஸுபகா போத துத்மநா ॥ ஸீவ்யத்வப: ஸுச்யாச்ச்சித்யமாநயா ததாது வீரகும் சத தாய முக்த்யம் யாஸ்தே ராகே ஸுமதய: ஸுபேசஸோ யாபிர் ததாஸி தாசுஷே வஸூநி । தாபிர் நோ அத்ய ஸுமநா உபாகஹி ஸஹஸ்ர போஷகும் ஸுபகே ரராணா: — என்று । பிறகு காயதம் செய்ய மந்த்ரம் ----- ஸோம ஏவா நோ ராஜேத் யாஹுர் ப்ராம்ஹணீ: ப்ரஜா விவ்ருத்த சக்ரா ஆஸீநாஸ் தீரே துப்யம் (கங்கே) । விச்வா உதத்வயா வயம் தாரா உதந்யா இவ ॥ அதிகாஹே மஹித்விஷ: — என்று. பிறகு ப்ராம்ஹண போஜனம் ஆசீர்வசநம்.

—o—

## ॥ ஸுக ப்ரஸவம் ஆவதற்கு ॥

பத்நியின் தலையில் உதகும்பம் வைத்து மந்த்ரம் இன்றி வயிற்றில் ஜலம் தெளித்து ஈரக்கையினால் நாபியின் கீழ் புறமாக மூன்று தரம் மந்த்ரம் சொல்லி தடவிக் கொடுக்கவும் —- யதைவ வாயு: பவதே யதா ஸமுத்ர ஏஜதி । ஏவம் தே கர்ப ஏஜது ஸஹ ஜராயுணாவஸர்பது என்று.

